யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30



இடியுடன் கூடிய மழை
28^C 24^C

உதயன்
UTHAYAN - A Lively National Tamil Daily
சுடர்: 29 கதிர்: 014 வள்ளுவர் ஆண்டு: 2044 கார்த்திகை 24, செவ்வாய் 10.12.2013




காங்கிரஸின் தோல்வி ஆறுதல் கொடுக்கிறது



பக்கம் 07
வென்றது போராட்டம்



பக்கம் 22
மேரிஸ், நீக்கிலஸ், அன்ரனிஸ், றோயல் நேற்றைய ஆட்டங்களில் கோல் மழை



பக்கம் 23
சர்ச்சையைக் கிளப்பிய முரளி கார்த்திக்


# சம்பந்தன் – அகாஷி இன்று முக்கிய பேச்சு

## கொழும்பிலுள்ள ஜப்பான் தூதரகத்தில்

கொழும்பு, டிசெம்பர் 10
இலங்கையில் போரின் பின்னரான புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக நேற்றுமுன்தினம் இரவு கொழும்பு வந்த இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவுக்கும் இடையில் இன்றிரவு முக்கிய சந்திப்பு இடம்பெறவுள்ளது.





கொழும்பிலுள்ள ஜப்பான் தூதுவர் இல்லத்தில் இன்றிரவு 7.30 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெறும்.
இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் சம்பந்தனுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.
இந்தச் சந்திப்பில் தமிழர் தாயகப் பகுதிகளில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அரசின் அடக்குமுறைகள், இராணுவ மயமாக்கல், சிங்களக் குடியேற்றம், வலி.வடக்கு மீள்குடியமர்வு ஆகியவை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அகாஷிக்கு எடுத்து விளக்கும் என்று தெரியவருகிறது.
இந்தச் சந்திப்பில் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பங்கேற்கமாட்டார் என்று தெரியவருகிறது.
எனினும் அகாஷி வடக்கு முதலமைச்சரைச் சந்தித்துப் பேசுவாரா என்பது குறித்து உறுதியான தகவல் எதுவும் வெளியாகவில்லை.
இலங்கைக்கான ஜப்பானின் விசேட சமாதான பிரதிநிதியாக யசூசி அகாஷி கடந்த 2002 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டதன் பின்னர், 23 ஆவது தடவையாக இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## கிளிநொச்சியில் மலேரியா நோயாளி

கிளிநொச்சி,டிசெ. 10
கிளிநொச்சி பொது வைத்திய சாலையில் சிகிச்சைபெற்ற ஒருவருக்கு மலேரியா நோய் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி தருமபுரம் பகுதியைச் சேர்ந்த குறித்த நோயாளி கடந்தவாரம் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.
இதன்போது மேற்கொண்ட பரிசோதனைகளில் இருந்து மலேரியா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்துள்ளனர்.
மழை காலம் என்பதால் மக்களை அவதானமாக இருக்குமாறும், காய்ச்சல் ஏற்பட்டாலோ மலேரியா நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டாலோ உடனடியாக வைத்தி

21 ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமை தினமான இன்று உறவுகளைத் தேடிப் போராட்டம்

### வடக்கில் நடத்துவதற்கு ஏற்பாடு

கொழும்பு, டிசெ. 10
சர்வதேச மனித உரிமைகள் தினமான இன்று வடக்கு, கிழக்கில் கவனவீர்ப்புப் போராட்டமும், கவனவீர்ப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளன.
காணாமற்போனோரைத் தேடியறியும் குழுவின் ஏற்பாட்டில் திருகோணமலை நகரில் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.
சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் காணாமற்போனோர் தொடர்பான விடயங்களை வலியுறுத்தியும், அவர்களுக்கு நீதி கோரியும் ஜனநாயக ரீதியில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
திருகோணமலை நகர மத்திய பஸ் நிலையத்துக்கு அருகில் இன்று முற்பகல் 11 மணியளவில் இந்தப் போராட்டம் ஆரம்பமாகும் என்றும், இதில் கிழக்கு

21 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி மஹிந்தவுடன் அகாஷி நேற்றுச் சந்திப்பு



கொழும்பு,டிசெ 10
இலங்கை வந்துள்ள ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷிக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.
அலரி மாளிகையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.
இந்தச் சந்திப்பின் போது கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்வைத்துள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், நல்லிணக்கச் செயல்முறை, இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான உறவுகள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இருவரும் கலந்துரை

21 ஆம் பக்கம் பார்க்க

## மாங்குளத்தில் பஸ் விபத்து பயணிகள் 38 பேர் காயம்



மாங்குளம், டிசெ. 10
வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த இ.போ.ச. பஸ் மாங்குளம் பனிக்கன்குளம் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் 38 பேர் காயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று பி.ப. 3.10 மணியளவில் நடைபெற்றுள்ளது.
சம்பவத்தில் காயமடைந்தவர்களில் 27 பேர் இராணுவத்தினரின் உதவியுடன் கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.
பனிக்கன்குளம் திருப்பத்தில் பஸ் திரும்ப முற்பட்டபோது வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்போது பஸ்ஸில் பயணித்த அனைவரும் காயமடைந்துள்ளனர்.
சம்பவ இடத்துக்கு விரைந்த மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் பஸ் சாரதியையும் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-6-422)

## வீட்டில் இருந்தோரை மிரட்டி பணம், நகைகள் கொள்ளை

### உடையார்கட்டில் சம்பவம்

கிளிநொச்சி, டிசெ. 10
வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தி விட்டு இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான நகைகள், பணம், கைத்தொலை பேசி என்பன கொள்ளையிடப்பட்ட சம்பவம் ஒன்று முல்லைத்தீவு உடையார்கட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

21 ஆம் பக்கம் பார்க்க

## பஸ்ஸில் கொள்ளை முயற்சி

கிளிநொச்சி, டிசெ. 10
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்றை மாங்குளம் காட்டுப்பகுதியில் இடைமறித்த மூவர் பயணிகளை மிரட்டி கொள்ளையிட முற்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்றிரவு 9.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

21 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நாவில் அரசை காப்பாற்ற 59 மில்லியன் ரூபா செலவு

### அதற்காகச் செயற்பட்டவர்களின் பெயர்களை வெளியிட்டால் ஆபத்தாம் - பீரிஸ்

கொழும்பு,டிசெ. 10
ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட இரு பிரேரணைகளின் போதும், இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்களின் பெயர் விவரங்களை வெளியிட்டால் அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.
இந்த ஆதரவுச் செயற்பாட்டுக்காக 59 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது என்றும் அரசு கூறியுள்ளது.
ஐக்கிய நாடுகள் சபையின் கடந்த இரு மனித உரிமைகள் கூட்டத் தொடர்களின் போதும், அமெரிக்க அரசினால் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

21 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரவெட்டி ஆலயத்தில் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ.10
கரவெட்டியில் உள்ள காளி கோயில் ஒன்றிலிருந்து 55 ஆயிரம் ரூபா பெறுமதியான பித்தளைப் பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸில் நேற்று திங்கட் கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காளிகோயில் பூசகர் அங்கு சென்ற போதே திருட்டு இடம்பெற்றமை தெரியவந்தது.

கோயில் கூரையைப் பிரித்து உள்ளே சென்று திருட்டு இடம் பெற்றுள்ளது. பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

அண்மைக் காலமாக குடா நாட்டு ஆலயங்களில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (த-4)



ஆனையிறவில் இரண்டாவது நினைவுத் தூபி ஒன்று துரிதகதியில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தப் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. போர் நினைவுச் சின்னமாகப் பேணப்படும் 'டாங்கி'யை தகர்த்த சிப்பாய் ஒருவரது நினைவுத் தூபியே இவ்வாறு அமைக்கப்பட்டு அடுத்த மாதம் அளவில் திறந்துவைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (ஐ)

## 48 சாரதிகள் கைது

கொழும்பு, டிசெ.10
கட்டுநாயக்க மற்றும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட 12 மணி நேர சோதனை நடவடிக்கையின் போது 48 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக அதிவேக நெடுஞ்சாலைப் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட 48 சாரதிகளில் 28 பேர் அதிவேகமாக வாகனத்தைச் செலுத்தியுள்ளனர் என்றும் அவர்களில் சிலரிடம் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வருமான வரி அனுமதிப் பத்திரம் ஆகியன இல்லை என்று அதிவேக நெடுஞ்சாலைப் பொலிஸார் தெரிவித்தனர். (த)

## யாழ்.ஆயரின் குருத்துவ பொன் விழா

வடமராட்சி, டிசெ.10
யாழ்.மறை மாவட்ட ஆயர் பேரருட் திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இம் மாதம் 21ஆம் திகதி சனிக்கிழமை தனது குருத்துவ வாழ்வின் 50 வருட நிறைவு பொன் விழாவைக் கொண்டாடுகின்றார்.

மன்னாரில் புதிய மறை மாவட்டம் உருவானபோது, அந்த மாவட்டத்தின் முதலாவது ஆயர் என்ற பெருமைக்குரியவர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

அவரது குருத்துவ பொன் விழாவை ஒட்டி அன்றைய தினம் யாழ்.மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. (த-8)

# ஐ.நாவில் இலங்கையை காக்க ஒத்துழையுங்கள்

### *அனைத்துக் கட்சிகளிடம் சஜித் கோரிக்கை*

கொழும்பு, டிசெ.10
நாட்டைப் பாதுகாப்பதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான அழுத்தங்களை வெற்றிகொள்ள அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்பும் அவசியம் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள் விவகார பிரச்சினைகளுக்கு உள்ளக ரீதியில் தீர்வு காணப்பட வேண்டும். சர்வதேசத்தில் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியாது. இதுவே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு.

எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் பாதகமான பல விளைவுகளை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும். சில வேளைகளில் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகளும் விதிக்கப்படலாம்.



இந்நிலையில் சர்வதேச சக்திகளின் அழுத்தங்களை முறியடிப்பதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் அவசியமானது. நாட்டின் வெளிவிவகார கொள்கைகள் திருப்தி தரும் வகையில் அமையவில்லை. வெளிவிவகாரக் கொள்கைகளின் காரணமாகவே சர்வதேச நாடுகள் இலங்கை விடயத்தில் தலையீடு செய்கின்றது.

இறுதிக் கட்டப் போரின் போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன என்று ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ ஆகியோர் கூட்டாக ஒப்புக் கொண்டமை நாட்டின் வெளிவிவகார கொள்கைகளில் முக்கிய திருப்பு முனையாக அமைந்தது.

பொதுநலவாய நாடுகளின் தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதி உறுப்பு நாடுகளின் இதயங்களை வென்றெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் புலம்பெயர் தமிழ் மக்கள் தொடர்பிலான விவகாரங்களுக்கு வெளிவிவகார அமைச்சில் தனியான ஓர் அலகு உருவாக்கப்பட வேண்டும் - என்றார். (த-10)

# இரண்டு விபத்துகளில் நான்கு பேர் படுகாயம்

வடமராட்சி, டிசெ.10
வடமராட்சிப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற இருவேறு விபத்துகளில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் நான்கு பேர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



நேற்று மாலை 5.30 மணிக்கு புறாப்பொறுக்கி வெள்ளை றோட் சந்தியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளாகின. இதில் உடுப்பிட்டியைச் சேர்ந்த இராசரத்தினம் ராகவன் (வயது 27) என்பவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை மாலை 6.30 மணியளவில் நெல்லியடி - கொடிகாமம் வீதியில் அரசடிச் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற டிப்பர் - ஓட்டோ விபத்தில் ஓட்டோ சாரதி உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

இதில் ஓட்டோ சாரதியான கரவெட்டி மேற்கைச் சேர்ந்த ஆண்டி சுந்தரம் (வயது 60), துன்னாலை தெற்கைச் சேர்ந்த இ.அப்புத்துரை (வயது 70) அவரது மனைவி அ.நேசமலர் (வயது 60) ஆகிய மூவரும் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துடன் தொடர்புடைய டிப்பர் வாகனச் சாரதி வாகனத்தை விட்டுத் தப்பியோடி விட்டார். இது தொடர்பான விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (த-8-4-422-400)

## இ.போ.சவுக்கு 200 பஸ்கள்

கொழும்பு, டிசெ.10
அடுத்த வருடம் ஜனவரி மாதம் நடுப்பகுதியில், அரச சேவையில் 200 பஸ்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

இதனை இலங்கைப் போக்குவரத்துச் சபையின் உப தலைவர் எல்.ஏ.விமலரத்ன தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டதற்கு அமைய, இந்த பஸ்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (த)

## ஒரே தினத்தில் தேர்தல் நடத்துக

### *பவ்ரல் கோரிக்கை*

கொழும்பு, டிசெ.10
எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்களை அடிக்கடி தனித்தனியாக நடத்துவதற்குப் பதிலாக ஒரே தினத்தில் நடத்துமாறு கோரி, அரசியல் கட்சி செயலாளர்களுக்கு பவ்ரல் அமைப்பு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றோகன ஹெட்டி ஆராய்ச்சி இந்தத் தகவலை வெளியிட்டார்.

தேர்தல்களைக் கட்டம் கட்டமாக நடத்துவதன் ஊடாக அதிக நிதி செலவிட வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார். ஜனநாயகத்தின் முறையான நிலைப்பாடு இதன் போது கிடைக்காது என்றும் றோகன ஹெட்டி ஆராய்ச்சி குறிப்பிட்டார். (த)

# வீட்டுக்குள் நுழைந்தவர்கள் கூரையைக் கழற்றி அட்டகாசம்

### *யாழ்.பொலிஸில் முறைப்பாடு*

யாழ்ப்பாணம், டிசெ.10
யாழ்.நல்லூர் பகுதியில் வீட்டில் 18 வருடங்களாகக் குடியிருக்கும் குடும்பத்தினரை வெளியேறுமாறு வற்புறுத்திய ஒருவர் நேற்று முற்பகல் குழுவாக அங்கு சென்று வீட்டின் கூரைகளை கழற்றியதோடு சிலவற்றை உடைத்தும் அட்டகாசம் செய்துள்ளார்.

பொலிஸார் தலையிட்டு அதனைத் தடுத்து நிறுத்தினர். மனித உரிமைகள் ஆணைக்குழு இதில் தலையிட்டதனால் அது தொடர்பில் பொலிஸார் முறைப்பாட்டைப் பதிவு செய்தனர்.

நல்லூரில், நாவலர் வீதியில் உள்ள வீடு ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

அரியாலையைச் சேர்ந்த குறித்த குடும்பத்தினர் 18 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்வின் போது அரியாலையிலிருந்து இடம்பெயர்ந்து நல்லூரில் உள்ள குறித்த வீட்டில் குடியேறியுள்ளனர். அந்த வீடு வைத்தியர் ஒருவருடையது. குறித்த வைத்தியரே அவர்களை அந்த வீட்டில் குடியிருத்தியிருந்தார். பின்னர் அவர் வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டார்.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்த அந்த வைத்தியர் அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு கூறியுள்ளார். மாற்று இடம் அந்தக் குடும்பத்தினருக்கு கிடைக்கவில்லை. இதனால் அந்தக் குடும்பத்தினர் வெளியேற மறுத்த நிலையில் குறித்த மருத்துவர் நேற்று முற்பகல் சுமார் 20 பேருடன் அந்த வீட்டுக்குச் சென்று கூரைகளைப் பிடுங்கியுள்ளார். அங்கு குடியிருந்தவர்கள் பொலிஸாருக்கு அது தொடர்பில் எடுத்துக் கூறியதையடுத்து பொலிஸார் அங்கு சென்று கூரைகளைக் கழற்றியவர்களை வெளியேற்றினர்.

இது தொடர்பில் முறைப்பாடு செய்யுமாறு பொலிஸார் கூறியமையால் அவர்கள் பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்யச் சென்றனர். குறித்த மருத்துவரும் அங்கு சென்றமையால் முறைப்பாட்டை பதிவு செய்யாமல் அவர்களைப் பொலிஸார் திருப்பி அனுப்பி விட்டனர்.



அந்த வீட்டுடன் கூடிய காணி மருத்துவருடையது என்ற காரணத்தினால் பொலிஸார் முறைப்பாடு பதிவு செய்ய மறுத்துள்ளனர்.

இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. ஆணைக்குழு இது குறித்து அறிவுறுத்தியமையால் பின்னர் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இவை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுக்க இரு தரப்பையும் வேறு ஒரு தினத்துக்குப் பொலிஸ் நிலையம் வருமாறு கூறியுள்ளனர். (த-4-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கட்டணம் செலுத்தாதோர் இழந்தனர் மின்சாரத்தை


வடமராட்சியில் மின் கட்டணத்தை தொடர்ச்சியாக செலுத்தாதோரின்மின்இணைப்புக்கள் அனைத்தும் நேற்று முதல் துண்டிக்கப்பட்டு வருவதாக வடமராட்சி மின்சார சபையின் மின் அத்தியட்சகர் க.இராஜேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வடமராட்சிப் பிரதேசத்தில் ரூபா பத்தாயிரத்துக்கு மேல் மின் கட்டணம் செலுத்தவேண்டிய 700 பேருக்கு மேல் அதனைச் செலுத்தாமல் உள்ளனர். அவர்களின் மின் இணைப்புகள் யாவும் துண்டிக்கப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் நேற்று நெல்லியடிப் பகுதியில் மின் துண்டிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மின் கட்டணத்தைச் செலுத்துமாறு சிவப்பு அட்டை அனுப்பியும் பலர் பணம் செலுத்தாமல் உள்ளனர். எனவே இன்று முதல் தமது கட்டணத்தை மக்கள் வங்கியில் செலுத்துவதால் மின் துண்டிப்பிலிருந்து தவிர்த்துக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ-422)

# வைத்திய அதிகாரி பணிமனையில் டெங்கு பரவும் அபாயச் சூழல்





வவுனியா பிராந்திய வைத்திய அதிகாரிபணிமனையில்டெங்கு பரவும் அபாயச் சுற்றாடலாக உள்ளதாகவும் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படும் வகையில் குப்பை கூழங்கள் காணப்படு வதாகவும் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஏ-9 வீதியும் மன்னார் வீதியும் சந்திக்கும் இடத்தில் வவுனியா நகரில் இருந்து 500 மீற்றர் தொலைவில் வவுனியா பிராந்திய வைத்திய அதிகாரி பணிமனை அமைந்துள்ளது. கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள் மற்றும் சாதாரண பொதுமக்கள் எனப் பலரும் தினமும் வந்து செல்கின்ற அலுவலகமாகவும் இது காணப்படுகின்றது.

தேசிய ரீதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், வவுனியாவிலும் டெங்கு பரவும் அபாயம் உள்ளதாக சுட்டிக்காட்டி டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் குறித்த அலுவலகமே செயற்பட்டு வருகிறது. பொது மக்களின் வீடுகளில் நீர் தேங்கக் கூடிய வகையில் தாவரங்கள் நின்றால் கூட சிவப்பு நோட்டீஸ் ஒட்டப்பட்டு தண்டம் அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால் குறித்த அலுவலகத்தில் நீர் தேங்கக் கூடிய பொருள்கள் பரவலாகக் காணப்படுவதுடன் வடிகாலும் நீர் வழிந்தோட முடியாது அடைப்பட்டுக் காணப்படுகின்றது. இதனால் இங்கு நீர் தேங்கி நின்று டெங்கு பரவும் அபாயம் காணப்படுகின்றது. இது தவிர இந்த அலுவலக சுற்றுச் சூழலில் பரவலாக குப்பை கூழங்கள் காணப்படுகின்றன. இதனால் சுகாதாரம் சார் பிரச்சினைகளும் தொற்றுநோய்களும் ஏற்படக் கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் மக்கள் கூறுகின்றனர். (க-421)

## யாழ். திறந்த வெளியரங்கில் பாதீனியம் ஒழிப்பு

கொழும்புத்துறை, டிசெ.10

வடக்கு மாகாண விவசாய அமைச்சால் பிரகடனப்படுத்தப்பட்ட பாதீனிய ஒழிப்பு மாதத்தையொட்டி யாழ்.மாநகர சபை பாதீனிய ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

யாழ்.மாநகர சபை அதிகாரிகள், ஊழியர்கள் கூட்டாக இணைந்து யாழ்.நகரில் திறந்த வெளியரங்க வளாகத்தில் நிறைந்து காணப்பட்ட பாதீனியச் செடிகளைப் பிடுங்கி அழிக்கும் பணியில் நேற்று ஈடுபட்டனர்.

முன்னதாக யாழ்.பொலிஸ் நிலையச் சுற்றாடலில் பாதீனியம் அழிக்கப்பட்டதாகவும் தொடர்ந்து முற்றவெளிப் பகுதி மற்றும் பொது இடங்களில் உள்ள பாதீனி யச் செடிகளை அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் தமது காணிகள், சூழலில் காணப் படும் பாதீனி யச் செடிகளை அகற்றுமாறு பொதுமக்களை மாநகரசபை கேட்டுள்ளதாகவும் அதிகாரி யொருவர் தெரிவித்தார். (வ-135-7-17)

## ஒலிபெருக்கிப் பாவனையால் பரீட்சை எழுதுவோர் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.10

இந்து ஆலயங்களில் திருவெம்பாவை திருவிழா நடைபெறும் ஆலயங்களில் பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கிகளால் பரீட்சை களுக்குத் தயாராகும் மாணவர்கள் சிரமங்களை எதிர் நோக்குவதால் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சை முடிவடையும்வரை ஒலிபெருக்கிப் பாவனையை தடை செய்யுமாறு பொது மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளனர்.

> “ – ”
> திரு வெம்பாவை திருவிழாக் காலத்தில் ஒலிபெருக்கிப் பாவனை அதிகரித்துள்ளது.

கடந்த 21 தினங்களாக பிள்ளையார் பெருங்கதை படிப்பின்போது ஆலயங்கள் சிலவற்றில் ஒலிபெருக்கி பயன்படுத்தப்பட்டதால் ஆண்டிறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்கினர். இதனைத் தொடர்ந்து நேற்றுமுதல் இந்து ஆலயங்கள் பலவற்றில் திருவெம்பாவை திருவிழாக் காலத்தில் ஒலிபெருக்கிப் பாவனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன்கருதி ஒலிபெருக்கிப் பாவனையை ஆலயத்தினுள்மட்டும் கேட்கக்கூடிய விதத் தில் மட்டுப்படுத்துமாறு அறிவுறுத்தும்படியும் அவற்றை மீறும் ஆலயங்களில் ஒலிபெருக்கிப் பாவனையைத் தடை செய்யுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரி களைக் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது (வ-9)

# வட மாகாணத்தில் கல்வியின் சுதந்திரத்தைக் காப்பது அவசியம்

*வடக்கு விவசாய அமைச்சர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ.10

வடக்கு மாகாண ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் ஆளுநருக்கு அஞ்சி ஒடுகின்ற தன்மையே இதுவரை காலமும் இங்கு நீடித்தது. இப்போதும் இந்த நிலையில் மாற்றம் பெரிதாக ஏற்படவில்லை. வடக்கில் மாகாண அரசு அமைந்திருக்கும் சூழலிலாவது கல்வித்துறைக்குச் சுதந்திரம் கிடைப்பதை உறுதி செய்தாக வேண்டும் என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.



மன்னார் வெள்ளாங்குளம் அ.த.க.பாடசாலையின் 78 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் கடந்த சனிக்கிழமை, பாடசாலை அதிபர் திருமதி சரோஜினி ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் எல்லாத்துறைகளைப்போல கல்வியும் இராணுவ மயப்படுத்தப்படுகின்றது. அதிபர்களுக்கும், பல்கலைக்கழகப் புதுமுக மாணவர்களுக்கும், இராணுவ முகாம்களில் வைத்து தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்படுகின்றது.

மேலதிகாரிகள் இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு, கேள்விகள் எவையும் இல்லாமல் நிறைவேற்றுவதுதான் இராணுவத்தின் இயல்பு. இதனால், இராணுவ முகாம்களில் வழங்கப்படும் தலைமைத்துவப் பயிற்சி, தலைமைத்துவப் பண்புகளைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக தலைமைக்கு அடிபணிந்து போகும் மனோநிலையே உருவாக்கும்.

இதன்மூலம் இலங்கை அரசு நாடளாவிய ரீதியில் பொதுசன மனோநிலையைத் தன்னிடம் கேள்விகள் எவையும் கேட்காத ஒரு நிலைக்கு இட்டுச் செல்லவே விரும்புகிறது. ஆனால், ஏன், எதற்கு, எப்படி என்று கேள்வி கேட்பதை அடிப்படையாகக் கொண்ட கல்வித் துறைக்கு இந்தப்பண்பு முற்றிலும் எதிரானது. ஆசிரியம் என்பது கூலிக்கு மாரடிக்கும் தொழிலல்ல. இது உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்கும் கலை. கண்காணிப்பு,

> “ – ”
> மேலதிகாரிகள் இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு, கேள்விகள் எவையும் இல்லாமல் நிறைவேற்றுவதுதான் இராணுவத்தின் இயல்பு.

கண்டிப்பு போன்றவற்றின் மத்தியில் இது முளைவிட்டு வளரமாட்டாது. ஆனால் துரதிர்ஷ்ட வசமாக எமது சூழலில் ஆசிரியர்கள், அதிபர்களுக்கும், அதிபர்கள் வலயக் கல்வி அதிகாரிகளுக்கும், வலயக் கல்வி அதிகாரிகள் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக் கும், மாகாண கல்விப் பணிப் பாளர்கள் ஆளுநருக்கும் அஞ்சி ஒடுகின்ற தன்மையே இது வரை காலமும் இங்கு நீடித்தது.

தற்போதும் இந்த நிலையில் மாற்றம் பெரியளவில் ஏற்படவில்லை. வடக்கில் மாகாண அரசு ஒன்று அமைந்திருக்கும் சூழலிலாவது கல்வித்துறைக்குச் சுதந்திரம் கிடைப்பதை நாம் உறுதி செய்தாக வேண்டும்-என்றார். (வ-5)

## பள்ளியில் தங்கியுள்ள மக்களுக்கு தற்காலிக வீடு

அக்கராயன், டிசெ.10

கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயக் காணியில் குடியிருக்கும் குடும்பங்களை விரைவாக வேறு இடத்தில் குடியமர்த்தும் வகையில் தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாக அக்கராயன் கிராம அலுவலர் கு.துஸ்யந்தன் தெரிவித்தார்.

சோ ஆ நிறுவனத்தின் உதவியுடன் 7 தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அக்கராயன் ஆரம்ப வித்தியாலய பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் தொடர்ச் சியாக விடுத்த வேண்டுகோளை அடுத்து மேற்படி குடும்பங்கள் வேறொரு இடத்தில் குடியமர்த்தப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-18)

## மீள்குடியமர்வுக் கிராமங்கள் இருளில் மூழ்கிய நிலையில்

யாழ்ப்பாணம், டிசெ.10

இம்மாத இறுதியுடன் யாழ். குடாநாட்டில் அனைவருக்கும் மின்சாரம்கிடைக்கப்பெறும்என்று இலங்கை மின்சார சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் மீள்குடியமர்வுக் கிராமங்கள் பலவற்றுக்கு இன்னமும் மின் சாரம் வழங்குவதற்கான ஆரம்பக் கட்ட பணிகள் கூட முன்னெடுக்கப் படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மின்சார சபையால், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட அறிக்கையில் மேற்படி அறிவிப்பு உள்ளடக்கப்பட்டிருந்தது.

2009 ஆம் ஆண்டு யாழ். குடாநாட்டில் 60 சதவீதமான மக்களுக்கு மின்சாரம் வழங் கப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண் டின் 84 சதவீதமாகக் காணப்பட்டது. இந்த ஆண்டு டிசெம்பர் மாதத்துக்கு முன்பதாக யாழ். குடாநாட்டில் எல் லோருக்கும் மின்சாரம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதேவேளை, வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் 294.29 மில்லியன் ரூபா செலவில் 48 வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும், இதில் 33 வேலைத் திட்டங்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது. 3 வேலைத் திட்டங்கள் 50 சதவீதத்துக்கு குறைவான நிலையிலேயே முன்னெடுக்கப்பட்டு உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் இந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனைவருக்கும் மின்சாரம் வழங்கப்படும் என்று மின்சார சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-5)

## சட்டவிரோத மின்சாரம்; இருவருக்கு அபராதம்

வடமராட்சி, டிசெ.10

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற இருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தால் 70 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நெல்லியடிப் பொலிஸார் நடத்திய திடீர் சோதனையின் போது வீடுகளுக்கு சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற துன்னாலை, கரவெட்டி பிரதேச வாசிகள் சிக்கிக் கொண்டனர். இருவர் மீது பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் தனித்தனியாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

விசாரணையின் போது இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து குறித்த அபராதம் விதிக்கப்பட்டது. (வ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை என்பது கற்பனை உணர்வின் மொழியாகும்



உணர்வுகளின் வெளிப்பாடே கவிதை என்பர். கவிதை என்பது கற்பனை, உணர்ச்சி ஆகியவற்றின் மொழியாகும். கவிதை என்பது கடல்மடை திறந்ததுபோல் கனவேகத்தில் குதித்து ஓடிவரும் உணர்ச்சிப் பெருக்கு. கவிஞனின் உள்ளத்தில் இருந்து பொங்கி வழியும் உணர்ச்சியே கவிதையாகும். அவ்வுணர்ச்சியை அமைதியாக நினைவுக்குக் கொண்டு வந்து நெறிப்படுத்துவதிலிருந்து கவிதை தோற்றமுறு கிறது என்கிறார் வேர்ட்ஸ் வேர்த் என்னும் ஆங்கிலக் கவிஞர் என அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் குறிப்பிட்டார்.

அண்மையில் மன்னாரைச் சேர்ந்த ஜே. ஆர். மயூரன் எழு திய 'மனப்பூக்கள்' என்ற கவிதை நூல் வெளியீட்டு விழாவுக்கு தலைமை தாங்கி உரை நிகழ்த்தும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஓர் இலக்கியத்தை நன்கு சுவைப்பதற்கு அல்லது அதன் தரத்தை மதிப்பிடுவதற்கு அவ் விலக்கியத்தில் அமைந்துள்ள அறிவுக்கூறு இன்றியமையாததாகும்.

அறிவுக்கூறு என்பது வாழ்வியல் உண்மை, சீரிய கருத்து, உயர்ந்த நீதி நெறி போன்றவற்றைக் குறிக்கும். இவ்வறிவுக் கூற்றைக் கொண்டே சில இலக்கியங்களின் தகுதி மதிப்பிடப்படுகின்றது. கவிதை அடிப்படையில் வாழ்க்கையின் ஒரு திறனாய்வாகும். எவ்வாறு வாழவேண்டும் என்பது பற்றிய கருத்துக்களை ஆற்றலுடனும், அழகுடனும் விளக்கும் திறனைப் பொறுத்துக் கவிஞரின் புகழ் அமைந்துள்ளது என்றார்.

இந்த நிகழ்வில் வடமாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்து, அமைச்சர் பா.டெனீஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோகராதலிங்கம் சிறப்பு விருந் தினராகக் கலந்துகொண்டார். (ந-12)

## வீதிகளுக்கு பெயர் இல்லை வீடுகளைத் தேடி மக்கள் அவதி

வலி.தென் மேற்கு, டிசெ.10

வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள வீதிகளுக்கு பெயர்ப் பலகை பொறிக்கப்படாமையால் பொது மக்கள் குறித்த வீடுகளையோ, நபர்களையோ தேடிக் கண்டு பிடிக்க முடியாமல் திண்டாடுகின்றனர்.

எனவே, மக்களின் நலன் கருதி அனைத்து வீதிகளுக்கும் பெயர் சூட்டுமாறு உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும் சுதுமலை தெற்கு அம்பாள் சனசமூக நிலையத் தலைவருமான எஸ்.மனோகரன் பிரதேச சபையைக் கோரியுள்ளார்.

இருபத்தெட்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்ட வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள வீதிகளிலும் ஒரு சில வீதிகளைத் தவிர ஏனைய வீதிகளுக்கு பெயர் சூட்டப்படாததால் பொதுமக்கள் பெரும் சிரமங்களுக் குள்ளாகின்றனர்.

குறித்த நபர்களையோ, வீடுகளையோ கண்டுபிடிப்பதற்காக வீதி வீதியாக பெயர்கள் குறிப்பிடப்படாததால் ஊழியர்கள் உரியவர்களிடம் கடிதத்தை வழங்க முடியாமல் திண்டாடுகின்றனர். குறிப்பாக வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் பரவலாக எங்கும் வாழ்ந்து வருகின்றனர். அவர்களைத் தேடி வரும் உறவினர்கள் அலைந்து திரிகின்றனர். இதேவேளை சில வீதிகளுக்கிருந்த பெயர்களும் அகற்றப்பட்டுள்ளதால் மக்கள் மேலும் சிரமங்களுக் குள்ளாகின்றனர்.

எனவே, பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய வீதிகளுக்குப் பெயர்களை விரைவாகச் சூட்டுமாறு கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் பிரதேச சபையைக் கோரியுள்ளார். (வ-115)

## காணிச் சிக்கலை நிவர்த்திசெய்ய வடக்கு-கிழக்கில் விசேட திட்டம்

வடக்கு மற்றும் கிழக்கு வடமாகாணங்களிலுள்ள அரச காணிகள் சம்பந்தமாக எழுந்துள்ள சிக்கல்களை நீக்கி மக்கள் முகம்கொடுத்துள்ள சிரமங்களுக்குப் பரிகாரங்களைப் பெற்றுக்கொடுக்கும் விசேட செயற்றிட்டம் ஒன்று காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தினால் செயற் படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மக்களின் காணிச் சிக்கல்களைத் தீர்த்து வைத்து நிவாரணங்களை வழங்குவதற்காக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள இந்த விசேட திட்டத்தின் கீழ் பிரதேச செயலர் பிரிவுகள் மட்டத்தில் காணி ஆணையாளர் நாயகமான ஆர். பீ. ஆர். ராஜபக்ஷவின் நேரடி நெறிப்படுத்தலின் கீழ் செயற்படுத்தப்படுகிறது.

ஏற்கெனவே மக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதோடு அரச காணிகள் சார்ந்த சிக்கல்கள் தொடர்பாக படிவங்கள் இலக்கம் ஒன்றும் மேன்முறையீட்டு முறைப்பாடுகளுக்கு படிவங்கள் இலக்கம் இரண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்று காணி ஆணையாளர் அலுவலகம் தெரிவிக்கிறது. இதற்கமைய போர் இடம்பெற்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இரண்டாலும் அரச காணிகளைப் பெற்றுக் குடியிருந்துள்ள ஒருவர் காணி சம்பந்தப்பட்ட சிக்கலொன்றுக்கு முகம் கொடுத்திருப்பாரானால் அல்லது அந்தச் சிக்கலை பிரதேச செயலாளரிடம் முன் வைக்காது இருந்திருப்பாரானால் படிவம் இலக்கம் ஒன்றைப் பூரணப்படுத்தி காணிக்கு உரிய பிரதேச செயலகத்துக்குக் கையளிக்கப்பட வேண்டியுள்ளதாக காணி அலுவலகம் தெரிவிக்கிறது.

பிரதேச செயலகத்துக்கு காணிச் சிக்கல் முன்வைக்கப்பட்டு இது வரையிலும் காணிச் சிக்கல் தீர்த்து வைக்கப்படாதிருக்குமானால் அத்தகையோர் இல.2- படிவத்தைப் பூரணப்படுத்தி ஆர்.பீ.ஆர். ராஜபக்ஷ, காணி ஆணையாளர் நாயகம், காணி ஆணையாளர் திணைக் களம் "மிஹிகத்தமெதுர" இல.1200/6 ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு காணி ஆணையாளர் நாயகம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார். (ந-22)

## கூட்டமாகப் படுத்திருந்த மாடுகள் குடும்பஸ்தரின் உயிரைப் பறித்தன

*முள்ளியவளையில் பரிதாப சம்பவம்*

முள்ளியவளை, டிசெ.10

வீதியில் கூட்டமாகப்படுத்திருந்த மாடுகளுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

கடந்த 5 ஆம் திகதி காலை 7 மணியளவில் இறந்தவரான மனுவேல்பிள்ளை நாகலிங்கம் (வயது-53) மனைவி மற்றும் குழந்தையை ஏற்றியவாறு முல்லைத்தீவு-மாங்குளம் பிரதான வீதியில் இவர் சென்று கொண்டிருந்த போது முள்ளியவளை மாஞ்சோலை மருத்துவமனைக்கு முன்பாக வீதியில் படுத்திருந்த மாடுகள் திடீரென எழுந்து அங்குமிங்கும் ஓடின. இதனால் நிலை குலைந்த இறந்தவர் சென்ற மோட்டார் சைக்கிள் மாடுகளுடன் மோதிவிபத்துக்குள்ளானது.

இதில் இறந்தவருக்குத் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. மயங்கிய நிலையில் காணப்பட்ட அவர் உடனடியாக மாஞ்சோலை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனால் சிகிச்சைகள் பயனளிக்காத நிலையில் நேற்றுமுன்தினம் மதியம் 1 மணியளவில் இறந்துள்ளார்.

தலையில் ஏற்பட்ட உட்காயங்கள் காரணமாக இவர் இறந்ததாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது மனைவியும், குழந்தையும் உயிர் தப்பியுள்ளனர்.

முல்லைத்தீவு-மாங்குளம் பிரதான வீதியில் முள்ளியவளை ஆலடிச் சந்தியிலிருந்து மாஞ்சோலை வரையான மூன்று கிலோ மீற்றர் நீளமான பகுதியில் மாடுகள் கூட்டமாகப் படுத்துக்கிடப்பது வழக்கமாகும்.

சில தினங்களுக்கு முன்னர் இந்த மாடுகளின் மீது மோதியதால் மோட்டார் சைக்கிளில் சென்ற திருமணம் நிகழவிருந்த இளைஞரொருவர் படுகாயம் அடைந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## மழையில் நனையும் பஸ் பயணிகள்

அக்கராயன், டிசெ.10

கிளிநொச்சி நகரில் பஸ் நிலையம் அமைக்கப்படாமையால் மழையின் போது பயணிகள் நனைந்தவாறு அவலப்படுவதைக் காணமுடிகின்றது.

மீள்குடியமர்வின் பின்னர் அரச மற்றும் தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ள போதிலும் பயணிகள் பாதுகாப்பாகத் தங்கக் கூடிய வகையில் பஸ் நிலையம் ஒன்று இதுவரை அமைக்கப்படவில்லை. இதனால் கால்கடுக்கக் காத்து நின்று பயணிக்க வேண்டிய நிலையே இங்கு காணப்படுகின்றது.

மேலும் ஏற்கனவே வெயிலில் காய்ந்து அவலங்களை எதிர் கொண்ட பயணிகள் தற்போது மழையில் நனைவதைக் காண முடிகின்றது. வயோதிபர்கள், நோயாளர், குழந்தைகள் எனப் பலரும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

எனவே இனியும் தாமதிக்காது பஸ் நிலையம் ஒன்றை அமைத்து தமது அவலங்களுக்கு முடிவு கட்டுமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-18)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 13. 03. 1960 — மறைவு 10. 11. 2013

அமரர் குட்டிப்பிள்ளை அரசேஸ்வரன் (அரசு)

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (10.12.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்களை அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

56, மலர்மகள் வீதி, அரியாலை. குடும்பத்தினர்.


## கருத்தரங்கு

அச்சுவேலி. டிச.10.

பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்கு இன்று செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு வலிகிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை சிறப்புரை ஆற்றுவார். (ஓ-11)


PERSONAL CLASS & GROUP CLASSES

தரம் 6 - O/L வரையான மாணவர்களுக்கான

விஞ்ஞானம்

அனுபவமும் ஆற்றலும்மிக்க ஆசிரியரின் வழிகாட்டலில் குழு வகுப்புக்கள். 123/2, கோயில் வீதி, யாழ். மற்றும் 70, கச்சேரி நல்லூர் வீதியில் நடைபெறும்.

T.P:- 077 4598128


## விடத்தற்பளை வீதிக்கு விடிவு வருமா?

தென்மராட்சி, டிசெ.10

மிருசுவில் உசன் ஊடாக விடத்தற்பளைக்குச் செல்லும் வீதி சேதமடைந்துள்ளதால் வாகனங்களில் பயணிக்க முடியவில்லை என்று சாரதிகள் தெரிவித்தனர்.

குறித்த வீதியில் தினமும் நான்கு தடவைகள் இ.போ.ச, பஸ் தனியார் சிற்றூர்திகளும் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. அத்துடன் வேறு வாகனங்களும் போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றன. உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்களும், ஆசிரியர்களும் இவ்வீதியினையே பயன்படுத்தி வருகின்றனர். அண்மையில் பெய்த மழையினால் வீதியில் காணப்படும் குழிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் வாகனத்துக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வீதியினைப் புனரமைக்குமாறு இந்தப் பகுதி மக்கள் உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போதிலும் பயன் கிடைக்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது. (ந-9)


மரண அறிவித்தல்

திருமதி நல்லம்மா கணேசரத்தினம்



இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லம்மா கணேசரத்தினம் நேற்று (09.12.2013) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுபிள்ளை - சிவகாமிபிள்ளை தம்பதியரின் அன்புமகளும் கணேசரத்தினத்தின் அன்பு மனைவியும் இராசலட்சுமி, அமிர்தகௌரி, கதிர்காமசோதி (பிரான்ஸ்), பாலசுப்பிரமணியம், அகிலாண்டேஸ்வரி, ஜெகதீஸ்வரி (ஜேர்மனி), விக்கினராஜா (பிரான்ஸ்), செல்வராஜா, சிவகாமசுந்தரி, (பிரான்ஸ்) கலைவாணி (சுவிஸ்), ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (ஆசிரியர் / முள்ளியவளை வித்தியானந்தாகல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் இராசேந்திரம் (சண்முகம்), வசந்தகுமாரி (பிரான்ஸ்), விஜேந்திரன், தயாபரன் (ஜேர்மனி), இரங்கநாதன் (பிரான்ஸ்), இரவீந்திரன் (சுவிஸ்), ஜெயக்குமாரி (பிரான்ஸ்), மோகனராணி, தர்சிகா (ஆசிரியர் வியாவில் சைவ வித்தியாலயம் காரைநகர்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: செட்டி (மகன்), சண்முகம் (மருமகன்)

பரராசசேகரப்பிள்ளையார் கோவிலடி, இணுவில் மேற்கு.



மரண அறிவித்தல்

திருமதி கனகம்மா கிருஷ்ணசாமி



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகம்மா கிருஷ்ணசாமி நேற்று முன்தினம் (08.12.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகள் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (41069)(10.14)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



வருடா வருடம் அதிகரிக்கும் வன்முறைகளைக் கட்டுப்படுத்துங்கள்

# ஆடைகளைக் கையிலேந்தி நேற்று யாழில் வன்முறையை எதிர்த்துப் பெண்கள் போர்

யாழ்ப்பாணம், டிசெ.10
'சட்ட அமுலாக்கம் எங்கே, அதனை நடைமுறைப் படுத்துவோம்', 'வழங்கப்படும் தண்டனைகளால் குற்றங்கள் ஒழிக்கப்படல் வேண்டும்' உட்பட பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதி முன்பாக பெண்கள் அமைப்புகள் நேற்று கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

யாழ்.வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலடியில் கடந்த ஒக்ரோபரில் யோகராணி என்ற பெண் வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்ட நிலையில் சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள் ளார். அவர் தொடர்பான வழக்குயாழ். நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்த நிலையில் பெண்கள் அமைப்புகள் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

'19, 17 வயதுகளுடைய பெண்கள் அவர்களின் சகோதரிகளின் கணவரால் வன்புணர்வுக்கு உட்படுத்தப் பட்டனர், 45 வயதுப் பெண் அவரது கணவரால் பாலியல் வன்புணர்வுக்கு வற்புறுத்தப்பட்டார், மனநலம் பாதிக்கப்பட்ட பெண் இனந்தெரியாதவர்களால் வன்புணர்வுக்கு உட் படுத்தப்பட்டார், 16 வயதுச் சிறுமி ஆசிரியரால் பாலியல் தொந்தரவுக்கு உட்படுத்தப்பட்டார், வன்முறைக்கு உட் படுத்தப்பட்ட பெண்களின் ஆடைகள் எவ்வளவு போட் டாலும் நீதிக்குச் சமனாகாது தராசு, என் உரிமைகளை ஏன் நீங்கள் வன்முறைக்கு உட்படுத்து கிறீர்கள்?, பாலியல் வன்புணர் வுக் குற்றவாளிகள் சமூகத்துக்கு ஆபத்தான வர்கள், வாருங்கள் சமூக பொறுப்புடையவர்களாக மாறுவதற்கு, பாலியல் வன்புணர்வுக் கொலைகளை இல்லாமல் செய்வது எப்பொழுது, பாலியல் வன்புணர்வுக் குற்றவாளி களுக்கு தகுந்த தண்டனைவழங்குமாறுநீதிகோருகிறோம்' எனப் பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகை களை அவர்கள் ஏந்தியிருந்தனர்.


போராட்டத்தில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டிருந்தனர். கவனவீர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து அவர்கள் மகாத்மா காந்தி வீதி வழியாக யாழ்ப்பாணக் கல்லூரி வரை ஊர்வலமாகச் சென்று அங்கு இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டனர். (வ-4-21-17)

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்களில் சிலர், "தம்மை கூட்டம் ஒன்றுக்கு வருமாறும் மற்றும் சிலர் கருத்தமர்வு ஒன்றுக்கு வருமாறுமே கூறி அழைத்து வந்தனர். போராட்டம் நடத்துவதற்காக என்று கூறியிருக்கவில்லை" என்று தெரிவித்தனர். இது தொடர்பில் ஏற்பாட்டாளர்களுடன் தொடர்பு கொண்டபோது "நாம் அவ்வாறு தெரிவிக்கவில்லை. அந்தத் தகவலை பிறருக்குக் கூறியவர்கள் அவ்வாறு கூறியிருக்கலாம்" என்றனர்.

## புனித இயூஜின் பெயரில் ஆலயம்

கொழும்புத்துறை, டிசெ.10
அமலமரித் தியாகிகள் சபை நிறுவுநர் புனித இயூஜின்டி மசனெட்டின் பெயரில் அமைக்கப்பட்ட ஆலயம் கொழும்புத்துறையில் நேர்ந்தளிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

கொழும்புத்துறை அமலமரித் தியாகிகள் சபை குருமட வளாகத்தில் முன்னர் புனித சூசையப்பர் ஆலயம் அமைந்திருந்த இடத்தில் அமைக்கப்பட்ட குறித்த சபைக்குரிய கோயிலை கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை திறந்து வைத்தார். ஆலயத் திறப்பு விழா பெயர்க் கல்லை அமலமரித் தியாகிகளின் மறைபரப்புப் பணிக்கான ஜேர்மனிய நிதி திரட்டுப் பொறுப் பாளர் அருட்திரு அலோய் ரெள் சினர் அடிகள் திரைநீக்கம் செய்து வைத்தார். புனித இயூஜின் டி மசனட் பெயரில் வடபகுதியில் அமைக்கப்பட்ட முதலாவது ஆலயத் திறப்புவிழாவில் யாழ். மறை



மாவட்ட குருமுதல்வர் அருட்திரு யஸ்ரின் ஞானப் பிரகாசம் அடிகள், அமலமரித் தியாகிகள் சபையின் உலகத் தலைமை சபைத் திட்டப் பொறுப்பாளர் அருட்திரு ஜீவாபோல் அடிகள், மாகாண முதல்வர் அருட்திரு போல் நட்சேத்திரம் அடிகள், குருக்கள், கன்னியர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை திறந்து வைக்கப்பட்ட ஆலயத்தில் நடைபெற்ற முதலாவது திருப்பலியில் நான்கு அருட் சகோதரர்களின் நித்திய அர்ப்பண திருச்சடங்கு நடைபெற்றது.

வரதன்குருஸ், யேசுபாலன், டிலோசன் றஜீவ், யேசுராஜ் குருஸ் ஆகிய அமலமரித் தியாகிகள் சபை அருட்சகோதரர்கள் நித்திய அர்ப்பண வாக்குறுதிகளைத் தெரிவித்தனர். (வ-135)

## இருளின் மத்தியில் வைத்தியசாலை வீதி

வடமராட்சி, டிசெ.10
மந்திகையில் உள்ள பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை முன்பாக உள்ள வைத்தியசாலை வீதியில் பொருத்தப்பட்டுள்ள வீதி மின் விளக்குகள் ஒளிரவில்லை.

இந்த வீதியில் உள்ள வீதி மின் விளக்குகள் சில பழுதடைந் துள்ளமையால் இரவுவேளைகளில் வைத்தியசாலை வீதி இருளாகக் காட்சி அளிக்கின்றது.

இதனால் வைத்தியசாலைக்கு வந்து செல்லும் நோயாளர்கள், பார்வை யாளர்கள் மற்றும் இந்த வீதி ஊடாக ஏனைய இடங்களுக்குச்செல்லும் பயணிகள் உள்ளிட்டோர் இருளின் மத்தியில் பயணிப்பதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே பருத்தித்துறை பிரதேச சபை பழுதடைந்த மின் விளக்குகளைத் திருத்தி ஒளிரவிடுமா? எனப் பொது மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (வ-8)

## பாலியல் வன்முறைக்கான சாட்சிகளை உடன் திரட்டுக

### *பெண்ணுரிமைச் செயற்பாட்டாளர்கள் மாகாண சபை அவைத் தலைவருக்கு மனு*

யாழ்ப்பாணம், டிசெ.10
இலங்கையின் எந்த இடமானாலும் பாலியல் வன் முறைகள் இடம்பெற்றவுடன் துரிதமாக விசாரணைகள் இடம் பெற்று சாட்சிகள் சேகரிக்கப்பட வேண்டும்.

சந்தேகநபர்களுக்கு 14 நாள்கள் தடுப்புக்காவல் பிறப்பிக்கப்பட்டு பின்னர் சாட்சிகள் போதவில்லை என்று தள்ளுபடி செய்வதைத் தடுத்தல் வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை உள்ளடக்கிய மனுவொன்றை வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்திடம் பெண்ணுரிமைச் செயற்பாட்டாளர்கள் கையளித்தனர்.

இதேவேளை பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளுக்கு நீதி கோரிய பயணம், பெண்ணுரிமைச் செயற்பாட்டாளர்களால் மட்டக்களப்பு வாழைச்சேனையில் கடந்த 2 ஆம் திகதி ஆரம்பமாகியது. இந்தப் பேரணி அக்கரைப்பற்று, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, முகமாலை ஊடாக நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. பயணத்தின் இறுதி நிகழ்வு யாழ்.நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது. இதன்போது நடைபெற்ற கூட்டத்தில் குறித்த மனு கையளிக்கப்பட்டது.

பெண்ணுரிமைச் செயற்பாட்டாளர்களால் மட்டக்களப்பு வாழைச்சேனையில் கடந்த 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளுக்கு நீதி விரைந்து வழங்கப்பட வேண்டும். 1995 -1999 ஆம் ஆண்டு தண்டனைச் சட்டக் கோவைச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்ட பெண்கள், சிறுவர்கள் மீதான பாலியல் குற்றங்கள் புரிபவர்களுக்கு அதிக பட்ச தண்டனை வழங்குவதற்கான தண்டனை சட்டக்கோவையை நடைமுறைப்படுத்தவேண்டும். வடக்கு, கிழக்கு பகுதிகளில் பொலிஸ் நிலையங்களில் பெண்கள், சிறுவர் பிரிவுகள் பலப்படுத்தப்படுவதுடன் தமிழ் பேசும் பெண் பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்துவதை உறுதிப்படுத்த வேண்டும் - போன்ற பல் வேறு விடயங்கள் அதில் உள் ளடக்கப்பட்டுள்ளன. (வ-7)

## இடிக்கப்பட்ட குடியிருப்பு நினைவுச் சின்னம்



அச்சுவேலி, டிசெ.10
25 வருடங்களுக்கு முன்னர் முற்றாக அழிக்கப்பட்ட ஒரு குடியிருப்பின் கோரக்கொலைகளின் அடையாளக் குறியீடாக விளங்கிய புத்தூர் கிழக்கு கண்டிக் குடியிருப்பு நினைவுச் சின்னமும் அண்மையில் இடித்தழிக்கப்பட்டது.

புத்தூர் கிழக்கில் தேரம் பிள்ளையார் கோயிலுக்கு வடக்குப் பக்கத்தில் கண்டிக் குடியிருப்பு என்ற பெயருடன் ஏழைத் தொழிலாளர் குடும்பங்கள் ஐந்து வசித்து வந்தன. 1987 ஆம் ஆண்டு இந்திய அமைதிப் படையின் தாக்குதலுக்கு உள்ளாகி வீடுகள் அழிக்கப்பட்டதோடு வீடுகளில் குடியிருந்த 10 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். அவர்களின் சடலங்கள் வைக்கோல் குவியலில் போட்டு கருக்கப்பட்டன.

இந்தத் துயர நிகழ்வோடு அச்சமடைந்த மக்கள் அங்கிருந்து முற்றாக வெளியேறினர். அந்த இழப்பு மற்றும் படுகொலைச் சம்பவத்தை நினைவுகூரும் வகையில் தேரம் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் வீதியோரத்தில் நினைவுத் தூண் ஒன்று நிறுவப்பட்டிருந்தது. நினைவுத் தூண் 10 அடி உயரம் 8 அடி சுற்றுக் கொண்டதாக நிறுவப்பட்டு அதைச் சுற்றி வரபீடம் அமைக்கப்பட்டிருந்தது.

இந்த நினைவுத் தூண் அண்மையில் இடித்தழிக்கப்பட்டு இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. நினைவுத் தூண் இருந்த இடத்தில் தற்போது கற்குவியல் தான் காணப்படுகின்றது. (வ-11)

## பணமோசடி செய்த நபர்கள் கைது

காணிபெற்றுத்தருவதாக பணம் பெற்ற இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்துக்கு அருகில் உள்ள குடியிருப்பு இல்லாத காணிகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி பணம் பெற்ற நாவற்குழியைச் சேர்ந்த பெண் ஒருவரையும் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியைச் சேர்ந்த ஆண் ஒருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

சாவகச்சேரி பொலிஸார் குறித்த இருவரையும் நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய போது இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ‘மக்கள் எங்களை எச்சரித்துள்ளனர்’

*சட்டசபைத் தேர்தல் முடிவுகள் குறித்து ராகுல் காந்தி கருத்து*

புதுடில்லி, டிசெ.10

மக்கள் எங்களை எச்சரித்துள்ளனர். அது குறித்து நாங்கள் எதிர்காலத்தில் கவனம் எடுப்போம் என்று தெரிவித்துள்ளார் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி.

சட்டசபைத் தேர்தல் முடிவுகள் காங்கிரஸ் கட்சிக்குப் பாதகமாக அமைந்துள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

“இந்த முடிவுகள் எங்களுக்கு ஒரு தகவலைத் தந்திருக்கிறது. காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்டுள்ள தோல்வி குறித்து சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டியுள்ளது. மக்கள் எங்களுக்கு கடும் எச்சரிக்கையை விடுத்துள்ளனர். அவர்கள் தேவைக்கேற்ப நாங்கள் எங்களை மாற்றிக்கொள்வோம். குறுகிய காலத்தில் ஆம் ஆத்மி மீது மக்கள் பலரும் ஈடுபாடு கொண்டிருப்பதைப் பார்க்க முடிகிறது. அதன் மூலம் நாங்கள் பாடம் கற்கவேண்டியுள்ளது. மோடியை பொறுத்தவரையில் அவர் பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர். ஆனால் காங்கிரஸ் இந்தநாட்டின் கனவை நிறைவேற்ற பாடுபட்டு வருகிறது'' என்று தெரிவித்துள்ளார் ராகுல் காந்தி.



இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி, “தேர்தலில் பணியாற்றிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன். முடிவுகளை அடக்கத்துடன் ஏற்றுக் கொள்கிறோம். அதுகுறித்து முறையான ஆய்வு செய்யப்படும். எதிர்வரும் பொதுத்தேர்தல் மாநில அளவில் நடக்கும் தேர்தலில் இருந்து சற்று வித்தியாசமானது. தற்போது நடந்திருப்பது மாநில அளவிலான பிரச்சினைகள் குறித்தது.” என்று தெரிவித்துள்ளார். (ற)

# நரேந்திர மோடி அலையா? அப்படியொன்றும் இல்லை

*நாராயண சாமி கூறுகின்றார்*

புதுடில்லி, டிசெ.10

மாநில தேர்தல் முடிவுகளுக்கு நரேந்திரமோடி அலைதான் காரணம் என்பதெல்லாம் பொய் என்று தெரிவித்துள்ளார் மத்திய அமைச்சர் நாராயணசாமி.

புதுடில்லி, ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஷ்கார் ஆகிய 4 மாநில சட்டசபைகளுக்கு நடந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெரும் தோல்வியை சந்தித்து உள்ளது. அதுகுறித்துக் கருத் துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில்,



“அரசியல் கட்சிகளுக்கு வெற்றி தோல்வி சகஜம். எம்.ஜி.ஆர். கட்சி தொடங்கியதும் வெற்றி பெற்றார். தி.மு.க. 13 ஆண்டுகளுக்குப் பின்பே வெற்றி பெற்றது. தோல்வி அடைந்ததும் ஒரு கட்சியின் வரலாறு முடிந்து விட்டது என்பதை ஏற்க முடியாது. 2004, 2009ஆம் ஆண்டுகளில் பாரதிய ஜனதா கட்சி தோல்வியைத் தழுவியதை நினைவில் கொள்ளவேண்டும்.

தற்போதைய தேர்தலில் சத்தீஷ்கார், புதுடில்லி ஆகிய மாநிலங்களில் காங்கிரஸுக்கு வெற்றி கிடைக்கும் என்று எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்துள்ளோம். காங்கிரஸ் கட்சி என்றைக்கும் சிறிய, பெரிய கட்சிகளுக்கு உரிய மரியாதை அளித்து வருகிறது. புதுடில்லியில் ஆம் ஆத்மி கட்சிக்கு ஆதரவு அளிக்க மாட்டோம். பொறுப்பான எதிர்க்கட்சியாகச் செயற்படுவோம்.

மாநில தேர்தல், மாநிலப் பிரச்சினைகளை முன்வைத்து நடக்கும். மாநிலத் தேர்தல் முடிவுகள் நாடாளுமன்றத் தேர்தலில் எதிரொலிக்காது. 4 மாநில தேர்தல் முடிவுகளுக்கு நரேந்திர மோடி அலைதான் காரணம் என்பது சரியல்ல. சத்தீஷ்காரில் காங்கிரஸ் கட்சியும், புதுடில்லியில் ஆம் ஆத்மி கட்சியும் வெற்றி பெற்றுள்ளன. எனவே மோடி அலை என்பதெல்லாம் பொய்.” என்று தெரிவித்துள்ளார். (ற)

## மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்த பிரணாப், சோனியா பயணம்



புதுடில்லி, டிசெ.10

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா நினைவுப் பிரார்த்தனை நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக இந்திய ஜனாதிபதி பிரணாப்முகர்ஜி மற்றும் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி ஆகியோர் தென்னாபிரிக்கா பயணமாகியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை உயிரிழந்த நெல்சன் மண்டேலாவின் இறுதிச் சடங்குகள் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது. முன்னதாக இன்று ஜோகன்னஸ்பர்க் நகரில் உள்ள உதைபந்தாட்ட மைதானத்தில் மண்டேலாவுக்கான நினைவுச் சிறப்புப் பிரார்த்தனை நிகழ்ச்சி நடைபெறவிருக்கின்றது. அதில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தலைமையிலான இந்திய குழுவினர் பங்கேற்கின்றனர். அவர்கள் நேற்று இரவு தனி விமானம் மூலம் தென்னாபிரிக்கா பயணமாகினர்.

அந்தக் குழுவில் காங்கிரஸ் கட்சி தலைவர் சோனியா காந்தி, நாடாளுமன்ற எதிர்க்கட்சித்தலைவர் சுஷ்மா சுவராஜ், மத்திய அமைச்சர் ஆனந்த்சர்மா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் சீதாராம் யெச்சூரி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். அவர்கள் இன்று நடைபெறவிருக்கும் மண்டேலாவின் பிரார்த்தனை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

அதேவேளை, இந்திய மத்திய அரசு சார்பாக எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் 3 நாள்கள் நாடு முழுவதும் நெல்சன் மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (ற)

# காங்கிரஸின் தோல்வி ஆறுதல் கொடுக்கிறது

*ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவிப்பு*

சென்னை, டிசெ.10

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதற்கு முக்கிய பங்காளியாகச் செயற்பட்ட காங்கிரஸ் கட்சியின் படுதோல்வி கொதிக்கும் தமிழ் நெஞ்சங்களுக்குச் சிறிது ஆறுதல் தருகின்றது என்று தெரிவித்துள்ளார் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ.

நடைபெற்று முடிந்த 5 சட்டசபைத் தேர்தல்கள் முடிவுகள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடும்போது,



“ஐந்து மாநிலச் சட்ட சபைத் தேர்தல் முடிவுகளில் காங்கிரஸ் கட்சிக்கு வரலாறு காணாத படுதோல்வி கிடைத்து உள்ளது. தமிழக வாழ்வாதாரங்களுக்கு வஞ்சகமும், ஈழத்தமிழர் படுகொலையில் பங்காளியாகச்செயற்பட்டதுரோகத்தையும் எண்ணி நெஞ்சம் கொதித்திருக்கும் தமிழ் மக்களுக்கு காங்கிரஸ் கட்சியின் படுதோல்வி ஆறுதலளிக்கின்றது.

2014ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் நரேந்திர மோடி பிரதமர் ஆவார் என்பதற்கு இந்தத் தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கின்றன. புதுடில்லியில் ஆம் ஆத்மி கட்சி, ஓராண்டு காலத்திற்குள் மக்களின் மதிப்பையும், ஆதரவையும் பெற்று, மதிக்கத்தக்க இடங்களைப் பெற்று உள்ளமை பாராட்டுக்கு உரியதாகும்.

2014ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சிக்கு 'பூஜ்யம்'தான் மக்களின் தீர்ப்பாக இருக்கும்.” என்று தெரிவித்துள்ளார். (ற)

## நேருக்கு நேர் மோதின பஸ்கள் 6 பேர் சாவு: 20 பேர் படுகாயம்

*பீஹாரில் சம்பவம்*

பாட்னா, டிசெ.10

பீஹார் மாநிலத்தில் இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 20 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சரண் மாவட்டத்தில் உள்ள மார்கவுரா என்ற இடத்தில் சென்றபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பஸ், எதிரே வந்த பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதியது.

அதில் 6 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். 20 பேர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துக் குறித்த முதற்கட்ட விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ற)



நான்கு மாநில சட்டசபைத் தேர்தல்களில் பாரதிய ஜனதாக் கட்சியின் அமோக வெற்றியை வெடி கொளுத்திக் கொண்டாடும் ஆதரவாளர்கள்- இடம்: புதுடில்லி

## பா.ஜ.கவுடன் இணைகின்றன ம.தி.மு.க. பா.ம.க.?

சென்னை, டிசெ.10

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவுடன் ம.தி.மு.க. மற்றும் பா.ம.க ஆகிய கட்சிகள் கூட்டணி அமைத்துக் கொள்ளும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சட்ட மன்றத் தேர்தல்களில் பா.ஜ.க. அமோக வெற்றி பெற்றுள்ளதை அடுத்து நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கான வியூகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் ம.தி.மு.க. மற்றும் பா.ம.க. ஆகிய கட்சிகளைக் கூட்டணிக்குள் இழுக்கும் முயற்சிகளை தமிழருவி மணியன் மேற்கொண்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அது தொடர்பாக வைகோ மற்றும் ராமதாஸுடனான பேச்சுக்கள் வெற்றியளித்துள்ளன என்று கூறப்படும் நிலையில் இரு கட்சிகளும் கூட்டணியில் இணைவது உறுதியாகியுள்ளது என்று அந்தக் கட்சி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ற)

# காங்கிரஸைப் பொறுத்தவரை பெரும் பின்னடைவுதான்

*தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறுகின்றார்*

சென்னை, டிசெ.10

சட்டசபைத் தேர்தல் முடிவுகள் காங்கிரஸ் கட்சிக்குப் பெரும் பின்னடைவு தான் என்று தெரிவித்துள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

நடைபெற்று முடிந்த சட்டசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சியின் தோல்வி குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

“அந்த மாநிலங்களில்-இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றவர்களுக்கு எல்லாம் என்னுடைய வாழ்த்துகள். காங்கிரஸைப் பொறுத்தவரையில் இது ஒரு பின்னடைவுதான். ஏற்கனவே தேர்தலில் தி.மு.கவுக்கு தோல்வி என்பதை விடவும் அது வெற்றிக்கான முதலாவது படியாகவே கொள்ளவேண்டும். ஏற்காட்டில் அ.தி.மு.க. பெற்ற வெற்றி ஜனநாயகத்துக்குக் கிடைத்த வெற்றியல்ல. அதிகார பலத்துக்குக் கிடைத்த வெற்றி. தேர்தல் விதிமுறை மீறல்கள் குறித்து தேர்தல் ஆணையத்துக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதும் அது குறித்து தேர்தல் ஆணையம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.” என்று தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கப்பூரில் கலவரம்: வாகனங்களுக்கு தீ வைப்பு

சிங்கப்பூர், டிசெ.10
சிங்கப்பூரில் லிட்டில் இந்தியா பகுதியில் ஏற்பட்ட கலவரத்தில் வாகனங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன. அதையடுத்துப் பொலிஸாருக்கும், கலவரத்தில் ஈடுபட்டவர்களுக்கும் இடையே மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

'லிட்டில் இந்தியா' என்ற பகுதியில் ஏற்பட்ட விபத்து ஒன்றில் ஒருவர் உயிரிழந்தார்.


அதையடுத்து சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி அந்தப்பகுதியில் கூடியோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



அவர்களைக் கலைக்க முயன்ற பொலிஸாருக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு கலவரமாக வெடித்தது.

அதில் வாகனங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. அதனால் அங்கு பதற்றம் நிலவுகிறது. இந்த மோதல் தொடர்பாக 27 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிங்கப்பூரில் கடந்த 40 ஆண்டு கால வரலாற்றில் இது போன்ற கலவரம் எதுவும் நடந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ற)



# வென்றது போராட்டம்

### தேர்தல் நடத்துவதற்கு இணங்கினார் தாய்லாந்துப் பிரதமர்

பாங்ஹொக், டிசெ.10
பொதுமக்களின் போராட்டங்கள் தீவிரமடைந்ததை அடுத்து நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, அடுத்துவரும் 60 நாள்களுக்குள் தேர்தலை நடத்துவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார் தாய்லாந்துப் பிரதமர் யிங்லக் ஷினவத்ரா.

2011ஆம் ஆண்டு பிரதமராகப் பதவியேற்ற யிங்லக்ஷினவத்ராவின் ஆட்சியில் ஊழல் பெருகிவிட்டது என்று குற்றஞ்சாட்டும் எதிர்க்கட்சியினர் பொதுமக்களையும் இணைத்துக்கொண்டு கடந்த இரு வாரங்களாக போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

"எவ்வாறான எதிர்ப்புகள் வந்தாலும் அதனை முறியடிப்போம். பதவி விலகுவது என்பது குறித்த பேச்சுக்கே இடமில்லை" என்று தெரிவித்து வந்த யிங்லக் ஷினவத்ரா, மக்களின் எதிர்ப்பு தீவிரமடைந்ததை அடுத்து புதிய தேர்தல் ஒன்றை நடத்துவதற்குத் தற்போது இணங்கியுள்ளார்.

இதுகுறித்து அவர் குறிப்பிடுகையில், "புதிய தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை மக்களே தீர்மானிக்கட்டும். இதை எதிர்க்கட்சிகள் ஏற்காவிடில் தற்போது நிலவும் அரசியல் நெருக்கடி தொடர்ந்து நீடிக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, 500 ஆசனங்களைக் கொண்ட தாய்லாந்து நாடாளுமன்றில் இருந்து தமது 153 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவி விலகியுள்ளனர் என்று அந்நாட்டுப் பிரதான எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி அறிவித்துள்ளது.

அதனால் நாடாளுமன்றத்தில் புதிய சட்டங்கள் இயற்றுவது தடைப்படாத போதிலும், நாடாளுமன்றத்தின் சட்டபூர்வத்தன்மை குறித்து கேள்வி எழுப்பப்படும் சூழ்நிலை உருவாகும் என்று கூறப்படுகின்றது.

இது குறித்து ஜனநாயகக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான அபிசித் வெஜ்ஜாஜிவா கூறுகையில்,

"நாங்கள் நாடாளுமன்றத்தில் எங்கள் கடமையை சிறப்பான முறையில் செய்தோம். இதற்கு மேல் நாங்கள் எதுவும் செய்ய முடியாது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையாக இருப்பவர்கள், நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்வது எங்களை வருத்தமடையச் செய்துள்ளது. நாடாளுமன்றத்தைக் கலைப்பது என்பது மக்களுக்கு அதிகாரத்தைத் திருப்பியளிக்கும் ஒரு வழியாகும். ஆனால் அதைத் தொடர்ந்து நடத்தப்படும் தேர்தலில் மக்கள் நம்பிக்கை கொள்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற)



ஜனாதிபதியைப் பதவி விலகுமாறு கோரி உக்ரைனில் நடத்தப்பட்டுவரும் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன. இரண்டு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் அங்குள்ள சுதந்திர சதுக்கத்தில் கூடி அந்தநாட்டு ஜனாதிபதி விக்டர் யனுகோவியுச்சுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். ஐரோப்பிய யூனியனில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் ஜனாதிபதி விக்டர் யனுகோவியுச் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று கோரியோ மக்களால் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ற)

## வளி மாசடைவால் அல்லற்படும் சீன மக்கள்

பீஜிங், டிசெ.10
சீனாவில் வளி மாசடைவு காரணமாக ஏற்பட்டுள்ள புகைமூட்டம் தற்போது அங்கு பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அதனால் சீன மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் முக்கிய வர்த்தக நகரான ஷாங்காய் முழுவதும் அடர்த்தியான பனிமூட்டத்தால் மூடப்பட்டுள்ளது. அதனால் பெரும்பாலான மக்கள் சாலைகளில் பயணிப்பதைக் குறைத்து வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர் என்று கூறப்படுகின்றது. இந்த வளி மாசடைவுப் பிரச்சினை கடந்த வருடம் சீனத் தலைநகர் பீஜிங்கை அடிக்கடி அச்சுறுத்தியிருந்தது. எனினும் கடற்கரை ஓரம் அமைந்துள்ள ஷாங்காயைத் தற்போது தாக்கியிருக்கும் வளிமாசடைவே மிகத் தீவிரமானதாகக் காணப்படுகின்றது.

2020 ஆம் ஆண்டுக்குள் சீனாவின் ஷாங்காய் நகரை லண்டன், நியூயோர்க் மற்றும் ஹொங்கொங்குக்கு இணையாக மிகப் பெரும் வர்த்தக கேந்திர நிலையமாக மாற்ற சீனா முயற்சித்து வருகின்றது. இந்தநிலையில் வளி மாசடைவு அந்நாட்டுக்குப் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

பெருகி வரும் தொழிற்சாலைகள், வாகனங்களில் இருந்து வெளிவரும் புகை மற்றும் வானிலை மாற்றங்கள் வளி மாசடைவுக்கு முக்கிய காரணங்களாகக் கூறப்படுகின்றன. (ற)

## மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்தும் 'எம்பயர் ஸ்டேட்'




நியூயோர்க், டிசெ.10
அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள விண்ணை முட்டும் 'எம்பயர் ஸ்டேட்' கட்டடத்தில் தென்னாபிரிக்க தேசியக் கொடியில் இருப்பது போன்ற வண்ணங்களில் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

முன்னாள் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் மறைவுக்கு மரியாதை செலுத்தும் வகையிலே அந்த நாட்டு தேசியக் கொடியில் உள்ள நீலம், சிவப்பு, மஞ்சள் மற்றும் பச்சை ஆகிய வண்ண விளக்குகளைக் கொண்டு 'எம்பயர்' கட்டிடம் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

நிற வெறியை எதிர்த்துப் போராடியமைக்காக 27 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த மண்டேலா, உடல்நலக்குறைவு காரணமாக தனது 95ஆவது வயதில் கடந்த வியாழக்கிழமை உயிரிழந்தார். (ற)

## ஈரானின் அணுத் திட்டங்களை ஆராய விரைந்தது ஐ.நா.குழு



நியூயோர்க், டிசெ.10
ஈரானின் சர்ச்சைக்குரிய அணு செறிவூட்டல் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அணுமுகவர் அமைப்பின் பிரதிநிதிகள் அந்த நாட்டுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

சர்ச்சைக்குரிய அணு செறிவூட்டல் தொடர்பாக பரிசோதனைகளை மேற்கொள்ளும் நோக்கிலேயே குறித்த விசேட குழு ஈரானுக்குப் பயணமாகியுள்ளது என்று கூறப்படுகின்றது.

கடந்த மாதம் ஈரானுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையிலேயே ஐ.நா. நிபுணர்கள் குழு பயணத்தை மேற்கொண்டுள்ளது. அங்கு செல்லும் நிபுணர் குழுவினர் ஈரானின் முக்கிய அணு உலைகள் தொடர்பாக ஆராயவுள்ளதுடன் அவற்றின் நடவடிக்கைகள் குறித்தும் கண் காணிக்கவுள்ளனர்.

ஈரான் அணு ஆயுத உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றது என்று அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் குற்றஞ்சாட்டி வருவதுடன் அந்த நாட்டின் மீது பல பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளன.

இந்தநிலையில் ஈரானின் புதிய ஜனாதிபதியாக ஹசன் ரவ்ஹானி பதவியேற்றதன் பின்னர் அணுத்திட்டங்கள் தொடர்பாக மேற்கு நாடுகளுடன் ஏற்பட்டிருந்த முரண்பாட்டை நீக்கும் முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. (ற)

## ஈராக்கில் குண்டு வெடிப்பு
### 33 பேர் சாவு: 100 பேர் காயம்

பாக்தாத், டிசெ.10
ஈராக் தலைநகர் பாக்தாத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நடத்தப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல்களால் 33 பேர் உயிரிழந்துள்ளனர். 100க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

ஷியா பிரிவினர் அதிகம் வசிக்கும் சுமார் 9 இடங்களில் குண்டு வெடிப்பு நடத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

பொதுமக்களின் நடமாட்டம் அதிகமுள்ள சந்தை மற்றும் கடைத் தொகுதிகள் உள்ள பகுதிகளிலேயே குண்டு வெடிப்புகள் இடம்பெற்றுள்ளன.

இந்தத் தாக்குதல்களுக்கு எந்த இயக்கமும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. இருந்தும் ஷியா



பிரிவு பிரதமர் நூரி மாலிக்கின் ஆட்சிக்கு எதிராக சன்னி போராளிகள் நடத்திய தாக்குதல்கள் தான் இது என்று ஈராக் அரசு கூறியுள்ளது.

ஈராக்கில் இம்மாதம் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதல்களில் இதுவரை 123 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் காரணத்துக்காக இடமாற்றம் வழங்காதீர்

*கிழக்கு மாகாண சபை பிரதித் தவிசாளர் தெரிவிப்பு*



அம்பாறை, டிசெ.10
சிறப்பாகக் கடமையாற்றும் அதிகாரிகளை அரசியல் காரணங்களுக்காக இடமாற்றம் செய்யும் விடயத்தில் கிழக்கு மாகாண அமைச்சரவை அவதானத்துடன் செயற்பட வேண்டும்.
இவ்வாறு கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் எம்.எஸ்.சுபைர் கூறியுள்ளார்.
ஏறாவூர் அல் ஜிப்ரியா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
கிழக்கு மாகாணத்தைக் கட்டியெழுப்பும் பணியில் மிகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் அதிகாரிகள் அதிகளவில் உள்ளனர்.
அத்தகையோர்எமது மாகாணத்தைக் கட்டியெழுப்புவதற்கு உழைத்து வரும் நிலையில் தமது வங்குரோத்து அரசியலுக்காகவும் தமது ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவும் அத்தகைய அதிகாரிகளை இடமாற்றம் செய்வதற்கு சில அரசியல்வாதிகள் முனைகின்றனர்.
இதனால் கிழக்கு மாகாணத்திலுள்ள சிறந்த அரச அதிகாரிகள் மனமுடைந்து வேறு மாகாணங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் நிலையுள்ளது. அத்தோடு மாகாணம் பாதிப்புக்களை எதிர்நோக்கும் அபாயமும் காணப்படுகின்றது.
எனவே இத்தகைய விடயத்தில் பொறுப்புள்ள கிழக்கு மாகாண அமைச்சரவை மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.
அதேவேளை தவறு விடும் அதிகாரிகளை முறையான தாபன விதிக்கோவை விதிகளின்படி விசாரணை செய்து தெளிவான முடிவுகளுடன் ஒழுங்கு விதிகளின்படி நடவடிக்கைக்குட்படுத்தப்பட வேண்டும். அவ்வாறில்லாமல் நினைத்த மாத்திரத்தில் அதிகாரிகளை இடமாற்றம் செய்யும் நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும்.
மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்தைப் பொறுத்தவரை ஓய்வு பெற்ற முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் எம். ஜெய்னுடீன் தமது ஊழலற்ற நல்ல நிர்வாக முறைமைக்கூடாக தேசிய ரீதியில் இந்த கல்வி வலயம்- சாதனை படைக்கும் அளவுக்கு வளர்ச்சி காணச் செய்தார்.
தற்போதய வலயக் கல்விப் பணிப்பாளர் அகமது லெவ்வையும் அதே ஊழலற்ற நிர்வாகத்தைத் தொடர்ச்சியாகச் செய்து வருவதுடன், இந்தக் கல்வி வலயம் மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் சிறந்த அடைவு களையும், சாதனைகளையும் ஆற்றுவதற்கான பெரு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.
இதேவேளை இந்த அல்-ஜிப்ரியா வித்தியாலயம் கல்வியில் வளர்ச்சி கண்டு வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்- என்றார். (ச-30)

## நிந்தவூர் தபாலகத்துக்கு தபாலதிபர் நியமனம்

அம்பாறை.டிசெ.10
அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த நிந்தவூர் பிரதம தபாலகத்துக்கு முதலாம்தர தபாலதிபர் ஒருவர் இந்த மாதம் முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
முதலாம்தர தபாலகமான நிந்தவூர் தபாலகத்துக்கு நீண்ட காலமாக முதலாம்தர தபாலதிபர் ஒருவர் நியமிக் கப்படாத குறை இருந்து வந்தது.
அஞ்சல் திணைக்களம் கடந்த 29 ஆம் திகதி 552 அஞ்சல் அதிபர்களுக்கு முதலாம்தர அஞ்சல் அதிபர் பதவி உயர்வு நியமனங்களை வழங்கியிருந்தது.
அதனையடுத்து பதவி உயர்வு நியமனம் பெற்ற சம்மாந்துறையைச் சேர்ந்த ஏ.எம்.ஏ. றஸீட், நிந்தவூர் பிரதம தபாலகத்துக்கு முதலாம்தர தபாலதிபராக இந்த மாதம் முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ச-30)




**கிருஷ்ணா அடகு சேவை**
பதிவு இல: J/DS/BR/472
மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2012 ஆம் ஆண்டு (31.11.2012) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி (15.01.2014) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும்.
புதுப்பிக்கத் தவறின் 15.01.2014 ஆம் திகதி விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
இல.370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 0214900311
உரிமையாளர்.
இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5046
(C/14325)(10.6.3)

**மஹின்ரா ரக்ரர் விற்பனைக்கு**
இலக்கம் NPRC-xxxx பெட்டி, கலப்பை, றொட்டர் உட்பட
தொ.பே: 077 210 2380
தென்னிந்திய திருச்சபை, கிளிநொச்சி. (29702) (7.6.3)

**விற்பனைக்கு**
கொழும்புத்துறை வீதி, கணக்கர் சந்திக்கருகில் பூச்சி நீக்கப்பட்ட பாவோ தடுப்பூசி போடப்பட்ட 45 நாள்கள் நிரம்பிய நல்ல இன கொக்கோஸ்பினியர் (Cockospeniar) நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொ.பே: 077 923 9314 (41059) (7.6.3)

**நாய்க்குட்டி விற்பனைக்கு**
40 நாள் ஜேர்மன் செப்பேட் குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 424 4365 (41057) (12.2.6)

**தவறிவிட்டது**
ஆனைக்கோட்டையைச் சேர்ந்த துரைஐயா பிரேமச்சந்திரனுடைய தே.அ.அ. (653131895V), வாகன சாரதி அனுமதிப்பத்திரம் (DL No.A012044362) என்பன தவறவிடப்பட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தந்துதவவும். (41063) (2.6)
தொடர்பு : 021 225 5262, 077 481 4700

**விற்பனை முகவர் - யாழ்ப்பாணம்**
எமது நிறுவனத்தின் பதவி வெற்றிடமான விற்பனை முகவர் பதவியை நிரப்ப ஆர்வமுள்ள இலக்கை அடையும் திறமைமிக்க தனிநபரைத் தேடுகின்றோம்.
எதிர்பார்க்கும் தகைமைகள்:
* குறைந்தது 2 வருட அனுபவம் கட்டாயமானது (FMCG/விற்பனை அணுகுமுறை)
* திறமையான தொடர்பாடல் விரும்பத்தக்கது.
* சாதாரணதர/உயர்தர சித்தி பெற்றிருத்தல் அவசியமானது.
* Marketing சம்பந்தமான அறிவு/கற்கைநெறி விரும்பத்தக்கது.
* கணினி அறிவு அவசியம் (MS Office)

நாங்கள் தேடும் திறமைசாலி நீங்கள் எனக் கருதினால், உங்களுடைய விவரக் கோவையை 2 உறவினரல்லாதவர்களின் விவரங்களுடன் கீழ்க்காணும் முகவரிக்கு 7 நாள்களுக்குள் அனுப்பி வைக்கவும். (F/14327)(12.3.6)
Empire Teas (pvt) Ltd,
190/1, Sirisumana MW,Kelanimulla Angoda.
Web: wwwempireteas.com, email: Careers@empire.lk.


# ஆயுள் தண்டனையை குறைக்க நடவடிக்கை

*ஆராய்கிறது சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு*

கொழும்பு, டிசெ.10
ஆயுள்தண்டனை அனுப வித்து வரும் கைதிகளின் தண்டனைக் காலத்தை 20 வருடங்களாக குறைப்பது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டுள்ளது என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.
அதேவேளை, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளின் தண்டனையை ஆயுள்தண்டனையாக குறைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு கூறியுள்ளது.

**தூக்குத் தண்டனை கைதிகளின் தண்டனையை குறைப்பதற்கும் தீர்மானிக் கப்பட்டுள்ளது.**

இது தொடர்பிலான யோசனை நீதி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச)


**நன்றியோடு வாழ்த்துகின்றோம்**
**சிவஸ்ரீ.இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்**
(முதல்வர், சுந்தர ஆஞ்சநேயர், கோயில் இணுவில்)



எமது தேவஸ்தானத்தில்
இருபத்தி நான்கு ஆண்டுகள்
பிரதம குருவாக விளங்கி,
தேவஸ்தான வளர்ச்சியில் பெரும்
பங்கு வகித்த, மதிப்பார்ந்த
குருக்கள் ஐயாவின் மணிவிழாச்
சிறக்க துர்க்காதேவியைப்
பிரார்த்தித்து
வாழ்த்துகின்றோம்.
நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

**BARATHY**
**கல்வி நிலையம், சித்தங்கேணி**
தரம் 6 முதல் 11 வரை
**புதிய வகுப்புக்கள் நாளை ஆரம்பம்**
11.12.2013 புதன் 2.00 p.m
நீங்கள் நன்கு அறிந்த இப்பிரதேசத்தின் பிரபல்யம் பெற்ற ஆசிரியர் குழுவினால்

| | |
|---|---|
| ★ விஞ்ஞானம் Mr.தேவா Mr.பத்மநாதன் | ★ கணிதம் Mr.சிவரூபன் Mr.சிவா |
| ★ தமிழ் Mr.குகபரன் Mr.கஜிதரன் | ★ வரலாறு Mr.சுதன் Mr.பிரதாப் |
| ★ ஆங்கிலம் Mr.சுதர்சன் Mr.சிவகுமார் | ★ சமயம் Mr.N.T.தரன் Mr.பாபுதரன் |
| ★ புவியியல் Mr.சர்வேஸ்வரன் | ★ குடியுரிமை Mr.பாபுதரன் Mr.சிவா |
| ★ நாடகம் Mr.ஆனந்தன் | ★ சுகாதாரம் Mr.பார்த்தீபன் |
| ★ வர்த்தகம் Mr.திருக்குமரன் | ★ I.C.T Mr.N.அம்பி |
| ★ விவசாயம் | Mr.விஸ்ணுதேவன் |

மாணவர்கள் கவனத்துக்கு:
* மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் வேறு எந்தக் கல்வி நிலையத்திலும் கற்பிக்க மாட்டார்கள்.
* கடந்த ஆண்டு போல் இவ்வாண்டும் மாணவர்கள் தொகை வரையறுக்கப் பட்டுள்ளது. இட நெருக்கடிகளைத் தவிர்க்கும் முகமாக உங்கள் அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்.
* விடுமுறை காலத்தில் மேலதிக வகுப்புக்கள் நடைபெற உள்ளதால் தாமதியாது உங்கள் அனுமதிகளை உடன் பெற்றுக் கொள்ளவும்.

நிறுவன அதிபர், ஆசிரியர்கள்

**அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் வ.து வட்டுக்கோட்டை**
தொடக்கம் 1957 பதிவு இல. S.154
**விசேட அறிவித்தல்**

தொடர்ந்து பல தடவைகள் விளம்பரப்படுத்தியும், தபால் மூலம் அறிவித்தல்கள் அனுப்பியும் சில அங்கத்தவர்கள் உரிய பணங்களையும் மேலதிகமாக வழங்கப்படும் வட்டிப் பணங்களையும் பெறாதிருக்கின்றார்கள். கணிசமான அறிவித்தல்கள் உரிய முகவரியில் ஆள்கள் இல்லை என்ற குறிப்புடன் திரும்பியுள்ளன.

அடகு கடன் பெற்றவர்களில் ஒன்பது வன்னிப் பகுதி அங்கத்தவர்களே இன்று வரை மீளாதிருக்கின்றார்கள். இவர்களுக்கு அனுப்பிய பதிவுத் தபால்கள் பல, முகவரியாளர்கள் அங்கு இல்லை எனத் திரும்பிவிட்டன. எனவே இவ் விளம்பரப்படி அடகு நகைகளை மீளாதவர்கள் உங்கள் அடகு நகைகளை மீட்டெடுக்கும்படி அறிவுறுத்துகின்றோம். இன்றேல் நகைகளை இழக்க வேண்டி நேரும்.

எம்மிடம் கடன்பெற்ற அங்கத்தவர்கள் பொறுப்புணர்ந்து எமது அறிவித்தலின்படி மீளச் செலுத்துகின்றார்கள். கடனுக்கான வட்டி நீக்கப்பட்டுள்ளது. பிணையாளிகளுக்கு இன்னமும் அறிவித்தல் அனுப்பப்படவில்லை. வெளிநாடுகளில் உள்ள கடன்பெற்றவர்கள் அறிவித்தல் கிடைத்ததும் ஒரு சில நாள்களில் கடன் பணம் செலுத்தும் பொழுது கடன்பெற்ற உள்ளூர் அங்கத்தவர்கள் மேலும் அறிவித்தல்களுக்காகக் காத்திருப்பது ஏற்புடையதல்ல. எனவே உங்கள் வைப்புப் பணங்களையும், மேலதிக வட்டிப் பணங்களையும் பெறும் அதே சமயம் பெற்ற கடன்களையும் செலுத்தும்படி வேண்டுகின்றோம்.

தொ.பே.இல. 077 149 5631
யா/வட்டு இந்துக் கல்லூரி அருகில்,
சித்தன்கேணி.
09.12.2013
(41054) (7.6.3)
இ. ஆனந்தராசா
நிர்வாக செயலாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சர்வதேச மனித உரிமைகள் தினம் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் வவுனியாவில் மனித உரிமைகளை வலியுறுத்தி கடந்த 7 ஆம் திகதி ஊர்வலமொன்று இடம்பெற்றுள்ளது. கூமாங்குளம் இளைஞர் கழகம், சம்வித்த யுத் இளைஞர் கழகம் என்பவை இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த ஊர்வலம் வவுனியா பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஆரம்பித்து இளைஞர் சேவைகள் மன்றத்தைச் சென்றடைந்தது. இளைஞர் கழகங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள், பாடசாலை மாணவர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் எனப் பலர் பதாகைகளை ஏந்தியவாறு இந்த

# அதிகரித்த கசிப்பு உற்பத்தியால் தருமபுரம் மக்களுக்கு இடர்கள்

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துள்ளதால் தாம் பல்வேறு இடர்களை எதிர்கொள்வதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியைத் தடுக்கும் வகையில் பொலிஸாரும் கிராம அலுவலர்களும் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இருந்த போதிலும் தருமபுரம் 10ஆம் யுனிற் பகுதியில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

> தருமபுரம் 10ஆம் யுனிற் பகுதியில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

மேலும் இந்தப் பகுதியை அண்டிய நெத்தலியாற்றுப் பகுதியில் அதிகளவில் கசிப்பு உற்பத்தி இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக திருட்டுச் சம்பவங்கள் உள்ளிட்ட பல்வேறு சட்ட விரோத செயற்பாடுகள் இங்கு இடம் பெறுவதாகவும் மக்கள் தெரி விக்கின்றனர்.

எனவே இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

# கிளிநொச்சி மாணவர்கள் அரசினால் புறக்கணிப்பு

### *கூறுகிறார் வடக்கு கல்வி அமைச்சர்*

அக்கராயன், டிசெ.10

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி அரசினால் புறக்கணிக்கப்பட்டு வருவதாக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார்.

முழங்காவில் ஆரம்ப வித்தியாலயத்தில் இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாண வர்களுக்கான பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்:-

நான் அமைச்சர் பதவி ஏற்ற பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலை ஒன்றில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதலாவதாக கலந்து கொள்கிறேன். இங் குள்ள பாடசாலைகள் அரசி னால் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. பூநகரிப் பாடசாலைகளின் ஆசிரியர் வளம் சீர்செய்யப்பட வேண்டும். யாழ்ப்பாணத்தில்கூட ஆசிரியர் இடமாற்றங்களில் நெருக்கடி காணப் படுகின்றது.

இராணுவம் ஆனையிறவில் தமது வீரர்களுக்கு தூபி அமைக்கும்போது மாவீரர்களை வழிபடுவதற்கான உரி மை எமக்கு மறுக்கப் படுகின்றது- என்று தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் திருமதி சிவானந்தி பரதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பூநகரிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரட் ணமும்



கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் இருந்து ஒரு அதிகாரி கூட கலந்து கொள்ளாமை தொடர்பாக கல்வி அமைச்சர் தமது உரையில் சுட்டிக் காட்டியமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# செட்டிகுளம் ம.வி.க்கு கல்வியமைச்சர் பாராட்டு

வவுனியா, டிசெ.10

செட்டிகுளம் மகாவித்தியாலயத்தின் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சேவைகளை வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா பாராட்டியுள்ளார்.

கடந்த வாரம் இங்கு வருகை தந்த போதே அமைச்சர் இந் தப் பாராட்டைத் தெரிவித்துள் ளார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

கடந்த 2009 ஆம் ஆண்டு மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் இந்த வீதியூடாகப் பயணிக்கும் போது இந்தப் பாடசாலையின் நான்கு புறமும் முட்கம்பி வேலிகள் இடப்பட்டு நலன்புரி நிலையம் என்ற பெயரில் அடைத்து வைக்கப்பட்டிருந்தது. அப்போது இந்தப் பாடசாலை ஒரு பாடசாலையாகத் தெரிய வில்லை. ஆனால் இன்று பாடசாலையின் முன்புறம் மதில்கள் அமைக்கப்பட்டு மிகவும் அழகாகக் காட்சியளிக்கின்றது. அத்துடன் பாடசாலை வளாகத்தில் ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து தமக்குத் தேவையான சகல மரக்கறி மற்றும் கீரை வகைகளை உற்பத்தி செய்கின்றனர்.

மேலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுமார் 20 ஆசிரியர்கள் இங்கு கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் உரிய நேரத்திற்கு பாடசாலைக்கு வருவதாகவும் அவர்களால் எந்தப் பிரச்சினைகளும் இல்லையெனவும் அதிபர் கூறினார். இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது.

மேலும் பெற்றோர் சிறப் பான ஒத்துழைப்பை வழங்கி வருவதும் இந்தப் பாட சாலை யின் வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக உள்ளது.

இந்தப் பாடசாலை போன்று ஏனைய பாடசாலைகளும் செயற்பட்டால் எமது மாணவர்களின் கல்வி உயர்வடையும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-6)

# கால்நடைகளால் பயிர் அழிவு

வவுனியா, டிசெ.10

வவுனியாவில் கட்டாக்காலிகளாக அலையும் கால்நடைகளால் நெற்பயிர்களுக்கு அழிவு ஏற்படுவதாக நெற்பயிர்ச் செய்கையாளர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

நெற்செய்கைக்குரிய நீர் போதியளவு கிடைக்காமையால் "புழுதி விதைப்பு" மூலம் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை மூலமாக பயிர்கள் வளர்ந்து காணப்படுகின்றன. ஆனால் கட்டாக்காலிகளாக வீதியெங்கும் அலைந்து திரிகின்ற கால்நடைகள் இரவு வேளைகளில் சென்று நெற் பயிர்களை நாசம் செய்து வருகின்றன.

பலமுறை பொலிஸார் மற்றும் கமக்கார அமைப்புக்கள் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அறிவித்தல் வழங்கியிருந்தனர். ஆனால் கால்நடைகளைக் கட்டி வளர்க்காததால் அவை கட்டாக்காலிகளாக அலைவதை அவதானிக்க முடிகின்றது.

மேலும் சிவில் பாதுகாப் புக் குழுக்கள் அழிவுகளை மதிப்பீடு செய்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது. (க-421)

# வேரவில் - திருமுறிகண்டி வீதி; முழுமையாகப் புனரமைக்கவும்

### *பாதிக்கப்படும் மக்கள் அவசர கோரிக்கை*

கிளிநொச்சி , டிசெ.10

கிளிநொச்சி மாவட்டம் வேரவில் தொடக்கம் முல்லைத்தீவு மாவட்டம் திருமுறிகண்டி வரையான பிரதான வீதியை முழுமையாகப் புனரமைத்து உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்களான முழங்காவில், கரியாலைநாகபடுவான், நாச்சிக்குடா, குமிழமுனை, வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு, பொன்னாவெளி, பல்வராயன்கட்டு உள்ளிட்ட கிராமங்களுக்குச் செல்லும் பிரதானவீதியாகவும், ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம், அக்கராயன், சோலைநகர், ஜெயபுரம் உள்ளிட்ட கிராமங்களை மையமாகக் கொண்டும் இந்த வீதி காணப்படுகின்றது.

ஆனால் இந்த வீதி புனரமைக்கப்படாமல் உள்ளதால் இதில் பயணிக்கும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

திருமுறிகண்டியில் இருந்து அக்கராயன் மருத்துவமனை வரையுமான பகுதிவரை புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் ஏனைய பகுதிகள் புனரமைக்கப்படவில்லை. தற்போது பருவ மழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் வீதியின் பள்ளமான பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளது. இதனால் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. எனவே இந்த வீதியை முழுமையாகப் புனரமைத்து வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)



# வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வு



> பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த 26ஆம் திகதி பிரதேச சபை மாநாட்டு மண்ட பத்தில் நடைபெற்றது.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாந்தை கிழக்கு பிரதேச சபையின் பொதுசன நூலகத்தினால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக் கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த 26ஆம் திகதி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் பிரதேச சபைத் தவிசாளர் அ. [illegible] தலைமையில் ஆரம்பமானது. பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் செ.வினோநோகராதலிங்கமும்- மாந்தை கிழக்கு பிரதேச செயலர் சார்பாக சமூக சேவை உத்தியோகத்தர் க.குண சிங்கமும்-

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களாக திருமதி மேரிகமலா குணசீலன், வி.கனகசுந்தர சுவாமி, பாண்டியன்குளம் மகா வித்தியாலய அதிபர் த.அருமைநாயகம் ஆகியோரும் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்கினார்கள். பிரதேச சபைச் செயலாளர் திருமதி கு.சண்முகலிங்கம், நூலகர் கே.வரதராஜா ஆகியோரின் விசேட உரைகளைத் தொடர்ந்து வெற்றியீட்டிய மாண வர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப் பட்டன.

மேலும் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் பரிசில்கள் பெற்ற அனைத்து மாணவர்கள் மற்றும் பனாங்காமம் அ.த.க. பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் அப்பியாசக் கொப்பிகளை அன்பளிப்பாக வழங்கினார். (க)

# குறைந்தளவு பால் சுரக்கும் பசுக்கள்

கிளிநொச்சி, டிசெ.10

கிளிநொச்சி வன்னேரிக்குளம் கிராமத்தில் உதவி அமைப்புக்கள் மூலமாக வழங்கப்படும் பசுக்களில் இருந்து குறைந்த அளவு பால் கிடைப்பதாக பயனாளிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

உதவி அமைப்புக்கள் பசுக்களை உள்ளூரில் கொள்வனவு செய்து பயனாளிகளுக்கு வழங்குவதன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

பசுக்களைக் கொள்வனவு செய்வதற்கான நிதியை பயனாளிகளிடம் வழங்கினால் நல்ல இனப் பசுக்களைக் கொள்வனவு செய்து கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இத்தகைய கால்நடைகள் சிலவேளைகளில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப் டுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ந்து தடைப்பட்டு வருகிறது சம்பூர் மக்களின் மீள்குடியேற்றம்

## சம்பந்தன் எம்.பியிடம் முறையிட்டனர் மக்கள்

திருகோணமலை.டிசெ.10

திருகோணமலை, சூரைக்குடா, கூனித்தீவு மற்றும் நவரத்தினபுரம் ஆகிய கிராமங்களில் மீள் குடியேற்றத்துக்கான அனுமதி இந்த ஆண்டு வழங்கப்பட்டதையடுத்து 8 வருடங்களின் பின்னர் சுமார் 310 குடும்பங்கள் தமது சொந்தக் கிராமங்களில் மீளக்குடியேற்றப்பட்டனர்.



எனினும் சம்பூர் கிராம மக்களின் மீள்குடியேற்றம் தொடர்ந்தும் தடைப்பட்டே வருகின்றது. இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் குமாரசாமி நாகேஸ் வரன் கூறினார்.

நவரத்னபுரம், கூனித்தீவு, சூரைக்குடா ஆகிய மீள்குடியேற்ற கிராமங்களுக்கு முதல் தடவையாக சென்று பார்த்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தனிடம் தங்களின் வாழ்வாதாரம் தொடர்பான பிரச்சினை குறித்துத்தாம் முறையிட்டதாக மக்கள் தெரிவித்தனர்.

மீள் குடியேற்றத்தின் பின்னர் 6 மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டிய உலர் உணவுநிவாரணம் கூட தங்களுக்கு வழங்கப்படாமை குறித்து மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவரிடம் சுட்டிக் காட்டியுள்ளனர் என்று அவர் கூறினார்.

உயர் பாதுகாப்பு வலயம் ஊடாகவே குறித்த கிராமங்களுக்குச் சென்று திரும்பும்போது மீள்குடியேற்றம் தடைப்பட்டுள்ள சம்பூர்கிராமத்திலுள்ள பெரும்பாலான நிலப்பரப்பில் கடற்படைத் தளம் அமைந்துள்ளதோடு அங்கு மக்கள் வாழ்ந்த தடயங்களே இல்லை என்பதைத் தங்களால் அவதானிக்க முடிந்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

2005 ஆம் ஆண்டு எப்ரல் மாதம் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட போரால் சம்பூர் மற்றும் அதனை அண்மித்த கிராமங்களிலிருந்து சுமார் 1200 குடும்பங்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறினார்கள்.

முன்னர், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த அந்தப் பகுதி, இராணுவத்தினரால் கைப் பற்றப்பட்ட பின்னர் குறித்த கிராமங்களிலுள்ள காணிகள் உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டன.

அதில் ஒரு பகுதி சிறப்பு பொருளாதார வலயம் மற்றும் இந்தியா உதவியுடனான அனல் மின் நிலையம் என அடையாளமிடப்பட்டது.

இதன் காரணமாக போருக்குப் பின்னரும் அந்தக் குடும்பங்களின் மீள் குடியேற்றத்தில் தடைகளும் தாமதங்களும் ஏற்பட்டன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## விழிப்புணர்வு வீதி நாடகம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள தொழிற்பயிற்சிக் கல்லூரி மாணவர்களால் வீதி நாடகம் ஞாயிற்றுக்கிழமை களுவாஞ்சிக்குடி பொதுச்சந்தை வீதியில் அரங்கேற்றப்பட்டது.

இந்த நாடகம் பொதுமக்களை விழிப்புணர்வு ஊட்டும் வகையில் அமைந்துள்ளது.

இந்த நாடகம் மூலம் பாடசாலை இடைவிலகல், சமூப் பிரச்சனைகளிலிருந்து பாதுகாப்பு தேடுதல், பாடசாலைக் கல்வியை முடித்ததும் ஏனைய தொழிற் பயிற்சிகளை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகள் தொடர்பாக விழிப்புணர்வு வழங்கப்பட்டது. (ச)

## இரட்டைக் கொலை சந்தேக நபர்களுக்கு பரீட்சை எழுத அனுமதி

செங்கலடி இரட்டைக் கொலை வழக்கின் 3 ஆவது சந்தேக நபரான பு. சுமன், 4 ஆவது சந்தேக நபரான கு. நிலக்ஷன் ஆகியயோருக்கு ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி ஆர். எப். றியாழ் அனுமதி வழங்கியுள்ளார்.

இவர்கள் இருவரது சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி பேரின்பம் பிரேம்நாத் சமர்ப்பித்த மனுவைப் பரிசீலித்தபின் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி செங்கலடி வர்த்தக த்ம்பதியரான சி. ரகு, அவரின் மனைவி சு. விப்ரா ஆகிய இருவரும் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

இந்தக் கொலை தொடர்பாக அவர்களது மகன் தலக்ஷன் மற்றும் அஜற், சுமன், நிலக்ஷன் ஆகிய 4 மாணவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 3 ஆம், 4 ஆம் சந்தேகநபர்கள் இருவருக்கும் தற்போது நடைபெறும் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. (ச)

## தேங்காய் விழுந்து குழந்தை சாவு

தென்னை மரத்திலிருந்த தேங்காய் தலையில் வீழ்ந்ததில் 3 மாத கைக்குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது. இந்தச் சம்பவம் கல்முனை தமிழ் பிரிவிலுள்ள நற்பிட்டிமுனைக் கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் நற்பிட்டி முனையைச் சேர்ந்த ரமேஷ் சரோமி எனும் மூன்று மாத கைக்குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இந்தப் பகுதியில் கடும் காற்றுடன் கூடிய மழை வெள்ளிக்கிழமை பெய்துள்ளது. அப் போது இந்தக் குழந்தையின் தாய் தனது குழந்தையைத் தூக்கிக் கொண்டு பக்கத்துவீட்டிற்குச்சென்றுள்ளார். வீட்டிற்கு அருகில் இருந்த தென்னை மரத்திலிருந்து தேங்காய் ஒன்று வீழ்ந்துள்ளது. அப்போது தேங்காய் ஒன்றுஎதிர்பாராத விதமாககுழந்தையின் தலையில் வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஆறு நாள்களாகப் பெய்து வந்த அடைமழையால் அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள மீனோடைக்கட்டு பிரதான வீதியை அடுத்துள்ள நெற்காணிகள் முற்றாக நீரில் மூழ்கி பெரும் சேதத்துக்கு உள்ளாகியுள்ளன.

# கல்முனை மாநகர சபையில் விசேட இணையத்தளத் திட்டம்

## கணினி உபகரண தொகுதி முதல்வரிடம் கையளிப்பு

அம்பாறை.டிசெ.10

ஆசிய மன்றத்தின் ஏற்பாட்டில் கல்முனை மாநகர சபையின் வருமானத்தை மேம்படுத்தும் பொருட்டு விசேட இணைய சேவை திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.



இந்தத் திட்டத்துக்காக ஆறு லட்சம் ரூபா பெறுமதியான கணினி உபகரணத் தொகுதி யொன்று ஆசிய மன்றத்தால் கல்முனை மாநகர சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆசிய மன்றம் நடைமுறைப் படுத்தி வரும் உள்ளூர் பொருளாதார ஆளுகை செயற்றிட்டத்தின் கீழ் கல்முனை மாநகர சபையின் வருமானத்தை மேம்படுத்தவும், மக்களிடமிருந்து அறவிடப்படுகின்ற சோலை வரியை முறையாகப் பேணவும் மாநகர சபை யின் வருமானம் மற்றும் செலவுகளையும் உடனுக்குடன் அறிந்து கொள்ளும் வகையிலும் இந்து விசேட இணைய சேவை அறிமுகப்படுத்தப் படவுள்ளது.

கல்முனை மாநகர அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற இது தொடர்பான நிகழ்வில் கல்முனை மாநகர முதல்வர் நிஸாம் காரியப்பரிடம் ஆசிய மன்றத்தின் நிகழ்ச்சித் திட்ட அதிகாரி எம்.ஐ.எம். வலீத் குறித்த கணினி உபகரணத் தொகுதியைக் கையளித்தார்.

[illegible] ஆசிய மன்றத்தின் நிகழ்ச்சித் திட்ட அதிகாரி எம்.ஐ.எம்.வலீத் விளக்கமளித்தார். (ச-104)

# நீரில் மூழ்கின கிராமங்கள்

திருகோணமலை,டிசெ.10

திருகோணமலை, மூதூர் கொட்டியாரக்குடா கடல் கொந்தளிப்பால் ஹபீப் நகர், தக்வா நகர் முதலான கரையோரக் கிராமங்களில் கடல் நீர் உட்புகுந்துள்ளது.



கடந்த சில தினங்களாக ஏற்பட்ட [illegible] தொடர்ந்து. [illegible] தொழில் பாதிப்படைந்துள்ளதுடன், மீனவர்களின் உடைமைகளும் கடல் கொந்தளிப்பால் பாதிப்பிற்குள்ளாகியுள்ளன. ஹபீப்நகர், தக்வா நகர் முதலான கரையோரக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து உறவினர்கள், நண்பர்களது வீடுகளிலும் பாடசா லைகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

“—”

**மீனவர்களின் உடைமைகள் கடல் கொந்தளிப்பால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.**

இதேவேளை, உமர் பாறுக் வித்தியாலயத்தில் தங்கியிருக்கும் 60 குடும்பங்களுக்கு மூதூர் பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.ஹாரீஸ் மற்றும் கிழக்கு மாகாண சகாதார அமைச்சின் இணைப்புச் செயலாளர் சட்டத்தரணி ஜே.எம். லாஹிர் ஆகியோர் சமைத்த உணவுகளை வழங்கியுள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4,300 நிலையங்களில் இன்று சாதாரணதரப் பரீட்சை ஆரம்பம்

## அதி கூடிய மாணவர்கள் இம்முறை தோற்றுவர்

கொழும்பு.டிசெ.10
ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை இன்று செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம் பமாகவுள்ளது. இதற் கான சகல ஏற்பாடுகளும் பூர்த் தியடைந்துள்ளன. வினாத் தாள்களும் அனுப்பி வைக் கப்பட்டுள்ளன.

பரீட்சை எழுதும் மாணவர்கள் தமக்கு வழங்கப்பட்டிருக்கும் சுட்டெண் அடிப்படையில் தமக் குரிய மேசைகளில் காலை யில் 8.15 மணிக்கு அமருவ தன் மூலம் வீணான பதற்றங் களைத் தவிர்த்துக் கொள்ள முடி யும் என்று பரீட்சைகள் ஆணை யாளர் நாயகம் டபிள்யூ.எம். என்.ஜே.புஸ்ப குமார கேட்டுக் கொண்டுள் ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அனைத்துப் பரீட்சார்த்திகளும் தமது அடையாளத்தை உறு திப்படுத்தும் வகையில் தேசிய அடையாள அட்டை அல்லது நடைமுறையிலுள்ள கடவுச் சீட்டையும் ஒக்டோபர் 31ஆம் திகதியன்று 16 வயது பூர்த்தி யாகாத மாணவர்கள் தபால் அடையாள அட்டையை தம்முடன் எடுத்துச் செல்ல வேண்டும். அடையாள அட்டை மற்றும் பரீட்சை அனு மதியட்டை இன்றி பரீட் சைக் குத் தோற்ற மாணவர் கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

பைல், கையடக்கத்தொலை பேசி, கல்குலேட்டர், புத்தகங் கள், குறிப்புகள் என்பவற்றை பரீட்சை நிலையத்துக்குக் கொண்டு செல்வதோ அல்லது பரீட்சார்த்தி தமக்கு அண்மை யில் வைத்திருப்பதோ சட்டப் படி குற்றமாகும்.

முறைகேடுகளில் ஈடுபடும் மாணவர்களுக்கெதிராக கடும் தண்டனைகள் வழங்கப்ப டும். அவர்கள் தமது வாழ்நா ளில் மீண்டும் பரீட்சை எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இதேவேளை, பிற மாணவர்க ளுக்காகப் பரீட்சை எழுத முற்படும் பல்கலைக்கழக மாணவர் களினதும் பல்க லைக்கழக உறுப்புரிமை நீக்கப்படும். அவர்கள் அரசால் நடத்தப்ப டும் எந்தவொரு பரீட்சைக்குத் தோற்றுவதற் கும் அனுமதிக் கப்பட மாட் டார்கள்.

பரீட்சை முறைகேடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் அதிகா ரிகளுக்கு எதிராகவும் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்ப டும்.



**அதிகூடிய மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவர்**

ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சை வரலாற்றிலேயே இம்முறை ஆகக்கூடிய எண்ணிக்கையான மாணவர்கள் தோற்றவுள்ளனர். இந்தப் பரீட்சைக்கு இந்த முறை 5 லட்சத்து 78 ஆயிரத்து 140 பரீட்சார்த்திகள் தோற்றவுள் ளனர். அவர்களுள், 3 லட் சத்து 84 ஆயிரத்து 56 பாட சாலை பரீட்சார்த்திகளும் ஒரு லட்சத்து 94 ஆயிரத்து 84 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றுகின்றனர்.

நாடு முழுவதுமுள்ள 4300 பரீட்சை நிலையங்களில் பரீட் சைகள் நடைபெறவுள்ளன. பரீட்சைக்கென 534 இணைப்பு நிலையங்களும் 33 பிரதேச சேகரிப்பு நிலையங்களும் இரண்டு மத்திய சேகரிப்பு நிலை யங்களும் அமைக்கப் பட்டுள் ளன.

இந்த வருடம் 510 மாற்றுத் திறனாளிகளுக்கென இரத்ம லானை, தங்காலை, அம்பே புஸ்ஸ, சிலாபம், கொழும்பு ஆகிய இடங்களில் விசேட கல்வி பரீட்சை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. அவர்க ளுக்குத் தேவையான அனைத்து சலுகைகளும் உபகரணங்க ளும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள் ளன. இந்தமுறை 10 மாண வர்கள் தமது விடைகளை வாய் மூலம் கூறவுள் ளனர். இவை பரீட்சை அதிகாரிகளினால் ஒலிப் பதிவு செய்யப்பட்டு பின்னர் அதி காரிகளினால் எழுதப்படவுள் ளன. மகளின் சிறைச்சாலை யிலுள்ள 3 சிறைக்கைதிகள் இந்தமுறை பரீட்சைக்குத் தோற் றவுள்ளனர். அவர்களுக் கென சிறைச்சாலைக்குள் விசேட பரீட்சை நிலையம் அமைக்கப் பட்டுள்ளது.

பாதுகாப்பு

பரீட்சை நிலையங்கள் தோறும் பொலிஸாரினதும் முப்படையி னரினதும் ஒத்துழைப்புடன்

> “–”
> மகளின் சிறைச் சாலையிலுள்ள 3 சிறைக் கைதிகள் இந்தமுறை பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட் டுள்ளது. வினாத்தாள்கள் எடுத்துச் செல்லல், விடைத் தாள்களை சேகரித்துச் செல் லல் போன்ற செயற்பாடுகளின் போதும் பொலிஸ் ரோந்து செயற்பாடுகள் நடைமுறை யில் இருக்கும்.

பரீட்சை நடைபெறும் இடங்க ளில் ஒலிபெருக்கி பாவனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நிலையங்களாக செயற் படும் பாடசாலைகளில் நிர்மா ணப் பணிகள், கூட்டங்கள் மற் றும் வகுப்புகள் உள்ளிட்ட அனைத்து செயற்பாடுகளுக் கும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரைதடை விதிக்கப்பட்டுள்ளன.

பரீட்சையை முன்னிட்டு கடந்த 4 ஆம் திகதி நள்ளிரவு முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி நள் ளிரவு வரை தனியார் வகுப்பு கள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துவதற்குத் தடை விதிக் கப்பட்டுள்ளது. இந்தச் சட்ட விதிமுறைகளை மீறிச் செயற் படுவோர் உடனடியாக கைது செய்யப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்.

வினாத்தாள் அச்சிடும் அச்ச கம் பூரண பாதுகாப்பின் கீழ் இயங்குவதனால் கடந்த காலங் களில் ஏற்பட்ட முறைகேடுகள் மற்றும் குளறுபடிகள் இனிமே லும் ஏற்பட வாய்ப்பில்லை என்ப தால் மாணவர்களும் பெற் றோரும் அது குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை. -என்றார். (ச)

## சூதாட்டத்தில் ஈடுபட்ட 12 பேர் கைது



கொழும்பு.டிசெ.10
சேவல்களை வைத்துச் சூதாட் டத்தில் ஈடுபட்டதாகக் கூறப்ப டும் 12 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து 8 சேவல் களையும் 25,000 ரூபா பணத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

வென்னப்புவ, லுணுவில பண்டிருப்பு பிரதேசத்திலேயே சேவல்களை வைத்துச் சூதாட் டத்தில் ஈடுபட்டதாகக் கூறப் படும் 12 பேரை நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு வென்னப்புவ பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட வர்கள் மினுவாங்கொடை, ஜாஎல, ஏக்கல போன்ற பிர தேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் குறிப்பிட் டனர். இந்தச் சம்பவம் தொடர் பில் வென்னப்புவ பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ச)



பிபிலைக்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்குள்ள சிறுவர் மகளிர் பராமரிப்பு இல்லத்துக்குச் சென்று அங்குள்ள சிறுமிகளுடன்....

## வெளிநாடு செல்பவர்கள் பதிவு செய்வது கட்டாயம்

### ஜனவரி முதல் நடைமுறைக்கு

கொழும்பு.டிசெ.10
அடுத்த வருடம் முதல் தொழி லுக்காக வெளிநாடு செல்வோர் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் தம்மை பதிவு செய் துக்கொள்ள வேண்டியது கட்டா யமாக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் வெளிநாடுக ளில் தொழிலுக்கு செல்வோர் விமான நிலையத்தில் பதிவை மேற் கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப் பட்டிருந்தது.

எனினும் ஜனவரி மாதம் முத லாம் திகதி தொடக்கம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துக்கு சமூகமளித்து பதிவு செய்துகொள்ள வேண் டியது அவசியம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

> “–”
> வெளிநாடுகளில் தொழிலுக்கு செல்வோருக்கான பதிவு அடுத்த வருடம் முதல்விமான நிலை யத்தில்மேற் கொள் ளப்படமாட்டாது.

இதற்கமைய வெளிநாடுகளில் தொழிலுக்கு செல்வோருக்கான பதிவு அடுத்த வருடம் முதல் விமான நிலையத்தில் மேற்கொள் ளப்படமாட்டாது என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் மங்கள ரன் தெனிய கூறியுள்ளார். (ச)

## மண்டேலா மறைவையொட்டி இலங்கையில் துக்கதினம்



கொழும்பு.டிசெ.10
தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி, சுதந் திரப் போராட்ட வீரர் நெல்சன் மண்டேலாவின் மறைவையொட்டி இன்று செவ்வாய்க்கிழமையும், நாளை புதன்கிழமையும் இலங்கையில் துக்க தினமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

அன்றைய நாள்களில் நாட்டின் தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விடும்படி அறிவுறுத்தப்பட் டுள்ளது. (ச)




## இந்தியக் கடல் எல்லையில் மீன்பிடிக்க வேண்டாம்

கொழும்பு.டிசெ.10
இந்தியக் கடல் எல்லையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதை தவிர்க் குமாறு இலங்கை மீனவர்களிடம் மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்தியக் கடல் எல்லையில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைதாகியுள்ளனர்.

அவர்களை நாட்டுக்கு மீள அழைத்து வர இராஜதந்திர ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது. மாலைதீவுக் கடல் எல்லையில் மீன்பிடியில் ஈடுபடுவது குறித்து பேச்சு இடம்பெற்று வரு கிறது. அதனால் இந்திய எல்லையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என்று அமைச்சு கோரியுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அவசர அவசரமாக செயற்படுத்தப்படுவது மீளத் திரும்புதலா, மீள் குடியமர்வா?

வன்னிப் பிரதேசத்தில் நடைபெற்ற இறுதிப் போரின் போது இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்குப் புகலிடம் வழங்குவதற்கென அமைக்கப்பட்ட "மனிக்பாம்" நலன்புரி நிலையம் மூடப்பட்ட பின்னரும்–

யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் முப்பத்து நான்கு நலன்புரி நிலையங்களில் நான்காயிரத்து 430 பேர் போதிய வசதிகள் இன்றி, அல்லாடி வருகின்றனர்.

இந்த விவரத்தை யாழ்.மாவட்ட செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழு அறிக்கை அதிகாரபூர்வமாக வெளிப்படுத்தி உள்ளது.

யாழ்.மாவட்டத்தில், 2009 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட 65 நலன்புரி நிலையங்கள் 2010 இல் 61 ஆகவும், 2011 ஆம் ஆண்டில் 54 ஆகவும் கடந்த வருடத்தில் 39 ஆகவும் இந்த வருடம் 34 ஆகவும் குறைந்துள்ளதாகவும் அறிக்கை விவரமாகத் தெரிவிக்கிறது.

யாழ்.மாவட்டச் செயலகத்தின் அறிக்கையின் பிரகாரம், எமது மாவட்டத்தில் ஐயாயிரத்து எண்ணூற்று அறுபத்திரண்டு குடும்பங்களே, அகதிகளாக வசிப்பதாகக் கணக்குக் காட்டப்பட்டுள்ளது.

அரச செயலகத்தின் புள்ளி விவரங்கள் இவ்வாறு அமைந்த போதிலும், உண்மை நிலை அதுவல்ல என்பதனை இங்கே தொட்டுக் காட்ட வேண்டிய தேவை எழுகிறது. ஏனெனில், கடந்த 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், அந்தப் பிரதேசத்தில் 9 ஆயிரத்து 905 குடும்பங்கள் அகதிகளாக வாழ்வதாக அறிக்கை இடப்பட்டது. எனினும் அதன் பின்னர், அந்தப் பிரதேசத்தில் மீள் குடியேற்றம் நடைபெறவில்லை. ஆக, 9ஆயிரத்து 905 குடும்பங்கள் அகதிகளாகவே–இடம்பெயர்ந்தவர்களாகவே–வாழ்கிறார்கள்.

தளநிலைமை இவ்வாறு இருக்கும் போது–

வடக்கில் உள்நாட்டுப் போரினால் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு பூரணத்துவம் அடைந்துவிட்டதாக வடக்கின் ஆளுநர் தெரிவித்திருந்தார்.

வடக்கு மாகாணத்தின் மொத்தம் உள்ள ஐந்து மாவட்டங்களிலும், இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசித்த மக்கள்–சுமார் மூன்று லட்சத்து ஐம்பத்து மூவாயிரத்து இருநூற்றியிருபத்தியிரண்டு பேர்–அவரவர் இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்று ஆளுநர் தெரிவித்திருந்தார்.

ஆனால் தள நிலைமையோ முற்றிலும் வேறு என்பதனை தெரிந்தோ, தெரியாமலோ யாழ்ப்பாண மாவட்ட செயலக ஒருங்கிணைப்புக் குழுவின் அறிக்கை, மிகத் துலாம்பரமாக வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள இலங்கை குறித்த விவகாரம் ஆராயப்படும் காலம் தொடங்குவதற்கு முன்னரே–

போர் அகதிகளின் மீள்குடியேற்றம் சீர்செய்யப்பட்டு வருவதாகக் காண்பிப்பதற்கான முயற்சிகள் முழு வீச்சில் அரசினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இது விடயத்தில்– இல்லை இல்லை, விவகாரத்தில்–கள நிலைமைக்கு வர்ணம் பூசுவதற்கு அரசின் பிரதானிகளும், அதன் அடிவருடும் அதிகாரிகளும் தமது முழுமையான புலனையும் சக்தியையும் அதியுச்ச வரம்புக்கு உயர்த்திச் செயற்படுகிறார்கள்.

அதற்கான மிகப் பல உதாரணங்களில், வலி.வடக்குப் பிரதேச பிரிவில் பலாலி கிழக்கில் அடையாளப்படுத்தப்படும் 350 ஏக்கர் நிலப்பரப்பை இராணுவத்தினர் விடுவிப்பர் என்று அறியப்படுத்தப்பட்டது. ஆனால், அந்தப் பகுதியில் வசித்து இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்துவதற்குப் பதிலாக, கோணப்புலம் இடம்பெயர்ந்தோர் முகாமில் உள்ளவர்களையே இடம் மாற்ற முயற்சிக்கப்படுவதாக இப்போது தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னதாக, நலன்புரி முகாம்கள் மூடப்படும் என்று நம்பவைப்பதற்கான கைங்கரியங்கள் நடத்தப்பட்டாலும், நான்கு வருடங்கள் கழிந்தும் பாதிப்புற்ற மக்களின் வாழ்க்கை அவலங்கள் முற்றாக நீக்கப்படவில்லை.

உண்மை நிலையை மறைப்பதற்கான உள்ளார்ந்த பணிகள் முன்னெடுக்கப்படுவதனை, மறைக்க முடியாது என்பதனைப் பிரிட்டிஷ் பிரதமர் கமரூனின் வடக்கு பயணத்தின் பின்னரும் உணர்ந்து கொள்ளாத நிலையே தொடர்கிறது.

வடக்குக்குக் கடந்த வாரம் பயணம் செய்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான சிறப்புப் பிரதிநிதி சலோகா பெயானி, இலங்கை அரசின் செயற்பாடுகளை நேரில் கண்டறிந்த பின்னர்–

மீள்குடியமர்வு (Resettlement) என்ற வார்த் தையைப் பயன்படுத்தாது, மீளத் திரும்புதல் (Return) என்ற பதத்தை பயன்படுத்துவதே பொருத்தமானது என்று செப் பினார்.

அரச தரப்பினர் இதனை மனதில் கொண்டு செயற்படுவரா? இனி எப்போது...?



# அடுத்த ஆண்டிலாவது மனித உரிமைகள் சாத்தியமாகுமா?

ராஜராஜன்



இன்று சர்வதேச மனித உரிமைகள் தினம் உலகெங்கும் கொண்டாடப் படுகின்றது. மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை இந்தத் தினம் எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

இந்த உலகில் பிறந்த அனைவரும் சகல உரிமைகளையும் பெற்று நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் ஐக்கியநாடுகள் சபை டிசெம்பர் 10 ஆம் திகதியாகிய இன்றைய தினத்தை சர்வதேச மனித உரிமைகள் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

ஆனால் உலகில் வாழ்கின்ற மக்கள் அனைவரும் தமது உரிமைகளைப் பெற்று சுதந்திரமாக வாழ்கின்ற நிலை இன்னமும் உருவாகாமல் இருப்பது கவலையும், வேதனையும் தருகின்றது.

இந்த நவீன விஞ்ஞான உலகில் கூட நாடு, இனம், மொழி, சாதி, மதம், அந்தஸ்து ஆகிய காரணங்கள் கூறப்பட்டு ஒரு பகுதி மக்களின் உரிமைகள் பாதிக்கப்பட்டு அவர்கள் இடர்களுக்குள் தள்ளப்படும் நிலை இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையில் மனித உரிமைகள் தொடர்பாக கூறுவதிலும், ஆண்டுதோறும் சர்வதேச மனித உரிமைகள் தினத்தைக் கொண்டாடுவதிலும் அர்த்தமே இல்லை. அதிலும் ஐக்கிய நாடுகள் சபைக்கு இதனைப் பிரகடனம் செய்வதற்கும், கொண்டாடுவதற்கும் தகுதியுள்ளதா என்ற வினாவும் கூடவே எழுகின்றது.

### இனப்படுகொலைக்கு சர்வதேசம் உதவியது

எமது நாட்டிலே 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப் போரின்போது ஐக்கிய நாடுகள் சபையின் கையாலாகாத நிலை வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது. தமிழ் மக்களைப் புலிகளிடமிருந்து மீட்பதற்கான இறுதிப் போர் என்ற கவர்ச்சியான கோசத்தை உரக்கக் கூறியவாறு இலங்கையரசு இந்தப் போரை முன்னெடுத்தது. பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகவே இந்தப் போர் இடம்பெறுவதாக நம்ப வைக்கப்பட்ட உலக நாடுகள் பல இலங்கை அரசுக்குச் சகல வகையிலும் உதவிகளை அள்ளி வழங்கின. குறிப்பாக இலங்கையின் ஆத்ம நண்பர்களான சீனா, பாகிஸ்தான் என்பன வெளிப்படையாகவே இராணுவ உதவிகளை வழங்கின. புலிகள் மீது வஞ்சகம் தீர்ப்பதற்குக் காத்தி ருந்த இந்தியா, தக்க தருணம் இது தான் என்பதை உணர்ந்து சகல வகையிலும் உதவிகளை அள்ளி வழங்கியது. ஆனால் போர் இடம்பெற்ற பகுதியில் சிக்கிக்கொண்ட மக்களைப் பற்றிய சிந்தனை ஐ.நாவிடமோ அல்லது இந்த நாடுகளிடமோ துளியும் இருக்கவில்லை. இலங்கை யரசு எந்தவிதமான நெருக்குதல்க ளும் இல்லாத நிலையில் போரைத் தீவிரமாக நடத்தியது. இதில் சிக்குண்டு தவித்தவர்கள் தமிழர்கள் என்பதால் அவர்களின் உயிர்கள் மீது எந்தவித கருணையும் காட்டப்படவில்லை. இதனால் பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். ஏராளமானவர்கள் தமது அங்கங்களை இழந்து நிர்க்கதிக்குள்ளாகினர். தமிழர்களின் சொத்துக்கள் யாவும் அழிக்கப்பட்டன. ஒரு நாடு வேறொரு நாட்டின் மீது மேற்கொண்ட யுத்தமொன்றை ஒத்ததாக இந்த இறுதிப் போர் காணப்பட்டது. கலிங்க தேசத்தின் மீது மாமன்னன் அசோகன் படையெடுத்து அங்கு பேரழிவுகளை ஏற்படுத்திவிட்டு பின்னர் அவற்றைக் கண்டு மனம் வருந்தி அரச போகத்தைத் துறந்து பௌத்த மதத்தைத் தழுவிக் கொண்டதாக வரலாறு கூறுகின்றது. ஆனால் இந்த பௌத்த தேசத்திலேயே வரலாறு காணாத போர் அழிவுகள் ஏற்பட்டன, ஏற்படுத்தப்பட்டன.

### காலம் கடந்த ஞானம்

போரின் இறுதிக் கட்டத்தில் ஐ.நாவின் ஏற்பாட்டின் பிரகாரமெனக் கூறப்பட்டு இராணுவத்தினரிடம் வெள்ளைக் கொடிகளுடன் சரணடையச் சென்றவர்களுக்கு என்ன நடந்தது என்பதை இந்த உலகமே அறியும். தமிழ்ப் பெண்கள் பலருக்கு நிகழ்த்தப்பட்ட கொடுமைகளைச் சொல்வதற்கு வார்த்தைகளே இல்லை. இந்த நிலையில் இறுதிப் போரின் போது ஐ.நா.தவறு இழைத்து விட்டதாக அதன் செயலாளர் நாயகம் வெட்கமின்றி காலம் தாழ்த்திக் கூறுகின்றார். இதன் பின்னரும் அந்தப் பதவியில் அமர்ந்து கொண்டிருப்பதற்கான தார்மீக உரிமைகள் எதுவும் அவருக்கில்லை. ஆனால் இது தொடர்பாக உலக நாடுகள் வாயே திறப்பதில்லை. இந்த நிலையில் மனித உரிமைகள் என்ற வார்த்தையை உச்சரிப்பதற்கான தகுதி கூட ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கும், உலக நாடுகளுக்கும் இல்லையென அடித்துக் கூறலாம்.

> இலங்கையரசு எந்தவிதமான நெருக்குதல்களும் இல்லாத நிலையில் போரைத் தீவிரமாக நடத்தியது. இதில் சிக்குண்டு தவித்தவர்கள் தமிழர்கள் என்பதால் அவர்களின் உயிர்கள் மீது எந்தவிதக் கருணையும் காட்டவில்லை. இதனால் பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். ஏராளமானவர்கள் தமது அங்கங்களை இழந்து நிர்க்கதிக்குள்ளாகினர்

### இலங்கைத் தமிழரை மனிதராகப் பார்க்கவில்லை

இலங்கையில் வாழுகின்ற தமிழர் சமூகத்தை மனிதர்கள் என்ற வரிசையில் வைத்துப் பார்ப்பதற்கு ஐ.நா. விரும்பவில்லையா என்ற பிறிதொரு கேள்வியும் கூடவே எழுகின்றது. சர்வதேச நாடுகளின் பொது அமைப்பாக விளங்கும் ஐ.நா.சபை பெருமளவு நிதியை அதன் நிர்வாகச் செலவுகளுக்கென்றே விழுங்கி வருகின்றது. அதன் தற்போதைய செயலாளர் நாயகம் செயல் திறனற்ற ஒருவராகக் கணிக்கப்படுகின்றார். இலங்கை விடயத்தில் இதனை அவர் நிரூபித்துள்ளார்.

இவரது பதவிக் காலத்தில் இலங்கைத் தமிழர்கள் தமக்கு ஏற்பட்ட கொடுமைகளுக்கெல்லாம் பரிகாரம் தேடிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை அறவே தகர்ந்துள்ளது. சர்வதேச மனித உரிமைகள் தொடர்பாகக் கூறிக்கொள்ளும் ஐ.நா. முதலில் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பேணுவதில் கவனம் செலுத்த வேண்டும். இதை விடுத்து வெறும் கோசங்களை எழுப்புவ தால் பயனெதுவும் கிடைக்கப் போவதில்லை.

### கைப் பொம்மையாகிய ஐ.நா.

மேலும் பெரிய நாடுகளின் கைம்பொம்மையாக ஐ.நா.செயற்படுவதாகவும் ஒரு குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனால் சிறிய நாடுகள் பல்வேறு வகையிலும் பாதிக்கப்படுகின்றன. இன்று உலகின் பெரிய ஜனநாயக நாடு என்று கூறப்படும் இந்தியாவில் பெரு மளவு மனித உரிமை மீறல்கள் இடம் பெற்று வருகின்றன. குறிப்பாக காஷ்மீர் மாநிலத்தில் வாழும் சிறுபான்மை மக்கள் இந்திய இராணுவத்தினரால் பல்வேறு வகையிலும் துன்புறுத்தல்களுக்கும், கொடுமைகளுக்கும் ஆளாகி வருகின்றனர். ஆனால் ஐ.நா.வோ அல்லது வேறு பெரிய நாடுகளோ இந்தியாவைப் பகைத் துக் கொள்ளக் கூடாது என்பதால் மௌன மாக இருக்கின்றன. இதைப்போன்றுதான் இந்தியாவின் வடமாநிலங்களில் மாவோயிஸ்டுகளை வேட்டையாடுகின்றோம் எனக் கூறிக் கொண்டு இராணு வத்தினரும் பொலிஸாரும் அப்பாவி மக்களைக் கொன்று வருகின்றனர். இதுவும் கவனிக்கப்படாத ஒரு விடய மாகவே காணப்படுகின்றது.

### தமிழருக்கு நீதி கிடைக்கவில்லை

இலங்கை விடயத்தில் கூட பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கிடைப்பதில் இந்தியா முட்டுக்கட்டை போட்டு வருகின்றது. போர்க் குற்றத்தில் தன்னையும் இணைத்து விடுவார்களோ என்ற அச்சமே இதற்குக் காரணமாகும். ஏனென்றால் இறுதிப் போர்க் குற்றவாளிகளில் இந்தியா முதன்மையானது என்பது உலகறிந்த விடயம். எனவே ஆண்டுதோறும் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை கொண்டாடுவதாக நாம் எம்மையே ஏமாற்றிக் கொண்டிருப்பதை விடுத்து இதய பூர்வமாக இதனை மேற்கொள்வதற்கான முயற்சிகளை எடுத்தல் வேண்டும். இதில் ஐ.நாவின் பங்கு கணிசமானது. அதன் செயலாளர் நாயகம் முயன்றால் இதன் சாத்தியப்பாடுகள் அதிகரிக்கும்.

ஆகவே அடுத்த ஆண்டாவது உண்மையாகவே உலகில் வாழும் மக்கள் அனைவரும் சம உரிமையைப் பெற்றுள்ளனர் என்ற செய்தியை ஐ.நா. இந்தத் தினத்தில் வெளியிட வேண்டும். இதற்காகவே இந்த உலகத்தில் பல்வேறு வகையிலும் உரிமைகளை இழந்து தவிக்கும் மக்கள் காத்திருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த பாடசாலைகள் உருவாக தீர்மானம் எடுத்தலின் முக்கியத்துவம்

**பாடசாலையில் ஏதேனும் பிரச்சினை கள் தோன்றும் வேளை அதனைத் தீர்க்க அதிபர் எடுக்கும் தீர்மானமானது சில சந்தர்ப்பங்களில் பாட சாலையில் குழப்பத்தை ஏற்படுத்தி பாடசாலைக் கருமத் தொடர் பாதிக் கப்பட்டு உயிரோட்டமாக இயங்கி வந்த பாட சாலையை உயிரற்றதாக மாற்றி விடவும்கூடும்.**

சி.நற்குணலிங்கம்,
கோட்டக் கல்விப் பணிப்பாளர், கரவெட்டி.

பாடசாலைகளில் தரவுகளைக் கொண்டு தகவல்களைச் சேகரித்து அதிபர்கள் ஒழுங்கான தீர்மானத்தை எடுத்துக் கொள்ளல் வேண்டும். பாடசாலைகளில் முரண்பாடுகள், பிணக்குகள், பிரச்சினைகள், கருத்து வேறுபாடுகள் அதிபர் ஆசிரியர்களுக்கிடையில், அதிபர் மாணவர்களுக்கிடையில் ஆசிரியர்களுக்கிடையில் தோன்றும் வேளை அதிபர் தனது ஆளுமை, அனுபவத்தினூடாக சிறந்த தீர்மானத்தை எடுப்பதன் மூலம் தமது பாடசாலையை பயன்தரு பாடசாலையாக (Effective school) ஏற்படுத்திக் கொள்ள முடியும். தேசிய நோக்கம் பொதுவானது. அதனையடைய நிறுவன மட்டத்தில் கட்டியெழுப்பிய சிறப்பான கல்வி நோக்கங்கள் எய்தப்படுமிடத்து அதனைப் பயன்தரு பாடசாலை எனலாம். இதனை எட்டு வதில் அதிபரின் தீர்மானம் எடுக்கும் தன்மை முக்கிய இடம் வகிக்கின்றது. மாணவர் அபிவிருத்தியின் அனைத்து அம்சங்களிலும் சமநிலையான வளர்ச்சி ஏற்பட ஏது வாக கற்றல் - கற்பித்தல் கருமத் தொடர் பாடசாலையுள் கட்டி யெழுப்பப்படல் வேண்டும். பாட சாலையில் ஏதேனும் பிரச்சினை கள் தோன்றும் வேளை, அதனைத் தீர்க்க அதிபர் எடுக்கும் தீர்மானமானது சில சந்தர்ப்பங்களில் பாடசாலையில் குழப்பத்தை ஏற்படுத்தி பாடசாலைக் கருமத் தொடர் பாதிக்கப்பட்டு உயிரோட்டமாக இயங்கி வந்த அந்தப் பாடசாலையை உயிரற்றதாக மாற்றி விடவும்கூடும். எனவே தீர்மானம் எடுத் தல் என்பது மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும்.

**பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் அதிபருக்கு வேண்டும்**

பொருத்தமற்ற பொறுப்பு வழங்கல், பாகுபாடு காட்டுதல், புரிந்துணர்வின்மை, மனித விழுமியங்களைப் பேணாமை, அளவுக்கு மீறிய எதிர்பார்ப்பு, தொடர்பாடல் குறைபாடு, திறந்த மனத்துடன் கருத்துகளைப் பரிமாறாமை, தனது கருத்துகளைச் சரியாகச் சமர்ப்பிக்காமை, தன்னலம் பேணல், கவனவீனம், மன எழுச்சிச் சமநிலையின்மை போன்ற காரணிகள் அதிபரிடம் குடிகொள்ளுமாயின் பிரச்சினைகள் அதிகரிக்கும். அந்தப் பிரச்சினைகள் பாடசாலையில் பல்வேறு பிரதிகூலமான விளைவுகளைத் தோற்றுவிக்கும். ஆசிரியர் குழாம் பிரிவினைப்படும், கற்பித்தல் நேரம் சீர்குலையும், மானிட இடைத் தொடர்புகள் சீர்குலையும், மகிழ்ச்சியற்ற சூழ்நிலை தோன்றும், மனந்திறந்த தன்மை அற்றுப் போகும். சந்தேகம், நம்பிக்கையின்மை தோன்றும். பாடசாலைக் கடமைகளில் ஊக்கமின்மை ஏற்படும். ஆசிரியரது லீவு அதிகரிக்கும், மேலதிக பொறுப்புக்களை ஏற்க மறுப்பார். பாடசாலை முரண்பாடு பற்றி பெற்றோர் சமுதாயம் அறிந்தால் பாடசாலையின் நன்மதிப்பு குறைவடையும். பாடசாலையின் ஒழுக்கம், ஆசிரியரது கௌரவம் பாதிக்கப்படும். இவ்வாறான பாதிப்புக்களிலிருந்து பாடசாலையைப் பாதுகாக்க அதிபரிடம் பிரச்சினைகளை தீர்க்கும் திறன் அமைந்திருத்தல் வேண்டும்.

நிறுவனத்தின் முதற்தர முகாமையாளர் என்ற வகையில், பிரச்சினைகள் தோன்றுமாயின், பிரச்சினையை செவிமடுத்தல், கருத்து உணர்தல், ஆளணி முகாமைத்துவ நுட்பங்களைப் பிரயோகித்தல், பிரச்சினைகளைப் பகுத்தாய்தல், பிரச்சினைக்கான தீர்வு குறித்துக் கலந்துரையாடல், நடுநிலையாக செயற்படுதல், நெறிப்படுத்துதல், நம்பிக்கையாளராக நடந்துகொள்ளல் அவசியமாகும். ஒரு நிறுவனத் தலைவர் தனது அங்கத்தவர்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் கலையே தலைமைத்துவமாகும். மற்றையோரின் நடத்தை மீது செல்வாக்கு செலுத்துபவர் தலைவராவர். அந்த வகையிலே அதிபர் ஆரோக்கியமான முறையில் பிரச்சினைகள் எழும் வேளை தீர்மானம் எடுத்தல் வேண்டும்.

தீர்மானம் எடுத்தல் அதிபரை மட்டும் சார்ந்ததல்ல. இதன் ஒரு பகுதி ஆசிரியர்களையும் சாரும். சில தீர்மானங்களை அதிபர், ஆசிரியர்களை அல்லது தம்வசமுள்ள குழுக்களைப் பயன்படுத்தாது தானே தனித்து எடுக்கின்றார். இந்த நிலை அதிகமான பலவீனங்களைப் பாடசாலையில் தோற்றுவிக்கும். அவ்வாறில்லாது தேவையானவிடத்து கூட்டுத் தீர்மானம் மேற்கொள்ளல் சிறந்த வழியாகும். பாடசாலைகளில் வரவுக் குழு, கட்டாயக் கல்விக் குழு, ஒழுக்காற்றுக்குழு, முகாமைத்துவக்குழு, சுகாதார மேம்பாட்டுக்குழு, பாடசாலை அபிவிருத்திக் குழு எனப் பல்வேறு வகையான குழுக்கள் உள்ளன. பிரச்சினைகள் தோன்றும் போது, உரிய குழுக்கள் ஊடாக ஜனநாயக ரீதியாக தீர்மானம் எடுத்தல் மூலம் பாடசாலை ஆரோக்கியமாக, உயிரோட்டமாக இயங்கி, எதிர்கால சந்ததியினரை சிறந்த மனப்பாங்கு விழுமியங்களால் ஊட்டப்படுதலும் அவர்களின் அறிவு திறனை விருத்தி செய்து நாட்டின் எதிர்காலத்துக்கு பொருத்தமான செயலாற்றல் உள்ள பிரசைகளை உருவாக்கவும் முடியும்.

---

## கமல், ஹூலுகல்லவின் பெண்கள் விவகாரம்;

# மஹிந்த அரசுக்கு ஏற்பட்டுள்ள சங்கடம்

**ஈ.பி.டி.பி பிரமுகர் கந்தசாமி கமலேந்திரன் நெடுந்தீவு பிரதேச சபை தலைவர் கொலை வழக்கு சம்பந்தமாக கைதாகியிருப்பதும் தேசிய ஊடக மைய பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் ஹூலுகல்ல அதே போன்ற பெண் தொடர்பு காரணமாக தொழில் இழக்க நேர்ந்ததும், அரசின் மேல்மட்டத்தினருக்கு குறிப்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பெரும் மனச்சங்கடங்களை ஏற்படுத்தியிருக்கிறது. இவை பற்றிய சண்டே ரைம்ஸ் கட்டுரையின் நேற்றைய தொடர்ச்சியில் மேலும் சில தகவல்கள் தரப்படுகின்றன.**



வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கந்தசாமி கமலேந்திரன் ஒரு சாதாரண ஈ.பி.டி.பி உறுப்பினராக இருந்தவர் அல்லர். அவர் பயிற்சிபெற்ற கெரில்லா போராளியாக இருந்தவர். அவரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் மற்றும் பலரோடு அப்போது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினர்களாக இருந்துள்ளனர்.

சாவகச்சேரி கல்வயல் பகுதியில் சீவல் தொழிலாளி ஒருவரின் மகன் தான் கமலேந்திரன். போராளிகளுக்கு அவருடைய தாயார் உணவு சமைத்து வழங்குவார். காரைநகர் கடற்படைத் தளத்தின் மீது ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தின் ராணுவ பிரிவான மக்கள் விடுதலை இராணுவத்தினால் (பி.எல்.ஏ) தேவா னந்தா தலைமையில் 1985 பெப்ரவ ரியில் தாக்குதல் நடத்தப்பட்ட போது அதற்கானதிட்டம் அவர்கள் வீட்டில் வைத்துத்தான் தீட்டப்பட்டது. அந்த தாக்குதலின்போது கமலின் சொந்த சகோதரி சோபாவும் பி.எல்.ஏ. பிரதித் தலைவர் சின்னவனும் கொல்லப்பட்டனர். பின்னர் கமலேந்திரனின் பெற்றோர் தமது இன்னொரு மகளுக்கு இறந்த சோபாவின் பெயரைச் சூட்டியிருந்தார்கள். ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்துக்கு நிதிசேகரிப்பதற்காக கம லேந்திரனின் தந்தை 1989 ஆம் ஆண்டில் கைதடிப் பகுதியில் சீவல் தொழிலில் ஈடுபட்டிருந்தார். அதே காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கம் வளர்ச்சியுற்று அந்தப் பகுதியிலும் பரவ ஆரம்பித்தது. கமலேந்திரனின் தகப்பன் உயிருக்கு அஞ்சி இந்திய பாதுகாப்பு படையினரை அணுகினார். இந்தியாவுக்கு இடம் பெயர அவர் விரும்பினார். அது முடியாது போகவே திருகோணமலையில் அகதி முகாமில் சேர்ந்தார். பின்னர் கொழும்பு கொட்டாஞ்சேனையில் விவேகானந்தா பாடசாலை மண்டபத்திலிருந்த முகாமுக்குச் சென்றார். அந்த இடத்துக்கு ஒரு முறை பயணம் மேற்கொண்ட தேவானந்தா அவரை அடையாளம் கண்டு விடுவித்தார்.

**ஹூலுகல்ல ஊழல்**

இன்றைய அரசுக்கு சங்கடம் ஏற்படுத்தியிருக்கும் இன்னொரு விடயம் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் திடீரென மூடப்பட நேர்ந்ததாகும். இந்த மூடுவிழா நவம்பர் முதலாம் திகதியிலிருந்தே நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஊடக மையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் ஹூலுகல்ல சம்பிரதாயமற்ற முறையில் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இருந்தாலும் ஊடக மையம் மூடப்பட்டாலும் தாம் இன்னும் பதவியில் இருக்கிறேன் என்று அவர் விடாப்பிடியாக கூறி வருகிறார். உரிமையாளர் காரை விற்ற பிறகும் ஓட்டுநர் இன்னமும் அந்தப் பதவி [illegible] போன்றதாகும். [illegible] இந்த மையம் 2006 ஆம் ஆண்டு அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்த போர் பற்றிய தகவல்கள் கசியாமல் இருப்பதற்காக உருவாக்கப்பட்டது. போர் முடிவுற்ற போதிலும் ஆயுதப் படைகள் பற்றிய செய்திகள் கசியாத விதத்தில் இந்த மையம் செயற்பட்டு வந்தது.

> **பொலிஸ் திணைக்களத்தினர் திட்டமிடப்பட்ட குற்றங்கள் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 23 அதிகாரிகளும் கொன்ஸ்டபிள்களும் திடீர் இடமாற்றத்துக்குள்ளானதைத் தொடர்ந்து வந்த சில சம்பவங் களை அடுத்து இந்த ஊடக மையம் மூடப்பட்ட தாக தெரியவந்துள்ளது.**

பொலிஸ் திணைக்களத்தினர் திட்டமிடப்பட்ட குற்றங்கள் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 23 அதிகாரிகளும் கொன்ஸ்டபிள்களும் திடீர் இடமாற்றத்துக்குள்ளானதைத் தொடர்ந்து வந்த சில சம்பவங்களை அடுத்து இந்த ஊடக மையம் மூடப்பட்டதாக தெரியவந்துள்ளது.

இந்த பொலிஸ் அதிகாரிகள் மீதான இடமாற்றம் கொழும்பு நகர மண்டபப் பகுதியிலுள்ள ஒரு சூதாட்ட நிலையத்தின் மீது அவர்கள் திடீர் சோதனை நடத்தியதின் காரணமாக இடம்பெற்றதாக உயர் மட்ட தகவல்கள் தெரிவித்தன. அவர்கள் தொடர்பாக முறையான விசாரணையின்றியே இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தாக உயர்மட்ட பொலிஸ் வட்டாரங்கள் கூறின. புதிதாக அந்த இடங்களுக்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகளும் அதே சூதாட்ட நிலையம் மீது திடீர் சோதனை நடத்தியுள்ளனர்.

பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம் கொடுக்கும்படி ஊடக நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் ஹூலுகல்லதான் பொலிஸ் உயர்மட்டத்திடம் கேட்டிருந்தார் என்று அரச வட்டாரங்கள் தெரிவித்தன. உயர் பிரமுகர் ஒருவருடன் தொடர்புடைய சிலர் கைது செய்யப்பட்டதன் பின் நியாயமற்ற முறையில் நடத்தப்பட்டிருப்பதாக அதற்கு அவர் காரணம் தெரிவித் திருந்தார்.

ஆனால் தாம் அப்படி ஒரு கோரிக்கையை முன்வைக்க வில்லை என்று ஹூலுகல்ல மறுத்திருந்தார். இந்த விடயம் நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி. உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்காவால் கிளப்பப்பட்டிருந்தது. சூதாட்ட நிலையம் ஒன்றின் மீது சோதனை நடத்திய பொலிஸார் தூர இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள் என்று அவர் கூறினார். ஓர் அதிகாரி தனது சூதாட்ட வாழ்க்கை முறையை மறைப்பதற்கு தமக்கிருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்றும் அவர் கூறினார்.

இதில் இன்னும் பல விடயங்கள் காமினி நெதிகுமார என்ற வர்த்தகப் பிரமுகர் சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கியிருந்த பேட்டியில் வெளிவந்தன. ஹூலுகல்ல தொடர்பாக இந்த வர்த்தகர் சுதந்திர முன்னணி தலைவர்களுக்கு தெரிவித்திருந்த பல விடயங்களையடுத்து இந்தப் பத்திரிகைப் பேட்டி வந்திருந்தது. ஹூலுகல்லவுக்கும் தமது மனைவிக்குமிடையில் கள்ளத் தொடர்பு இருந்ததாக அவர் பேட்டியில் கூறியிருந்தார். மனைவி சூதாட்டத்தில் இறங்கியிருந்ததால் அவருடனான தொடர்பு ஏற்பட்டது. ஹூலாவின் செல்வாக்கில் சூதாட்ட நிலையத்துக்கு தேவையான பாதுகாப்பும் கிடைத்துள்ளது.

ஹூலுகல்லவுடன் தமது மனைவி கொண்டிருந்த தொடர்புக்கு தம்மிடம் ஆதாரம் இருப்பதாகவும் அவர்கள் தேனிலவு கொண்டாடியது தொடர்பான குரல் பதிவுகள் தம்மிடம் இருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

எங்கள் வீடு எனக்கும் பிள்ளைகளுக்கும் நரகமாக மாறியது. எனது பிள்ளைகள் பொலிஸில் புகார் செய்தார்கள். பொலிஸார் விசாரணைக்கு வரவில்லை. இதற்கெல்லாம் ஹூலுகல்லவின் செல்வாக்கும் அதிகாரமும் தான் காரணம் என்று அவர் கூறியிருந்தார். பொலிஸ் எதுவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் ஆற்ற முடியாத கட்டத்தில் தான் ஜனாதிபதியிடம் முறையிட்டதாகக் கூறினார். ஊடக நிலையத்தின் பணிப்பாளராக இருந்தது மட்டுமன்றி தேசிய கால்நடை திணைக்கள சபையின் பிரதித் தலைவர், வர்த்தக வங்கியில் ஒரு பணிப்பாளர், அரசுசாரா நிறுவன செயலகத்தின் பணிப்பாளர் போன்ற பதவிகளையும் ஹூலுகல்ல வகித்து வந்தார். அவருக்கு வழங்கப்பட்டு வந்த அதிரடிப்படை பாதுகாப்பு கடந்த வாரம் நிறுத்தப்பட்டு விட்டது. அவர் தமக்கு வெளிநாட்டில் தூதர் பதவியொன்றை அனேகமாக மலேஷியாவுக்குக் கேட்டுள்ளார். ஆனால் அது நிராகரிக்கப்பட்டுவிட்டதாக அரச வட்டாரங்களில் இருந்து தெரிய வந்தது. (ப)

**இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?**

தருவது வித்தியா

**மேடம்:** பணப்பற்றாக்குறை நீங்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.

**இடபம்:** தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர்ப் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. உத்தியோகத்தில் திறமைகளை வெளிப் படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.

**மிதுனம்:** திறம்படச் செயற்பட்டு சில வேலைகளை முடிப் பீர்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். அரசு விட யங் களில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.

**கடகம்:** வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். சாதாரணமாகப் பேசுவதைக்கூட சிலர் குதர்க்கமாகப் புரிந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும்.

**சிங்கம்:** நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தி யாகும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். சொத்துச் சம் பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக் கும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும்.

**துலாம்:** யதார்த்தமாகப் பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். விருந்தினர்கள், நண்பர்களின் வருகை யுண்டு. வெளியூர்ப் பயணங்கள் திருப்திகரமாக அமையும்.

**விருச்சிகம்:** மனக்குழப்பங்கள் விலகித் தெளிவு பிறக்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.

**தனுசு:** வெளியூர்ப் பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அலுவலகத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**மகரம்:** பிரியமானவர்களைக் கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக் கப்படுவீர்கள். நீண்டநாளாக நினைத்திருந்த காரியத்தை இப்பொழுது செய்து முடிப்பீர்கள்.

**கும்பம்:** சிக்கலான, சவாலான காரியங்களையெல் லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். மற்ற வர்கள் பிரச்சினையில் தலையிடுவதால் வீண் பழிச் சொல் ஏற்படக்கூடும். உத்தியோகத்தில் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது.

**மீனம்:** அயலார் சிலரின் செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் அடையலாம். அரச காரியங்கள் இழுபறியாகும். அசதி, சோர்வு வந்து நீங்கும். உத்தியோகத்தில் மறைமுகப் பிரச்சினைகள் வந்து போகும்.

**நாளை**

கார்த்திகை-25 திங்கட்கிழமை
11.12.2013
திதி: நவமி பி.ப.12.28 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி
மா.06.44 வரை
சுபநேரம்:
0449- 06.19 வரை
இராகுகாலம்:12.19 -01.49 வரை


# செயல்முறை ஆன்மிகம்



**விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து**

பிறரை மதிப்பிடுவதில் நாம் இந் தத் தவறுக்கு எப்போதும் ஆளாகி வருகிறோம். நமது சின்னஞ் சிறிய மன உலகம் மட்டுமே உள் ளது என்று கருத எப்போதும் விரும்பு கிறோம். நாம் கடைப்பிடிக்கும் நீதி, நல்ல றம், கடமை உணர்ச்சி, பயன் நோக்கு – இவை மட்டுமே பெறுதற்குரியவை என்கி றோம். ஐரோப்பாவுக்குச் சென்றிருந்த போது ஒரு நாள் நான் 'மார்செயில்ஸ்' என்னுமிடம் வழியாகப் போய்க்கொண்டி ருந்தேன். அங்கே காளைப் போர் (Bull-Fight) நிகழ்ந்து வந்தது. கப்பலில் இருந்த ஆங்கிலேயர்கள் பரபரப்பும், வெறியும் கொண்டவர்களாக அந்தச் செயலைக் கொடூரமானது எனப் பழித்தும் கண்டித்தும் பேசினர். மல்யுத்தக் குழுவொன்று பரிசுக் காக பாரிஸ் நகருக்குச் சென்றிருந்ததாக வும், அதனை மிருகத்தனமாகக் கருதிய பிரெஞ்சுக் காரர்களால் மரியாதையின்றி உதைத்து விரட்டப்பட்டதாகவும் நான் இங் கிலாந்துக்குச் சென்றிருந்தபோது கேள்விப் பட்டேன். இவற்றைப் பல நாடுகளிலும் கேள் விப்படும்போது, 'உன்னைப் பற்றிப் பிறர் தீர்ப்புச் சொல்லாதிருக்க வேண்டுமானால், நீ பிறரைப் பற்றித் தீர்ப்புச் சொல்லாதே" என்னும் கிறிஸ்துவின் உபதேச மொழியைப் புரியத் தொடங்குகிறேன். கற்கும் அளவிற்கு ஏற்ப, நமது அறியாமையையும் நம் மனத் தின் பல உருவங்களையும் பலவாறு பேசும் இயல்பையும் நாம் அறிந்து கொள் கிறோம். நான் இளைஞனாக இருந்த போது எனது நாட்டினரின் தவப் பயிற்சி களைக் குறை கூறுவதுண்டு. எங்கள் நாட்டிலுள்ள பெரிய பிரசாரகர்களும் அவற்றைக் குறை கூறியுள்ளார்கள். பிறந்தவர்களுள் மிக உயர்ந்த மனிதரான புத்தரே அவற்றைக் கண்டித்திருக்கிறார். ஆனாலும் வயது முதிர முதிர, தீர்ப்புக் கூற எனக்கு உரிமையில்லை என்ற உணர்ச் சியே என்னிடம் வளர்கிறது. பொருத்தம் இல்லாத பல அவர்களிடம் இருந்தாலும் செயல்புரியவும் துன்பம் அனுபவிக்கவும் அவர்கள் பெற்றுள்ள திறமையில் சிறி தளவாவது நான் பெறவில்லையே என்று சில வேளைகளில் ஏங்குவதுண்டு. எனது தீர்ப்பும் கண்டனமும் உடலை வருத்துவ தில் உள்ள ஏதோ வெறுப்பிலிருந்து எழ வில்லை. மாறாக என்னால் செய்ய இய லாமையாலும் துணிவின்மையாலும் எழும் வெறும் கோழைத்தனத்திலிருந்து உதிப்பதாகவே நான் கருதுகிறேன். ஆகவே, வலிமையும் திறனும் துணிவும் மிகவும் விந்தையான பொருள்கள் என்பதைக் காண்கிறீர்கள்.

# சூப்பர் ஸ்ராரின் புகழ்பாடும் கன்னடப் பாடல்



கன்னடப் படத்தில் சூப்பர் ஸ்ரார் ரஜினி காந்துக்காக பாடல் ஒன்று அர்ப்ப ணிக்கப்பட்டுள்ளது.

ரஜினிகாந்தின் நண்பரான ராஜ் பகதூர் நடிக்கும் புதிய கன்னடப் படத்தில் ரஜினிகாந்தைச் சிறப்பிக்கும் வகையில் ஒரு பாடல் எழுதப்பட்டுள்ளது.

'பெல்லிடரே பெல்லியபெகு ரஜினிகாந் தரங்கே' என்று ஆரம்பிக்கும் இந்தப் பாடலில் மற்றவர்கள் மத்தியில் அவர் காட்டும் எளிமை, தன்னடக்கம் போன்ற அவரது நற்பண்புகள் போற்றப்பட்டுள் ளன. இயக்குநர் ருஷியால் எழுதப்பட்ட இப்பாடலுக்கு பிரதீப் ராஜா இசையமைத்துள்ளார்.

இதுகுறித்து இயக்குநர் கூறுகையில், இப்பாடலின் சிறப்பம்சமாக ரஜினிகாந்தின் ரசிகர்கள் 1000 பேர் நடனமாடியுள்ளனர் என்றும் இந்தப்படத்தில் வரும் 12 முக்கிய கதாபாத்திரங்களில் ஒரு வேடத்தில் ரஜி னியின் நண்பர் ராஜ் பகதூர் நடிக்கின்றார் எனவும் கூறியுள்ளார்.

# அப்பிள் தளத்தில் மண்டேலா

முதற்தர கணினிச் சாதனங்களை உற்பத்தி செய்யும் நிறுவ னமான அப்பிள், தனது உத்தியோகபூர்வத் தளத்தின் முதற் பக்கத்தில் தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் படத்தைப் பிரசுரித்துள்ளது.

95 வயதான நெல்சன் மண்டேலா சில தினங்களுக்கு முன்னர் உடல் நலக்குறைவால் உயிரிழந்தார். இந்நிலை யில் அவரைக் கௌரவித்து அனுதாபம் தெரிவிக்கும் முக மாக தனது தளத்தில் இருந்த அனைத்து உற் பத்திக ளுக்குமான விளம்பரங்களையும் நீக்கி அவ்விடத்தில் மண்டேலாவின் படத்தை மட்டும் பிரசுரம் செய்துள்ளது.

1918 ஆம் ஆண்டு பிறந்த நெல்சன் மண்டேலா கறுப்பின மக்களின் விடிவுக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித் ததுடன் 1994 ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டு வரை தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியாகவும் திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




# சுடோக்கு

**எண் விளையாட்டு**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 5 | 9 | | 4 | | |
| | | | | 4 | 6 | | 8 | 5 |
| | | | | | 7 | | | 9 |
| 2 | | 6 | | 3 | | 7 | | 8 |
| 9 | 3 | | | 7 | | | 1 | 2 |
| 7 | | 1 | | 5 | | 9 | | 3 |
| 5 | | | 4 | | | | | |
| 6 | 9 | | 1 | 8 | | | | |
| | | 8 | | 2 | 3 | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 9 | 6 | 2 | 7 | 1 | 4 | 8 |
| 6 | 1 | 8 | 5 | 9 | 4 | 7 | 2 | 3 |
| 2 | 4 | 7 | 1 | 3 | 8 | 5 | 6 | 9 |
| 8 | 5 | 2 | 3 | 7 | 1 | 6 | 9 | 4 |
| 9 | 7 | 3 | 4 | 5 | 6 | 8 | 1 | 2 |
| 4 | 6 | 1 | 2 | 8 | 9 | 3 | 5 | 7 |
| 3 | 9 | 6 | 8 | 1 | 2 | 4 | 7 | 5 |
| 1 | 2 | 5 | 7 | 4 | 3 | 9 | 8 | 6 |
| 7 | 8 | 4 | 9 | 6 | 5 | 2 | 3 | 1 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண் டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய [illegible] நிரப்ப வேண்டும் [illegible] ஜப்பானியச் [illegible] 1986இல் ஜப்பானிய நிறுவன நி[illegible]லி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்[illegible]து. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## செலான் வங்கிக்கு புதிய பணிப்பாளர்கள்





செலான் வங்கியானது, தனது பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களாக பி.எல். சிசிரகுமார் பெரேரா மற்றும் திருமதி கொரலி பீற்றர்ஸ் ஆகியோரை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியில் நிறைவேற்று அதிகாரி மற்றும் முகாமைத்துவ பதவிகளில் 22 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தைக் கொண்டவரான பெரேரா, கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கணிதத்தில் (சிறப்புக் கற்கையுடன்) விஞ்ஞான இளமாணிப் பட்டத்தைப் பெற்றவராவார். அதே வேளை, இபடான் பல்கலைக்கழகத்தில் இருந்து புள்ளிவிபரவியலில் முதுமாணிப் பட்டத்தை பெற்றுக் கொண்டுள்ளதுடன் மன்செஸ்டர் பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியல் மற்றும் சமூக கல்வியில் (பொருளாதாரம் மற்றும் பொருளாதார கணிதவியல்) முதுகலைமாணி பட்டமொன்றையும் பெற்றவராக இவர் திகழ்கின்றார்.

மூலதன சந்தைகள், 'போர்ட்போலியோ முகாமைத்துவம்' மற்றும் புதிய நிதியியல் கருவிகள் போன்றவை தொடர்பில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பரந்துபட்ட பயிற்சியையும் அறிவையும் இவர் பெற்றுக் கொண்டுள்ளார். இலங்கை மத்திய வங்கியிலிருந்து ஓய்வுபெறும் வேளையில் நாணயமாற்று நடவடிக்கைக்கான மேலதிக கட்டுப்பாட்டாளராக இவர் பதவி வகித்தார். அத்துடன், இலங்கை மத்திய வங்கியில் கடமையாற்றுவதற்கு முன்னதாக இவர் விவசாய அபிவிருத்தி அதிகார சபையில் சந்தைப்படுத்தல் பிரதிப் பணிப்பாளராகப் பதவி வகித்துள்ளார். இப்போது பிரபலமான தனியார் துறை நிறுவனங்களின் ஆலோசகராக திரு. பெரேரா கடமையாற்றுகின்றார்.

இதேவேளை திருமதி கொரலி பீற்றர்ஸ் - தனியார் மற்றும் அரச துறைகளிலுள்ள பல்வேறு நிறுவனங்களில் சிரேஷ்ட மட்டத்திலான பதவிகளை வகித்தவராவார். இப்பதவிகளுள் வங்கியியல் துறையில் சிரேஷ்ட மட்டங்களிலான அதிகாரியாக பெற்றுக் கொண்ட அனுபவமும் உள்ளடங்கும். அந்தவகையில், கூட்டாண்மை நிதி, கணக்கியல் மற்றும் கணக்காய்வு போன்ற துறைகளில் 20 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தை இவர் தன்னுடன் கொண்டு வருகின்றார்.

இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இணை உறுப்பினராகவும், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் ஒரு அங்கத்தவராகவும் செயற்படுகின்ற திருமதி கொரலி பீற்றர்ஸ், பல்வகைப்பட்ட வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள கூட்டு நிறுவனமான பின்லேய்ஸ் கொழும்பு பி.எல்.சி. இன் நிதிப் பணிப்பாளராக தற்போது கடமையாற்றுகின்றார். இவர் சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் இருந்து பௌதீகவியலில் விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டத்தைப் பெற்றுள்ளதுடன் எடின்பேர்க், ஹெரியொட்-வட் பல்கலைக்கழகத்தில் முதுமாணி (MBA) பட்டத்தைப் பூர்த்தி செய்துள்ளார். (த)



## இலங்கையில் கௌரவிக்கப்பட்ட சிறந்த 60 விநியோகஸ்தர்கள்

Ashland Inc. (NYSE: ASH) நிறுவனத்தின் வர்த்தகப் பிரிவு Ashland Consumer Markets மூலம் அண்மையில் கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற சம்பியன் விநியோகஸ்தர் விருதுகள் வழங்கும் விழாவில் இலங்கையின் மிகச்சிறந்த ValvolineTM விநியோகஸ்தர்கள் 60 பேர் கௌரவிக்கப்பட்டனர்.

இவ் உச்சி மாநாட்டில் 20 ற்கும் மேற்பட்ட ஆசிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி இருபத்தினான்கிற்கும் மேற்பட்ட விநியோகஸ்தர்கள் பங்குபற்றியிருந்தனர்.

Ashland நுகர்வோர் சந்தை மற்றும் Valvoline வர்த்தக நாமத்திற்கான மிக முக்கிய சந்தையாக ஆசியா விளங்குகிறது என ஆசியாவிற்கான Valvoline பிராந்திய பணிப்பாளர் ஆலோக் ஷர்மன் தெரிவித்தார். Valvoline சம்பியன் விநியோகஸ்தர் விருது விழாவில் இலங்கையைச் சேர்ந்த எமது சிறந்த விநியோகஸ்தர்களை கௌரவித்தமை குறித்து நாம் பெரும் மகிழ்ச்சியடைகிறோம். Valvoline வெற்றிக்கான பங்களிப்பு, சந்தை அங்கீகாரம் மற்றும் சிறந்த செயற்பாடுகள் காரணமாக இவ் விநியோகஸ்தர்கள் கௌரவிக்கப்பட்டனர். மோட்டர் சைக்கிள்கள், கார்கள் மற்றும் டீசல் என்ஜின்கள் போன்றவற்றிற்கான எமது மிகச்சிறந்த தயாரிப்புக்களுக்கான சந்தை வாய்ப்பை மேலும் விஸ்தரிக்க எதிர்பார்த்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

இம் மாநாட்டில் Valvoline அதிகாரிகள் மற்றும் விநியோகஸ்தர்களிடையே பிராந்திய அடிப்படையிலான புதிய Valvoline உற்பத்திகள் மற்றும் தொழில்நுட்ப மேம்படுத்தல்கள் தொடர்பான எதிர்கால திட்டமிடல்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

ஆசிய விநியோகஸ்தர் மாநாட்டை கொழும்பில் நடத்தி ஆசியாவில் வளர்ந்து வரும் சந்தைகளுள் ஒன்றாக இலங்கையை அடையாளப்படுத்திய Valvoline குறித்து யுனைட்டட் மோட்டர்ஸ் லங்கா மிகவும் மகிழ்ச்சியடைகிறது என யுனைட்டட் மோட்டர்ஸ் லங்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான சானக யட்டவர தெரிவித்தார். (த)

## கொமர்ஷல் வங்கி அட்டைகளை வைத்திருப்பவர்களுக்கு கழிவுகள்




கொமர்ஷல் வங்கி அதன் கிரடிட் மற்றும் டெபிட் கார்ட்டுகளை வைத்திருப்பவர்களுக்கு பருவ காலத்தின் பாரிய கழிவுகளை அறிமுகம் செய்துள்ளது. துணிமணிகள், பாதணிகள், அலங்காரப் பொருள்கள் வாசனைத் திரவியங்கள் என்பனவற்றை கொள்வனவு செய்து கொள்ளக் கூடிய நாட்டின் பிரபலமான 24 காட்சியறைகளில் இந்தக் கழிவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கொமர்ஷல் வங்கி கிரடிட் கார்ட் வைத்திருப்பவர்கள் 10 வீதம் முதல் 25வீதம் வரையான கழிவையும், டெபிட் கார்ட் வைத்திருப் பவர்கள் 10 முதல் 20 வீதம் வரையான கழிவையும் இந்த ஊக்குவிப்புக் காலத்தின் போது பெற்றுக் கொள்ள முடியும். இந்த ஊக்குவிப்புக் காலம் 2013 டிசம்பர் 6 முதல் 22 ஆம் திகதி வரையாகும்

அடிடாஸ், பெவர்லி ஸ்ட்ரீட், CIB, கூல் பிளனட், குரொகடைல், டிலி கான்ஸ், DSI, பெஷன் பக், கிளிட்ஸ், ஹமீடியா, கிரியேஷன், மொண்டி, நியு ஸ்ரீயானி டிரஸ் பொயின்ட், நோலிமிட், பள்ளு, பிளனட் பெஷன், ரன்ஜனாஸ், ரொமாபோர், ஷேர்ட்வேர்க்ஸ், சிக்னேச்சர், ஸ்பிரிங் அன்ட் சமர், 7 ஸ்டோரீஸ், த பெக்டரி அவுட்லட், த பெர்பியுமரி, மற்றும் ரேமன்ட் ஷொப் ஆகிய நிறுவனங்களே இந்தத் திட்டத்தில் இணைந்துள்ள நிறுவனங்களாகும்.

ரன்ஜனாஸ் 7 ஸ்டோரீஸ் ஷேர்ட் வேர்க்ஸ், மற்றும் குரொகடைல், ஆகிய நிறுவனங்களில் டிசெம்பர் 6 முதல் 8 வரை இந்தக் கழிவுகள் கிடைக்கும், CIB, DSI, பெஷன் பக், நியு ஸ்ரீயானி டிரஸ் பொயின்ட், நோலிமிட், பள்ளு, ஆகிய நிறுவனங்களில் டிசம்பர் 9 முதல் 15ஆம் திகதி வரை கழிவுகள் கிடைக்கும், மொண்டியில் இந்தக் கழிவுகள் டிசெம்பர் 10 மற்றும் 11 ஆகிய தினங்களில் கிடைக்கும் என்று வங்கி அறிவித்துள்ளது.

ஹமீடியா, அடிடாஸ், பிளனட் பெஷன், ரேமன்ட் ஷொப், சிக்னேச்சர், த பெக்டரி அவுட்லட், த பெர்பியுமரி, ஆகிய இடங்களில் கொமர்ஷல் வங்கியின் கிரடிட் மற்றும் டெபிட் கார்ட்டுகளுக்கான கழிவுகள் டிசம்பர் 13 முதல் 15ஆம் திகதி வரையிலும், பெவர்லி ஸ்ட்ரீட், ஸ்பிரிங் அன்ட் சமர், கூல் பிளனட், டிலிகான்ஸ், ரொமாபோர், ஆகிய இடங்களில் கழிவுகள் டிசம்பர் 16 முதல் 22 வரையிலும் கிடைக்கும் என்று வங்கி அறிவித்துள்ளது. (த)

## சனச வங்கியுடன் கைகோர்த்துள்ள லபார்ஜ்

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு குறைந்த செலவில் வீடுகளை அமைத்துக் கொடுக்கும் செயற்றிட்டத்தை நாடு முழுவதும் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் சனச அபிவிருத்தி வங்கியும் லபார்ஜ் மஹாவலி சீமெந்து நிறுவனமும் கைச்சாத்திட்டன.

கொழும்பு கிருலப்பனையில் அமைந்துள்ள சனச அபிவிருத்தி வங்கியின் பிரதான அலுவலகத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் லபார்ஜ் மஹாவலி சீமெந்து நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் அனுராக் காக் மற்றும் சனச அபிவிருத்தி வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளருமான மஹேந்திர கல்கமுவ ஆகியோர் அண்மையில் கைச்சாத்திட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த லபார்ஜ் மஹாவலி சீமெந்து நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் அனுராக் காக் ' கட்டுப்படி விலைக்கான இந்த வீடமைப்பு திட்டங்களை உலகம் முழுவதும் லபார்ஜ் நிறுவனம் சிறந்த முறையில் முன்னெடுத்துள்ளது. இலங்கையிலும் தற்போது அமுல்படுத்தியுள்ளோம். சனச அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து நாம் முன்னெடுக்கும் இந்த நடவடிக்கையால் வறிய மற்றும் சாதாரண தர குடும்பத்தினரின் கனவு இல்லம் நனவாகப்போகின்றது. நிர்மாணம் தொடர்பாக எம்மில் அநேகருக்கு குறைவான அறிவே காணப்படுகின்றது. எமது இந்த திட்டத்தின்மூலம் சனச வங்கி வாடிக்கையாளர்களுக்கு வீட்டுக்கான வரைபு திட்டத்தை துறைசார் நிபுணர்களின் உதவியுடன் வழங்கவுள்ளோம். அத்துடன் வீடு கட்டப்படும் நாள் முதல் அது முடிவடையும் காலம் வரை அங்கு சென்று தேவையான அனைத்து தொழில்நுட்ப உதவிகளையும் வழங்க எதிர்பார்க்கின்றோம்' என குறிப்பிட்டார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் லபார்ஜ் நிறுவனத்தின் உயரதிகாரிகளும், சனச அபிவிருத்தி வங்கியின் உயரதிகாரிகளும் அடங்கலாக பலர் கலந்துகொண்டனர். (த)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலை நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்

கைதடி நவபுரம் நவசக்தி முன்பள்ளியின் கலை நிகழ்வும் பரிசில் நாளும் இன்று செவ்வாய்க் கிழமை நவபுரம் அ.த.க.பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும். முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவி திருமதி மதனா அன்பழகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சின் ஆரம்பப் பிள்ளை அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் செல்வி.ஜெயா தம்பையா, பண்டாரவளை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.மதியழகன் ஆகியோர் கலந்துகொள்வர். (ந-9)


**LOLC**

மாபெரும் வாகனச்சந்தை கிளிநொச்சியில்

LANKA ORIX FINANCE

LOLC மைக்ரோ கிரெடிட்

உங்களுக்கு உகந்த வகையில் உபயோகிக்கப்பட்ட அநேகவிதமான மோட்டார்சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள், உழவு இயந்திரங்கள் டிமோபட்டா உள்ளடங்கலாக 50 வாகனங்கள்,அவ்விடத்திலேயே கொள்வனவு செய்யக்கூடியதொரு அரிய சந்தர்ப்பம்.

2013 டிசெம்பர் மாதம் 09ம் திகதியிலிருந்து
2013 டிசெம்பர் மாதம் 20ம் திகதி வரை.

A-9 ,கண்டி வீதி,கரடிப்போக்கு, கிளிநொச்சியில் அமைந்துள்ள வாகன தரிப்பிடத்தில்

தொடர்புகளுக்கு
மயூரன் - 0776 50 68 39
சந்திமா - 0665 11 80 80

(C/14128)


## வரணியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

வரணிப் பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கை மும்முரமாக மேற்கொள் ளப்பட்டது. சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகப் பணியாளர்கள் சகல இடங்களிலும் இந்தப் பணியில் ஈடுபட்டனர்.

சகல வீடுகளுக்கும் இவர்கள் சென்று சுற்றாடலைப் பரிசோதித்ததுடன் நோய் பரவாமல் இருக்க வீட்டிலுள் ளோர் எவ்வாறு தமது சுற்றாடலை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் எனவும் ஆலோசனைகளை கூறினார். "நாங்கள் டெங்கு பற்றி அறிந்து கொள்வோம்" என்னும் தலைப்பிலான துண்டுப் பிரசுரமும் வழங் கப்பட்டது. வீட்டுச் சுற்றாடலை பரிசோதித் தமை தொடர்பில் குடும்பதத் தலைவரின் கையொப்பத்தையும் பெற்றுச் சென்றனர். (ந-122)


**கார் விற்பனைக்கு**

10sri - xxxx நல்ல நிலையிலுள்ள மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 620 7685 (41053) (7.6.3)

**ஐஸ்கிறீம் வான் விற்பனைக்கு**

NP P.T எனும் தொடர் இலக்கம் உடைய வான் டீபிறிச் மற்றும் என்ஜின் இவற்றுடன் கூடியது.
(40998) (12.3.6) தொடர்பு:077 155 4649

**Personal Class**

புதிய கல்வியாண்டுக்கான தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு English Class உம் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு:சங்கிலியான் வீதி, நல்லூர்.
(10999) (12.3.6) 077 327 1608

**TVகள் மலிவு விலையில்**

மிக மிக மலிவு விலையில் SONY பனசோனிக் TV கள் 21"-14,000/=, 29" - 15,000/=, DVD - 3,000/= குளிர்சாதனப் பெட்டிகள், CD, ரேடியோ-கசெற் Box அம்பிளிபயர் என்பன. (40996) (7.6.3)
தொடர்பு : 077 044 0570
ரேவி ரேற் சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)
56, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.


## நுளம்புக் குடம்பிகளை அழிக்க மீன்குஞ்சுகள்

தென்மராட்சிப் பிரதேசத்தில் மழை வெள்ளம் தேங்கி நிற்கும் நிலைகள் மற்றும் பயன்படுத்தப்படாமல் உள்ள கிணறுகள் ஆகியவற்றில் காணப்படும் நுளம்புக் குடம்பிகளை அழிக்கக் கூடிய மீன் குஞ்சுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் இந்த மீன்குஞ்சுகள் இலவசமாக பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. பிரதி சனிக்கிழமை தோறும் மீன்குஞ்சுகள் விநி யோகிக்கப்படுவதால் தேவையானோர் பணிமனையில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

## அமர்வு நாள் மாற்றம்

சாவகச்சேரி மத்தியஸ்தர் சபையினால் எதிர்வரும் 15 ஆம் திகதி எடுக்கப்படவிருந்த பிணக்குகள் 22 ஆம் திகதி அமர்வில் எடுக் கப்படுமென சபையின் தவிசாளர் ப.நடராஜா அறிவித்துள்ளார். க.பொ.த.சாதாரண பரீட்சை நடைபெறுவதால் திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளார். (ந-9)


**Vacancies**

எமது நெல்லியடி பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Course Counselor - Female**

பாடநெறிகள் பற்றிய விளக்கங்களை மாணவர்களுக்கு அளிப்பதுடன் மாணவர் தொடர்பு அலுவலராக பணிபுரிய உயர்தரம் மற்றும் கணனி டிப்ளோமா கற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். கொழும்பு தலைமை காரியாலயத்தில் ஆரம்ப பயிற்சிகள் அளிக்கப்படும்.

**Lecturer for Computer Programming - Male / Female**

**Management Trainee - Male**

**Instructor for Tally & QB - Male / Female**

சுயவிபரக்கோவையை 7 நாட்களுக்குள் அனுப்பிவைக்கவும்

**ASIAN COMPUTER EDUCATION**

e-mail : asianedu@dialogsl.net

(C/14324)



நீங்கள் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவரா?
கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தி பெற்றிருக்கிறீர்களா?
24 வயதுக்கு உட்பட்டவரா?



CISI
CHARTERED INSTITUTE FOR SECURITIES & INVESTMENT

ADB EKSP
Education for Knowledge Society Project

GATEWAY CfiCT

**இலவசம்**

கல்வி அமைச்சின்
செயற்திட்டத்தின் கீழ்
**முற்றிலும் இலவசமாக** வழங்கப்படும்
**புலமைப் பரிசில்கள்** பற்றிய
மேலதிக விபரங்களுக்கு....

**GATEWAY**

347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 021 567 5555

01, நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி. 021 567 8444

55, பருத்தித்துறை வீதி நெல்லியடி, 021 5677606

கரடிப்போக்குச் சந்தி, கண்டி வீதி,கிளிநொச்சி 021 5674433

(C/14332)

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த ஆர்வமுடைய மாணவர்கள் தமது சுயவிபரக்கோவைகளுடன் தொடர்பு கொள்ளவும்

0787 692 692 / 0787 697 697


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயம் மறவா 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**பாக்கியம்**
**இராசரத்தினம்**

மலர்வு:- 07*08*1932
உதிர்வு:- 08*12*2005
திதி: பூர்வபட்ச அட்டமி
(10.12.2013 செவ்வாய்க்கிழமை)

அன்புடனும் பண்புடனும் எம்மை அரவணைத்து
காத்த எங்கள் அம்மா உங்கள் நினைவு என்றும்
எமது மனங்களில் ஒளிர்ந்து கொண்டே இருக்கும்
என்றுமே எங்கள் தெய்வம் நீங்கள் அம்மா
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"மலர் வாசம்",
மகாஜனக் கல்லூரி வீதி,
தெல்லிப்பழை.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**வயிரவநாதன்**
**ஜெயந்தி**

மலர்வு
12.12.1979

உதிர்வு
10.12.1998



ஆண்டுகள் பதினைந்து அகன்றோடிப் போனாலும்
ஆறுமோ நெஞ்சம் ஈண்டு உமது நாள் எம்
நெஞ்சை வாட்டுகிறதே மண்ணுக்காய் மரணித்த
மங்கையே மாண்புடன் வாழ எண்ணியிருந்தோம்
எம் நினைவு நிறைவேறாது போயிற்றே
அரச கேசரியான் பாதத்தில் அமைதி பெறுக.

கரந்தன் சந்தி.
நீர்வேலி தெற்கு.
நீர்வேலி.

அப்பா, அம்மா,
சகோதரிகள், தம்பி,
மச்சான்மார், உற்றார், உறவினர்.

(40944)(12.3.6)


# சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய நபருக்கு பத்து வருட கடுழிய சிறை

## *வவுனியா மேல்நீதிமன்றம் தீர்ப்பு*

அம்பாறை, டிசெ.10

பதினாறு வயதுக்குட்பட்ட சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய நபர் ஒருவருக்கு பத்து வருட கடுழிய சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்பட்டது. வவுனியா மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த இது தொடர்பான வழக்கில் மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சிறுமிக்கு நஷ்டஈடாக 75 ஆயிரம் ரூபாவை எதிரி செலுத்த வேண்டும் என்று நீதிபதி தீர்ப்பில் உத்தரவிட்டார்.

சிறுமியின் தாயின் தம்பியான எதிரி தாய் கூலி வேலைக்காக சென்றிருந்ததால் சிறுமி வீட்டில்

> "–"
> வழக்குத் தொடுநர் சாட்சியங்கள் சந்தேகத்துக்கு இடமின்றி நிருபணமாகியுள்ளதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

தனிமையிலிருந்த போது வீட்டுக்கு வந்து சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார். இதன் போது வேலைவிட்டு வீடு திரும்பிய தாய் இந்தச் சம்பவத்தை நேரில் கண்டதையடுத்து கனகராயன் குளம் பொலிஸுக்கு சிறுமியுடன் சென்று முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து தண்டனைக் கோவைச் சட்டத்தின் பிரிவுகளின் கீழ் எதிரி குற்றஞ்சாட்டப்பட்டு வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

வவுனியா மேல் நீதிமன்றத்தில், மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்ற போது எதிரி தம்மீதான குற்றச்சாட்டை முற்றாக மறுத்து வந்தார்.

இதனை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாத நிலையில், சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை உட்பட வழக்குத் தொடுநர் சாட்சியங்கள் சந்தேகத்துக்கு இடமின்றி நிருபணமாகியுள்ளதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

கடந்த வியாழக்கிழமை வவுனியா மேல் நீதிமன்றத்தில் மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. (ச-30)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
05 . 11 . 1929



ஆண்டவன் அடியில்
20 . 12 . 2012

அமரர் **சுப்பையா**
**வேலாயுதபிள்ளை**

திதி : 10.12.2013

அன்பிற்கு ஓர் அடையாளமாய் - எம்மை
அரவணைத்த தெய்வமே
ஈராறு மாதங்கள் கடந்தும்
மீளவில்லை நாம் உங்கள் நினைவில்
நீங்கள் இல்லை என்பதையே
உணர மறுக்கிறது நம் இதயம்
உங்கள் மடியில் நாம் இளைப்பாற
வேண்டும் என்றோம் - ஆனால்
இறைவன் மடியில் இளைப்பாற நீங்கள்
சென்றதேனோ? ஆறவில்லை எம் இதயம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (10.12.2013) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. A2, பாரதி ஒழுங்கை,
கூ.மாங்குளம், வவுனியா.

குடும்பத்தினர்.

(40590) (7.6.3)

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம்

(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய உத்தியோகத்தர்)



பூநகரியைப் பிறப்பிடமாகவும், இல. 99, திருநகர் வடக்கு கிளிநொச்சியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம் 07.12.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை- பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும் சிவநேசத்தின் பாசமிகு கணவரும் நாகேந்திரன் (மீனாட்சி நகை மாடம் கிளிநொச்சி), நவரத்தினம் (நித்தியா நகை மாடம் கொழும்பு) ,காலஞ்சென்ற சண்முகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆனந்தலட்சுமி (கொட்டகலை), சிவகுமாரி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அம்பிகைபாலன் (பிரான்ஸ்), சிவகந்தராசா (லண்டன்), எழில் நேசன் (லண்டன்), கலாநிதி, நேமிநாதன், பேரானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் கலாராணி, கீதாஞ்சலி, மலர், சாளினி, காலஞ்சென்ற நிர்மலராசா ஆகியோரின் மாமனும் குகனேஸ்வரன், பாமினி ஆகியோரின் பெரியதந்தையும் சாயிதா, சாயிமதுசன், ஜெனார்த்தனன், ஜெசிந்தா, செந்தூரன், செந்தூரி, ஜெயதீபன், குலசேகரி, குலதர்சன், சிவமைந்தன், தர்சிகா, துளசி, கவிராஜ், பிரியங்கா, சரண்ராஜ், கார்த்திகா ஆகியோரின் பேரனும் அபிசாஜி, சஞ்சாய் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(29701)(2.6.3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**செல்லையா**
**இராசதுரை**

தோற்றம்
10.06.1929

மறைவு
20.11.2012

திதி : அட்டமி

எண்ணத்துக்கெட்டாத ராஜதீபம் - அப்பா
விண்ணுக்குள் உறைகின்ற விடிவெள்ளி
கண்ணுக்குள் அமைந்துள்ள மணிபோல - எம்
எல்லோரின் வாழ்விற்கும் அவர் ஒளி

பதமான நிலத்திலே பயிர்விளைதல் போல - உம்
மிதமான அரவணைப்பில் நாம் வளர்ந்தோம்
புண்பட எதையுமே உரைக்கமாட்டீர்
செம்மையாய் வாழ்கவென அறிவுரைப்பீர்

மிடிமையிலும் நீரெவர்க்கும் அடிமையாய் ஆனதில்லை
உம் வழியே உம்மக்கள் மேன்மையாய் வாழ்கின்றோம்
அன்னையவள் தனிமையென்று கலங்கி வருந்த வேண்டாம்
எம்முடன் அழைத்தவரைக் கருத்துடன் நாம் காப்போம்

ஆண்டொன்று ஆனதப்பா - உங்கள்
அன்பு வார்த்தை நாம் கேட்டு
ஆனாலும் என்றும் எமக்கெதிரொலிக்கும்
உம்முடைய ஆசி வார்த்தை.

கார்த்திகைக் கந்தனுமை கவர்ந்து சென்றான் கைலாயம்
ஆண்டவன் சந்நிதியில் உம்மாத்மா சாந்தி கொள்ளும்
உம்மைச் சிரமேற்றி வாழ்த்தியே வணங்கி நிற்போம்
[illegible] அமைதி கொள்க!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கைதடி மேற்கு.
கைதடி.

குடும்பத்தினர்.

(10991) (7.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு வாடகைக்கு**

கச்சேரிக்கு அண்மையில் இல.55, சோம சுந்தரம் லேனில் 7 அறைகொண்ட மாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: (41067)(10.6.3)
021 222 6438, 077 5573140

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, சிவன் கோயிலுக்கு அருகில் காங்கேசன்துறை வீதியில் 2 ¼ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. கல்யாண மண்டபம், கடை கட்ட உகந்தது.

தொடர்பு:-077 686 5072, 077 609 3024
(தரகர் தேவையில்லை) (41060)(2.6.3)

**தவறிவிட்டது**

இளவாலை மேற்கு, இளவாலையைச் சேர்ந்த மரியதாஸ் தாஸ்குமார் என்பவரது தேசிய அடையாள அட்டை (771131000V), மோட்டார் வாகன அனுமதிப் பத்திரம் (B2230047), வாகன வரிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பன கறுப்பு நிற பேசுடன் மருதனார்மடம் பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கும், இளவாலைக்கும் இடையில் கடந்த புதன்கிழமை (04.12.2013) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தந்துதவுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தொடர்பு: (41065)(12.3.6)
021 490 9822/077 571 7748

# குருநகர் பிரதேசத்தில் நடைபெற்ற டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள்

குருநகர் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்புச் செயற்பாட்டு நடவடிக்கையின் போது ஆயிரத்து 378 வீடுகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக பிரதேசத்தின் பொது சுகாதார பரிசோதகர் ஜே.ராஜா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

நுளம்பு ஒழிப்புச் செயற்பாட்டு நடவடிக்கையின் போது பிரதேசத்தில் உள்ள வீடுகள், ஆலயங்கள், பொது நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் என்பன சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதில் 71 வீடுகளில் டெங்கு பெருகுவதற்கான சூழல் காணப்பட்டது. இவற்றை உடனடியாகச் சீர் செய்யுமாறு சம்பந்தப்பட்ட வீட்டு உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

இந்த நுளம்பு ஒழிப்பு செயற்பாடுகளை இந்தப் பிரதேசத்தில் தினமும் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளின் போது இந்தப் பகுதியில் உள்ள பொது இடங்கள், வீதிகள், வடிகால்கள், குடியிருப்பு சுற்றாடல்கள் என்பன சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டன.

இந்தச் செயற்பாட்டுக்கு பொதுமக்கள், சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொலிஸார், சமுர்த்தி அலுவலர்கள் ஆகியோர் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள்- என்றார் (ந-17)

# கொக்காவிலில் விபத்து; தந்தை, மகன் காயம்

முல்லைத்தீவு கொக்காவில் ஏ-9 வீதியில் மாங்குளம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோவை பின்னால் வந்த 'பிக்கப்' வாகனம் மோதியதில் ஓட்டோ தடம் புரண்டு அதில் பயணித்த இரண்டு பேர் காயமடைந்து மாங்குளம் வைத்திய சாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

ஞாயிறு இரவு நடந்த இந்த விபத்தில் நீர்வேலியைச் சேர்ந்த கந்தசாமி கஜனி (வயது-17) அவரது தந்தையான பொன்னையா கந்தசாமி (வயது-59) ஆகிய இருவருமே காயமடைந்துள்ளனர். விபத்துத் தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-6)

# வரணி மகா வித்தியாலயம் கல்லூரியாகத் தரமுயர்வு

தென்மராட்சி கல்வி வலயத்தில் மேலும் ஒரு கல்லூரி உருவாக்கப்பட்டுள்ளது.

வரணி மகா வித்தியாலயம் கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் வரணி மத்திய கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆறாவது கல்லூரியாக வரணி மத்திய கல்லூரி உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

# குருபூசையை முன்னிட்டு சங்காபிஷேகம்

வடமராட்சி, டிசெ.10

வடமராட்சி, வியாபாரிமூலை அருள்மிகு அருளம்பல சுவாமிகள் குருபூசை தினத்தை முன்னிட்டு அருளம்பல சுவாமிகள் கோயிலில் அஸ்டோத்திர சத சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

வடமராட்சியின் புகழ் பூத்த வியாபாரி மூலை புண்ணிய பகுதியில் அவதரித்து பூர்வ புண்ணிய சங்கற்பத்திற்கிணங்க பாரதத்தின் பல திருத்தலங்களை தரிசனம் பெற்று புனித சுவாமிகள் நிலையடைந்து பல நூல்களை ஆக்கித்தந்த சித்தர் அருளம்பலசுவாமிகள் அவரின் குருபூசை தினத்தை ஒட்டியே சங்காபிஷேகம் இடம் பெற்றது. (ந-8)

## கண்ணீர் அஞ்சலி

சண்டிலிப்பாய் கோட்டக் கல்வி அலுவலர் வேலுப்பிள்ளை சிறீதரன் அவர்களின் அன்புத் தந்தை

**கந்தப்பிள்ளை வேலுப்பிள்ளை**



அவர்கள் 05.12.2013 இறைவனடி சேர்ந்ததையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அதிபர் சங்கம், சண்டிலிப்பாய் கோட்டம். கோட்டக்கல்விப் பணிமனை, அலுவலர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கருணாவதி (கிளி) சண்முகலிங்கம்



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், நயினாதீவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கருணாவதி சண்முகலிங்கம் (08.12.2013) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கார்த்தியேசு மற்றும் மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், சண்முகலிங்கத்தின் அன்பு மனைவியும், ரமேஸ், தயானுதா, சுரேனுகா, துஷாந், ரஜீபன், ரஜீபா, தீபிகன் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2013) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

8 ஆம் வட்டாரம், நயினாதீவு. (41062)(2.6.3)

தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி பரமேஸ்வரி மகேசன்

(இளைப்பாறிய ஆசிரியை)



காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும் நல்லூர், செட்டித்தெருவில் வசித்தவரும் தற்போது தலவத்துகொடையில் வசித்து வந்தவருமாகிய திருமதி பரமேஸ்வரி மகேசன் 07.12.2013 சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி, பண்டாரவளை சென். மேரிஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியையாகப் பணியாற்றியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மகேசனின் அன்பு மனைவியும் நிரஞ்சன், நிர்மலன், நிருத்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவகி, நிரோஷினி, உஷா ஆகியோரின் அன்பு மாமியாரும், அருண், மது, வினி, அஜித், அஷ்வின், அர்ஜுன் ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 700/ 5. பெரேரா மாவத்தை, தலவத்து கொடையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நேற்று (09.12.2013) திங்கட்கிழமை இரவு 8.00மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இன்று (10.12.2013) செவ்வாய்க்கிழமை ஜயரட்ண மலர்ச்சாலையில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைகள் பிற்பகல் 3.00 மணிக்கு பொரளை கனத்தையில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொபே.இல: 011 279 6415 (சி/14181)(4.6.3)

தகவல்: குடும்பத்தினர்.

# பெருகும் 'மயிர்கொட்டிகள்' அசௌகரியத்தில் மக்கள்

யாழ்ப்பாணம், டிசெ.10

திருநெல்வேலி பரவைக்குளம் பகுதியில் அதிகரிக்கும் மயிர்கொட்டிகளினால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர்.

அந்தப் பகுதியில் குடியிருப்பாளர்களற்று கைவிடப்பட்ட காணிகளில் ஆமணக்கு மற்றும் பற்றைகள் அதிகரித்துள்ள நிலையில் மயிர்கொட்டிகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

பகல்நேரங்களில் மரங்களை விட்டு வெளியேறும் இவை அயலில் உள்ள வீடுகளில் பெருமளவில் நுழைந்து வீட்டுக்காரர்களுக்கு சிரமங்களை ஏற்படுத்துவதாகக் கூறப்படுகின்றது.

கைவிடப்பட்ட காணிகளை நல்லூர் பிரதேச சபை கையகப்படுத்தும் என அறிவித்திருந்த போதிலும் அது குறித்து எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத நிலையில் மயிர் கொட்டிகளினதும் மற்றும் விஷஜந்துக்களினதும் குடியிருப்புக்களாகவும் டெங்கு நுளம்புகளுக்கான உறைவிடமாகவும் இந்தக் காணிகள் மாறியுள்ளன.

நல்லூர் பிரதேச சபை இது தொடர்பாக உடன் கவனத்தில் எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ந-9)

# வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பருத்தித்துறை பிரதேச சபை பொது நூலகத்தால் மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்று வெற்றி பெற்ற மாணவர்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

அவை வருமாறு:

**சித்திரம்- கீழ்ப் பிரிவு**

ஆர்.மாதங்கி, எஸ்.அருண் நிலா-மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலயம், எஸ்.ஜெலன் ரீனா -மணற்காடு றோ.க.த.க. பாடசாலை.

**மத்திய பிரிவு**

சி.கோபிசன் -அம்பன் அ.மி.த. க.பாடசாலை, பி.டிலைக்ஷன், ஜெ.ஜெறோமராஜ் - மணற் காடு றோ.க.த.க.பாடசாலை, வை.பெரஸ் - உடுத்துறை மகாவித்தியாலயம்.

**மேற்பிரிவு**

பு.மேனகா-அம்பன் அ.மி.த. க.பாடசாலை, த.சுகன்யா- மணற்காடு றோ.க.த.க. பாடசாலை, தி.நிவேதன்-கற்கோவளம் மெ.மி.த. க. பாடசாலை.

**கட்டுரை- கீழ்பிரிவு**

பா.றஸ்மியா-செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை, ரா. மாதங்கி, கே.மதுமிதா-மேலைப் புலோலி சைவப் பிரகாச வித் தியாலயம்.

**மத்திய பிரிவு**

வி.ரதன்- புலோலி மெ.மி.த.க. பாடசாலை, சிஜனனி, இ.ஆரோன் கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை, ஜெ.ஜெயமாலினி - அம்பன் அ.மி.த.க.பாடசாலை.

**மேற்பிரிவு**

இ.ராம்ஜி, ஜே.ஜெயஅர்ச்சனா, இ.இந்திரகுமார், யோ.மேரி சிந்துஜா- உடுத்துறை மகா வித்தியாலயம்.

**பொது [illegible] - திறந்த பிரிவு**

த.[illegible]னி, கே.பிரதீபன், இ.ஜங்கரன். (ந-8)

## மரண அறிவித்தல்

### திருமதி குணேஸ்வரி (குணம்) கனகசபாபதி



யாழ்ப்பாணம், அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணேஸ்வரி (குணம்) கனகசபாபதி 07.12.2013 சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-நல்லம்மா தம்பதியரின் இளைய மகளும், காலஞ் சென்றவர்களான கதிரவேலு-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், கதிரவேலு கனகசபாபதியின் (ஓய்வுபெற்ற களஞ்சிய பொறுப்பாளர்- இலங்கை மின்சார சபை-வடமாகாணம்) அன்பு மனைவியும், திருமதி பரமலிங்கம் சரஸ்வதியின் பாசமிகு சகோதரியும், திருமதி பாலசிங்கம் கமலாம்பிகை, காலஞ்சென்ற குகதாசன் மற்றும் சறோஜினி, நல்லைநாதன் அனுஷியா, திருமதி சதானந்தன் இந்திராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.12.2013) புதன் கிழமை மு.ப. 10.00 மணியளவில் இலக்கம் 42, திருமகள் வீதி, அரியாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42, திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
021 222 6748 (41066) (10.6)

தகவல்:
க. கனகசபாபதி
(கணவர்)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 ★ 03 ★ 1953



மறைவு 14 ★ 12 ★ 2010

**அமரர் மயில்வாகனம் சுந்தரலிங்கம்**

திதி: 10.12.2013

நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனங்களில் வீசி நின்றீர்
கண்ணிமைக்கும் காலத்துள்
காலனுமைக் கவர்ந்து சென்ற
கொடுமை எண்ணி கலங்குகிறோம்
மனம் வெதும்பி வாடுகின்றோம்
மூன்று ஆண்டுகள் சென்றபின்னும்...

94/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். (41068)(3.6.4)

என்றும் அழியா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத் திறனாளிகள் தெரிவு செய்வதில் தவறு

*கிளிநொச்சி செயலக அதிகாரி தெரிவிப்பு*

அக்கராயன், டிசெ.10
மாற்றுத் திறனாளிகளின் தெரிவுகளில் தவறுகள் காணப்படுவதாக கிளிநொச்சி அரச செயலக உதவி அரச அதிபர் திருமதி பா.ஜெயராணி தெரிவித்தார்.
கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற சர்வதேச மாற்றுத் திறனாளிகள் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:
கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியமர்வு இடம்பெற்ற போது மாற்றுத் திறனாளி களின் விவரங்களைப் பெறுவதில் தவறுகள் நிகழ்ந்துள் ளன.
இதன் காரணமாக உதவிகள் சென்றடைவதிலும் தவறுகள் நிகழ்ந்துள்ளன. இதற்கு ஆளணி நெருக்கடி ஒரு காரணமாகும். தற்போது கிராம அலுவலர், சமூர்த்தி உத்தியோகத்தர், பட்டதாரிப் பயிலுநர் என்ற வகையில் ஆளணி வளம் கிடைக்கப் பெற்றுள்ளது. வரும் நாள்களில் உரிய பணி கள் சிறப்பாக இடம்பெறும் என்று தெரிவித்தார். (க-18)

# மக்கள் பணிகளை நிறைவேற்ற அரசு சார்ந்தோர் முட்டுக்கட்டை

*மாகாண சபை உறுப்பினர் விந்தன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ.10
13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தத் தடையாகவும், மக்களுக்கான பணிகளை நிறைவேற்றுவதற்கு மாகாண சபைக்கு இடையூறாகவும் அரசு சார்ந்தவர்கள் செயற்பட்டு வருகின்றனர். இந்த உண்மைகளைச் சர்வதேசத்துக்கு எடுத்துக் கூறி எமது உரிமைகளைப் பெறவும் அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றவும் முயற்சி எடுப்போம்.
இவ்வாறு புங்குடுதீவில் பொது மக்களைச் சந்தித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் என்.விந்தன் கனகரட்ணம் தெரிவித்தார்.
தமிழர்களின் அரசு அமைய வேண்டும் என்பதில் தீவக மக்கள் உறுதியாக இருந்து தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கு அமோக ஆதரவை நெருக்கடிகளின் மத்தியிலும் வழங்கியுள்ளீர்கள். தீவுப் பகுதியில் 90 வீதமான வாக்குகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்துள்ளன. பல்வேறு சவால்களுக்கும் முகம்கொடுத்து எங்களைத் தெரிவு செய்த மக்களது பாதுகாப்பு மற்றும் தேவைகளை முடிந்தவரை நிறைவேற்றுவோம்.
தீவுப் பகுதிக்கான வீதி கடந்த 30 வருடங்களுக்கு முன்பிருந்த நிலையிலேயே உள்ளது. தீவுப் பகுதிகளில் காணப்படும் உள்ளக வீதிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. அவற்றைப் புனரமைக்கவும் இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்புக்களை வழங்கவும் கல்வி, விளையாட்டுத் துறைகளை ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கவும் உறவினர் கட்சிக்காரர் எனப்பாராது நீதியாகவும் நியாய பூர்வமாகவும் எமது கடமைகள் முன்னெடுக்கப்படும்.



மாகாண சபைக்கென அடுத்த வருடத்தில் நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கும். அவற்றில் இந்தப் பிரதேசத்தின் தேவைகளுக்கான ஒதுக்கீடுகள் வழங்கப் படும். நீங்கள் இன்று விடுத்த கோரிக் கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்து அதை நிறைவேற்றவுள்ளேன் - என் றார்.
இதேவேளை புனரமைக்கப் பட வேண்டிய முன்பள்ளிக் கட்டடம், உதவிகளை எதிர் பார்த்து நிற்கும் தனியார் கல்வி நிலையம், 1925 இல் அமைக்கப்பட்டு தற்போது சேதமடைந்த நிலையில் காணப் படும் புங்குடுதீவு இளைஞர் கழகக்கட்டடம்என்பவற்றையும் அவர் பார்வையிட்டார். (வ-7)

# தமிழ்மொழி பாட நூல்களை குற்றெழுத்திலும் வெளியிடுக

*விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் கோரிக்கை*

யாழ்ப்பாணம், டிசெ.10
விழிப்புலனற்றோரின் கல்வி நடவடிக்கைக்காக தமிழ்மொழி மூலமான பாடநூல்களை குற்று எழுத்துக்களிலும் வெளியிட்டு வைப்பதற்கு சம்பந்தப் பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் வீ.கனகசபை கோரிக்கை விடுத்துள்ளார்.
சர்வதேச மாற்றுவலுவுடையோர் தின விழாவின்போது மேற்படி கோரிக்கை முன் வைக்கப்பட்டது.
யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற இந்த விழாவில் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கண் சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் எஸ்.மலரவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
விழிப்புலனற்றோரின் வாசிப்பு மற்றும் கற்றல் நடவடிக்கைக்கான தமிழ் மொழி மூலமான பாட நூல்களை குற்று எழுத்துக்களைக் கொண்டதாக வெளியிட வேண்டும்.
இது குறித்து நாம் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் இதுவரைக்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை-என்றார்.
இதேவேளை மாற்றுவலுவுடையோரின் கோரிக் கையை சம்பந்தப்பட்ட தரப்பி னருடன் பேசி அதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மலரவன் உறுதியளித்தார். (வ-17)

# குடாநாட்டில் 75 ஹெக்ரெயரில் உருளைக் கிழங்குச் செய்கை

*பயிர்ச் செய்கையாளர் சங்கங்கள் மதிப்பீடு*

அச்சுவேலி, டிசெ.10
குடாநாட்டில் உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கையில் விவசாயிகள் ஆர்வத்தோடு ஈடுபட்டுள்ளனர். இந்த வருடம் 75 ஹெக்ரெயர் நிலப்பரப் பளவில் செய்கை மேற்கொள் ளப்படலாம் என்று உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கையாளர் சங்கங்களின் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.
பயிர்ச் செய்கை அளவு மற்றும் விவரங்கள் தொடர்பான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாக சங்கங்களின் சமாசத்தின் செயலாளர் ஜெ. என். ஜெயகிருஷ்ணன் தெரிவித்தார்.
இந்த வருடம் நூறு ஹெக்ரெயர் நிலப்பரப்பில் குடாநாட்டில் உருளைக்கிழங்கு செய்கை மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. அதற்கு வசதியாக 50 வீத மானிய விலையில் 200 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கு வழங்குவதற்கு ஏற்பாடு மேற் கொள்ளப்பட்டிருந்தது. அதில் 132 மெற்றிக்தொன் விதை உருளைக் கிழங்கு விவசாயி களுக்கு மானிய விலையில் நவம்பர் முற்பகுதியில் வழங்கப் பட்டிருந்தது.
விதை உருளைக் கிழங்கு உரிய காலப் பகுதியில் கிடைக் கப் பெற்றமையால் நவம்பர் நடுப்பகுதியில் இருந்து நடுகை ஆரம்பமாகியது. அண்மையில் தொடர் மழை பெய்தமையினால் தடைப்பட்ட போதிலும் மீண்டும் நடுகைப் பணிகள் இடம்பெறுகின்றன.
நடுகை செய்யப்பட்ட விதை ஆரோக்கியமான நிலையில் முளைத்து பயிர் வளர்ச்சியடைந்து வருவதாகவும் 70 வீதத்துக்கு மேல் நடுகை செய்யப்பட்டுள்ளதாகவும் மிகுதியும் இந்த வாரம் நடுகை செய்து முடிக்கப்பட்டு விடும் என்று மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.
யாழ்.மாவட்டத்தில் கோப்பாய், தெல்லிப்பழை, உடுவில் பிரிவுகளில் உருளைக்கிழங்கு செய்கையாளர் சங்கங்கள் செயற்படுவதோடு மாவட்ட ரீதியில் சமாசமும் செயற்படு கின்றது.
யாழ். மாவட்ட உருளைக் கிழங்கு அறுவடை செய்யப் படும் காலப் பகுதியில் வெளிநாட்டு கிழங்கு இறக்கு மதியை மட்டுப்படுத்துவதற்கும் இறக்கு மதி வரியை அதிகரித்து உள்ளூர் கிழங்கை அதிகரித்த விலையில் விற்பனை செய்வதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கு வசதியாக பயிர் செய்யப்பட்ட பரப்பளவு, நடுகை செய்யப்பட்ட காலம், உத்தேச அறுவடைக்காலம் உள்ளிட்ட விவரங்களை சமாசம் திரட்டி வருவதாக செயலாளர் தெரிவித்தார். (வ-11)

## கேள்வி மனுக் கோரல்

**ஸ்ரீ லங்கா டெலிகொம் விற்பனை நிலையத்திற்கு (Teleshop)**
**பொருத்தமான கட்டிடம் ஒன்றை குத்தகைக்கு பெறல் - முல்லைத்தீவு**
**கேள்வி மனு இல. : L/1002/2013**

ஸ்ரீ லங்கா டெலிகொம் டெலிஷொப் ஒன்றினை முல்லைத்தீவு நகர எல்லைக்குள் திறப்பதற்கு பொருத்தமான கட்டிடத்தைக் கொண்ட உரிமையாளர்களிடமிருந்து, குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1200 - 1500 சதுர அடி கட்டிடப் பரப்பளவுடன் தரைத்தளத்தில் அமைந்ததும், பின்வரும் வசதிகளை கொண்டதுமான கட்டிடமாக இருப்பது விரும்பத்தக்கது.

- இலகுவில் அணுகக்கூடிய அமைவிடம்
- போதியளவு வாகன தரிப்பிட வசதியை கொண்டிருத்தல் வேண்டும். (குறைந்தது நான்கு (4) மென்ரக வாகனங்கள்)
- வர்த்தகத் தேவைக்கான மின்சார இணைப்பு (3 phase)
- தனியான தண்ணீர் இணைப்பு
- டெலிஷொப் ஒன்றினை நடாத்துவதற்கு தேவையான ஏனைய அடிப்படை வசதிகள்

விண்ணப்பிக்க பொருத்தமான விண்ணப்பதாரிகள் தங்களது கேள்வி பத்திரத்தின் (Quotations) இரண்டு (02) பிரதிகளை (மூலப்பிரதி மற்றும் நிழற்பிரதி). இரு வெவ்வேறான மூடப்பட்ட கடித உறைகளில், கீழ் குறிப்பிட்டவாறு தலைப்பிட்டு அனுப்பவும்.

**கடித உறை 1 - தொழில்நுட்ப ஏலம்:** கட்டிட உரிமையாளரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், கட்டிடம் அமைந்துள்ள முகவரி, நிலஅளவை வரைபடப் பிரதி, கட்டிட வரைபடம், கட்டிட உறுதி ஆகியவற்றின் பிரதி.

**கடித உறை 2 - நிதி ஏலம்:** எதிர்ப்பார்க்கும் மாத வாடகை, கொடுப்பனவு தொடர்பான விதிமுறைகளும் நிபந்தனைகளும் மற்றும் வாடகைக்கு தரவிரும்பும் காலப்பகுதி.

மேலே குறிப்பிட்ட இரண்டு கடித உறைகளும், பிறிதொரு கடித உறையினுள் இடப்பட்டு. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு குறித்த திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அல்லது, Procurement Division 2nd Floor, CTO Building, Sri Lanka Telecom PLC, Lotus Road, Colombo – 01 என்ற முகவரியில் வைக்கப்பட்டுள்ள "ஒப்பந்தப் பெட்டியில்"

20/12/ 2013 ம் திகதி, 10 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு இடப்படல் வேண்டும்.
வெளிப்புற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "Lease out a building for Sri Lanka Telecom – Mullaitivu, Tender No. L /1002/2013" எனக் கட்டாயம் குறிப்பிடப்படல் வேண்டும்.

தலைவர்
கனிஷ்ட ஒப்பந்த சபை, கொள்வனவுப் பகுதி,
இரண்டாவது மாடி, CTO கட்டிடம்,
ஸ்ரீ லங்கா டெலிகொம் பிஎல்சி,
லோட்டஸ் வீதி, கொழும்பு - 01.

www.slt.lk துரித அழைப்பு: 1212

ஒரே தேசம் ஒரே குரல்.

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம், தட்டாதெருச் சந்திக்கும், அரசடி ஒழுங்கைக்குமிடையில் 2 திறப்புக்கள், மூக்குக்கண்ணாடி, கைய்டக்கத் தொலைபேசி மற்றும் முக்கிய ஆவணங்கள் 08.12.2013 இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
தொடர்பு : 077 8177 771 (33033) (2.6)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியர்
திருமதி ஜெகதீஸ்வரி கிருபானந்தன்
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி சிவபாக்கியம் தம்பிராசா**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்.
**யா/வரணி மத்திய கல்லூரி.** (33034)(2.6)

## காணிவிற்பனைக்கு

அச்செழு மத்தி மெயின் றோட்டில் 8 பரப்புக்காணியில் புது வீடும் அதற்கு முன்னால் 8 பரப்பு வெறும் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 4701901

## தேவை

கணினி அறிவுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைக் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (41088) (2.6)
**கொக்கோ கோலா விநியோகத்தர்கள்**
இல.205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நீங்கள் எதைத் தேடிக் கொண்டிருக்கிறீர்களோ அது உங்கள் உள்ளேயே இருக்கிறது.
நீங்கள் அமைதியைத் தேடிக் கொண்டிருந்தால் அது வேறு எங்கும் கிடைக்காது.
அமைதி ஒவ்வொரு மனிதர் உள்ளேயும் உள்ள ஓர் உணர்வு.
- பிரேம் ராவத் -

WORDS OF PEACE
மேலும் அறிந்துகொள்ள...
011 725 0001 | www.wopg.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

கல்முனை.டிசெ.10
அம்பாறை.சாய்ந்தமருது வொலிவேரியன் சுனாமி வீட்டுத்திட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 5 கோடி 20 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள் ளது என்று பொருளாதார அபி விருத்தி பிரதி அமைச்சர் எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் எச்.எம். எம். ஹரிஸின் அழைப்பை ஏற்று பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம். எல்.ஏ.எம். ஹிஸ் புல்லாஹ் ஞாயிற்றுக்கிழமை கல்முனைக்கு சென்றிருந்தார்.

அத்தோடு மருதமுனை, மேட்டு வட்டைக் கிராமத்துக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் எச். எம்.எம். ஹரிஸ் மற்றும் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் அங்குள்ள மக்கள் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டனர். (ச)



தெல்தெனிய,போத்தல்கோட, வெலதரான வீதியில் கற்பாறை சரிந்து விழுந்ததில் அந்த வீதியூடான போக்குவரத்து நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

## அல்ஹிலால் பாடசாலைக்கு மூன்று மாடிக் கட்டடம்

அம்பாறை,டிசெ.10
சாய்ந்தமருது அல்ஹிலால் வித் தியாலயத்துக்கு மூன்று மாடி வகுப்பறைக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திசாநாயக்க ஆகியோரிடம் மு.கா. குழுத் தலைவர் ஏ.எம்.ஜெமீல் விடுத்த தொடர்ச்சியான கோரிக்கையையடுத்து இதற்கான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்தக் கட்டடம் அமைப்பது குறித்து கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திசாநாயக்க ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தம ருது அல்ஹிலால் வித்தியாலயத்துக்கு நேரடியாகச் சென்று அறிவித்துள்ளார். (ச)

## காலநிலை சீர்கேடு; வாவியில் மீன்பிடி



மட்டக்களப்பு.டிசெ.10
மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தையடுத்து கடற்றொழில் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

கடல் கொந்தளிப்பால் கடலுக்குச் செல்ல முடியாத மீனவர்கள் தமது ஜீவனோபாயத்தை தேடிக் கொள்ள வாவி மீன்பி டியில் அதிக நாட்டம் காட்டி வருகின்றனர்.

மட்டக்களப்பு வாவியில் அதிகமான மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு வாவியில் ஒட்டி, ஓரா, கெழுத்தி, மணலை, செத்தல், சூடை, கிளக்கன், கோல்டன் உட்பட பல வகையான மீன்கள் அதிகமாகப் பிடிக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 23 ஆயிரம் மீனவர்கள் உள்ளன்ர். மாவட்டத்தில் வருமானத்தை ஈட்டித்தரும் இரண்டாவது பிரதான தொழில் மீன்பிடி என்ப தும் குறிப் பிடத்தக்கது. (ச)

## அமைச்சரின் நடவடிக்கையால் காணி விற்பனை இடைநிறுத்தம்

*பொதுமக்களின் முறைப்பாட்டையடுத்து*

அம்பாறை, டிசெ.10
கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பலநோக்குக் கூட்டுறவுச்சங்கமொன்று, தனக்குச் சொந்த மான மூன்று காணித் துண்டுகளை விற்பனை செய்வதற்கு எடுத்த நடவடிக்கையை தமது அதிரடிநடவடிக்கைமூலம் கிழக்கு மாகாண சுகாதார, கூட்டுறவுத் துறை அமைச்சர் தற்காலி கமாக இடைநிறுத்தம் செய்துள்ளார்.

மூதூர் பலநோக்குக் கூட்டுற வுச் சங்கத்துக்குச் சொந்தமான இந் தக் காணித் துண்டுகளின் விற்பனை தொடர்பில் பொது மக்களிடமிருந்து தமக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளைஅடுத்தே கிழக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, சமூக சேவை, கூட்டுறவுத்துறை அமைச்சர் எம்.ஐ.எம்.மன்சூர் அதிரடி யாக இந்த இடைநிறுத்த உத் தரவைப் பிறப்பித்துள்ளார்.

மூதூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச் சபைத் தீர் மானம், மற்றும் மாவட்ட கூட்டு றவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதியுடன், குறித்த காணித் துண் டுகளை விற்பனை செய்வதற் கான பத்திரிகை விளம் பரமும் செய்யப்பட்டிருந்தது.

காணி விற்பனைக்கான இறு திக் கட்ட நிலையில், அமைச்சர் மன்சூருக்கு பொது மக்களிடமி ருந்து பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதனையடுத்து தமது அதிரடி நடவடிக்கையாக, குறித்த காணி விற்பனையைத் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு அமைச்சர் மன்சூர் உத் தரவிட்டுள்ளார்.

இந்தக் காணித் துண்டுகளின் விற்பனை தொடர்பான உண்மை நிலை மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பி லான விசாரணைகளை மேற் கொண்டு சாதக, பாதகங்களை அறியும் நோக்குட னேயே தாம் காணிகள் விற்பனையைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக மாகாண அமைச்சர் மன்சூர் தெரிவித்தார். (ச-30)

### மரண அறிவித்தல்

#### மனுவேல்பிள்ளை நாகலிங்கம் (ராசன்)



அடப்பன்குளம் நேரியகுளத்தை பிறப்பிடமாகவும், தண்ணீரூற்று முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட மனுவேல்பிள்ளை நாகலிங்கம் (ராசன்) நேற்று முன்தினம் (08.12.2013) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேல் பிள்ளை - நல்லம்மா தம்பதியரின் அன்புமகனும் பெரியதம்பி - சீதேவியின் பாசமிகு மருமகனும் இரத்தினகுமாரி (தேவகியின்) அன்புக் கணவரும் சாத்விகா, அபிஷேகா, பிராத்விகா, மிருதுவன் (மு/வித்தியானந்தாக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2013) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாமூலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தண்ணீரூற்று, முள்ளியவளை

தகவல்: குடும்பத்தினர்

### மரண அறிவித்தல்

#### திருமதி சிவகாமிப்பிள்ளை(சுபத்திரை) கணபதிப்பிள்ளை



இணுவில் மேற்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகாமிப் பிள்ளைகணபதிப்பிள்ளை நேற்று (10.12. 2013) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும், பொன்னு, வல்லிபுரம், கதிரன், சீனியர், சின்னட்டி, முத்துப்பிள்ளை, லட்சுமி, தெய்வானை ஆகியோரின் சகோதரியும், நாகம்மா, விமலாதேவி, சகுந்தலாதேவி, திருச்செல்வம், றதிதேவி, ஜெயதேவி, ஸ்ரீகாந்தரூபன் (சிவம்), கணேசலிங்கம் ஆகியோரின் தாயாரும், அழகரத்தினம், பாக்கியநாதன், அரியநாயகம், தவமலர், ஐயாத்துரை, சந்திரன், செல்வராணி, புவனேஸ்வரி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.20103) செவ் வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செட்டி வீதி, இணுவில்.

தகவல்: குடும்பத்தினர்.

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30.06.1936

மறைவு 02.12.2011

#### அமரர் செல்லம்மா தளையசிங்கம்

திதி : 10.12.2013

அன்புடனும் பண்புடனும் எம்மை
அரவணைத்து தோளில் தூக்கி வளர்த்து
பாடம்புகட்டி அறிவூட்டி எம்மை ஆளாக்கிய எங்கள்
அன்புத் தெய்வமே அந்த இனிய நாள்கள் வந்து
உன் நினைவை கூட்டுதம்மா
உங்கள் நினைவு என்றும் எமது மனங்களில்
ஒளிர்ந்து கொண்டே இருக்கும் இன்று மட்டுமல்ல என்றுமே
எங்கள் குலதெய்வம் நீங்களம்மா

அண்ணா சனசமூக நிலையத்தடி,
உடுவில் கிழக்கு, இணுவில்

குடும்பத்தினர்

### மரண அறிவித்தல்

#### திருமதி அன்னம்மா தம்பிப்பிள்ளை

சாவகச்சேரி பெரியமாவடியைச் சேர்ந்த திருமதி அன்னம்மா தம்பிப்பிள்ளை நேற்று (09.12.213) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் அன்புமனைவியும் கவிஞர் நாகேஸ்வரனின் பாசமிகு தாயும் சரவணமுத்துவின் அன்புப்பெரியதாயும் கலைவாணி நாகேஸ்வரனின் அன்புமாமியும் நிரோஜினியின் (தாதிய உத்தியோகத்தர் யாழ்.போதன வைத்தியசாலை), வதனராஜா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் சாம்பவியின் அன்புப்பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.12.2013) சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்ற பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. நாகேஸ்வரன் (மகன்)
T.P : 077 6445939

கச்சாய் வீதி, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டேலாவின் இறுதிச்சடங்கில் 70 தலைவர்கள்

தென்னாபிரிக்காவின் மறைந்த ஜனாதிபதி நெல்சன் மண்டேலா வின் இறுதிச் சடங்கில் 70 நாடுகளின் அரச தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

## மனித உரிமைகள் தின ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், டிசெ. 10

தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் இணைந்து நடத்தும் சர்வதேச மனித உரிமைகள் தின ஒன்றுகூடல் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல. 43, 3ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

ஒன்று கூடலின் இறுதியில் காணாமற்போனவர்கள் தொடர்பில் பொறுப்புக் கூறல், சிறையில் உள்ள அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்தல், இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தல் உட்பட பல கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (த-400)

# பிரதமரை கைது செய்க

### அரச பங்காளியான ஹெல உறுமய வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 10

"200 கிலோவுக்கு மேற்பட்ட ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் பிரதமர் டி.எம்.ஜயரத்னாவை உடனடியாகக் கைது செய்து விசாரணை மேற்கொள்ள வேண்டும்" என்று அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்தியுள்ளது.

"கடந்த செப்ரெம்பர் மாதம் கொழும்பு, உறுகொடவத்தையில் 200 கிலோவுக்கு மேற்பட்ட ஹெரோயின் போதைப் பொருள் அடங்கியிருந்த கொள்கலன் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. ஆசியாவிலேயே அதிகூடிய அளவில், கைப்பற்றப்பட்ட போதைப்பொருளை விடுவிக்கக் கோரிய சம்பவத்துடன் பிரதமருக்குத் தொடர்புள்ளதாகக் கூறப்படுவதால் அவர் உடனடியாக பதவி விலக வேண்டும். இல்லையேல் கைது செய்யப்பட வேண்டும்" என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் வண. ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

பிரதமர் டி.எம்.ஜயரத்ன புத்தசாசன அமைச்சுக்கு தகுதியல்லாதவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கடந்த சில மாதங்களுக்கு முன்னர் 200 கிலோவுக்கு மேற்பட்ட ஹெரோயின் பொலிஸாரால் கைப்பற் றப்பட்டது. ஆனால், கைப்பற்றப்பட்ட இந்த ஹெரோயின் மற்றும் அது அடங்கிய கொள்கலன் அடுத்த இரண்டு - மூன்று நாள்களிலேயே விடுவிக்கப்பட்டு விட்டது. அதுவும் பிரதமரின் செயலாளரே இந்தச் செயலைச் செய்துள்ளார் என்றும் பிரதமர் கூறியதாகத் தெரிவித்தே செயலாளர் இந்த கொள்கலனை விடுவிக்கச் செய்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

இது சம்மந்தமாக பிரதமர் டி.எம். ஜயரத்னவிடம் கேட்டால், "நான் அவ்வாறு விடுவிக்கச் சொல்லவேயில்லை" என்கிறார். ஆனால், அவரின் செயலாளரோ பிரதமர்தான் ஹெரோயினை உடனடியாக விடுவிக்குமாறு பணித் தார் என்றும் தெரிவிக்கிறார். அத்தோடு, இந்தச் சம்பவம் நடைபெற்ற உடனேயே பிரதமர் தனது செயலாளரைப் பதவியிலிருந்து நீக்கியும் உள்ளார் என்று கூறப்படுகிறது.

இதுபோன்ற செயற்பாடுகளைப் பார்க்கும்போது பிரதமர், இந்தப் போதைப் பொருளை விடுவித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபராக எமக்குத் தெரிகிறது. அதுமட்டுமல்லாது, நாட்டில் நடைபெற்ற ஏனைய போதைப் பொருள் சம்பவங்களுடனும் பிரதமருக்குத் தொடர்பிருக் குமோ என்றும் எமக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இது நாட்டிற்கே கேடான ஒரு செயற்பாடாகும். இவரை உடனடியாக பதவியிலிருந்து விலக்க வேண்டும். இவரை புத்தசாசன அமைச்சுப் பதவியிலிருந்தும் நீக்க வேண்டும். இவ்வமைச்சுப் பதவியை வகிக்க பிரதமர் தகுதியல்லாதவர்.

இவரால் பௌத்த மதத்தின் புனிதத் தன்மையும் கெடுகின்றது. இவரையும், இவரின் செயலாளரையும் உடனடியாக கைது செய்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம். இதற்கு அரசு ஒத்துழைக்க வேண்டும்" என்றார்.

இதேவேளை, ஹெல உறுமயவின் இந்தக் கருத்து தொடர்பில் பிரதமர் ஜயரத்னவுடனும், அவரது செயலாளருடனும் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்றோம். ஆனால், இறுதி வரை அந்த முயற்சி பயனளிக்கவில்லை.

## தோசை தொண்டையில் இறுகி நான்கு மாதக் குழந்தை சாவு

கொழும்பு, டிசெ.10

தோசை தொண்டையில் இறுகியதில் நான்கு மாத குழந்தை மரணமடைந்துள்ள சம்பவமொன்று கம்பஹாவில் இடம்பெற்றுள்ளது.

ஏழு வயதான சகோதரியே அந்தக் குழந்தைக்குத் தோசையை ஊட்டிவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தோசையில் ஒரு துண்டு தொண்டையில் இறுகியதையடுத்து மூச்சுத் திணறல் ஏற்பட்டதனாலேயே அந்த குழந்தை மரணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (த)

## அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியவருக்கு மன்று அபராதம்

வடமராட்சி, டிசெ.10

அனுமதிப்பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி பொலிஸ் பிரிவில் பிரதான வீதி ஒன்றில் அனுமதிப் பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர் போக்குவரத்துப் பிரிவு பொலிஸாரிடம் அகப்பட் டார். அதனையடுத்து அவர் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பதில் நீதிவான் பொ.குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அனையடுத்து குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-8)

## கதிர்காமத்தில் நேற்று 45 பிச்சைக்காரர் கைது

கொழும்பு, டிசெ.10

கதிர்காமம் புனித பூமியில் பக்தர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட 45 பிச்சைக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை இவர்கள் கைது செய்யப்பட்டதாகக் கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

பக்தர்களுக்கு இடையூறு ஏற்படுத்தி அசிங்கமான வார்த்தைப் பிரயோகங்களை இந்த பிச்சைக்காரர்கள் பயன்படுத்தியதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் குழந்தைகளைப் பயன்படுத்தி பிச்சை எடுத்த ஐந்து பெண்களும் அடங்குவதாக கதிர்காமம் பொலிஸார் கூறினர்.

இதற்கு முன்னரும் இவர்கள் பிடிக்கப்பட்டு எச்சரிக்கையின் பின் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்நிலையில் மீண்டும் கைது செய்யப்பட்டவர்கள் நேற்று திஸ்ஸமகாராம நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். (த)

# தினமும் 3 சிறுவர்கள் துஷ்பிரயோகம் 40 ஆயிரம் பெண்கள் விபசாரத்தில்

### சபையில் ரோஸி எம்.பி. தகவல்

கொழும்பு, டிசெ.10

ஒவ்வொரு 24 மணித்தியாலங்களுக்கும் 3 சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுகின்றனர் எனத் தெரிவித்த ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனாநாயக்க, 40 ஆயிரம் பெண்கள் விபச் சாரத்தில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என் றும் தெரிவித்தார்.

மேலும் யாழிலும், மட்டக்களப்பிலும் ஒரு இலட்சத்து 29 ஆயிரம் வித வைப் பெண்கள் இருக்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அமைச்சு, வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் ஊக்குவிப்பு அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் தற்போதைய நிலைமையில் 40 ஆயிரம் பெண்கள் விபசாரத்தில் ஈடுபடுகின் றனர். இவர்களுள் 6.4 சத வீதமானோர் குறைந்த வயது கர்ப்பிணிகளாக இருக்கின்றனர். கடந்த இரண்டு வருடங்களில் மட்டும் 23 ஆயிரத்து 852 சிறுவர் மீதான குற்றச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. மாத மொன்றுக்கு 2 ஆயிரத்தும் அதிகமான சம்பவங்கள் இடம்பெறுவதுடன், ஒவ் வொரு 24 மணித்தியாலத்துக்கும் ஒரு முறை 3 சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர். சிறுவர் மீதான துஷ்பிரயோகச் சம்பவங்களில் கடந்த 5 வருடங்களில் 20 சத வீதத் தால் அதிகரித்துள்ளது.

நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதியில் அதிகமான விதவைகள் இருக்கின்றனர். யாழ்ப்பாணத்தில் 89 ஆயிரம் பேரும், மட்டக்களப்பில் 40 ஆயிரம் பேரும் விதவைகளாக இருக்கின்றனர். இவர்களுள் 40 வயதுக்கும் குறைந்த 3 பிள்ளைகளுக்குத் தாயான 12 ஆயிரம் விதவைகள் இருக்கின்றனர்.

கடந்த இரண்டு வருடங்களில் மட் டும் பெண்கள் மீதான வன்முறைச் சம் பவங்கள் 30 ஆயிரத்து 58 இடம்பெற்றுள்ளன. இந்நிலையில், சிறுவர் மற்றும் பெண்களைப் பாதுகாக்க நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படாமல் இருப் பதை எம்மால் அவதானிக்க முடிகிறது. நாட்டின் சனத்தொகையில் 52 சதவீத மாக இருக்கும் பெண்களுக்கு வரவு - செலவுத்திட்டத்தில் குறைந்தளவு நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீடு போதுமானதா? இதை வைத்துக் கொண்டு மகளிர் வாழ்க்கையை மேம்படுத்த என்ன செய்யமுடியும்? - என்றார்.

## பாடசாலையில் பிள்ளையை சேர்க்க தாய்மாரிடம் பாலியல் இலஞ்சம்

### அவல நிலை என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, டிசெ.10

பிள்ளைகளை பாடசாலையில் சேர்ப்பதற்காக தாய்மார்கள் பாலியல் இலஞ்சங்கள் வழங்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது என ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் அனோமா கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அமைச்சு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:

"இலங்கையை ஆசியாவின் அதிசயமாக மாற்றுவோம் என அரசு கூறுகிறது. ஆனால், இன்று எமது நாடு சிறுவர் துஷ்பிரயோக நாடாக மாற்றமடைந்து வருகிறது. பெண்களின் அபிவிருத்திக்காக இந்த அரசு வரவு- செலவு திட்டத்தில் போதுமான நிதிஒதுக்கவில்லை - என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மனித உரிமை

மாகாணத்தைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர்களும், காணாமற்போனோரின் உறவுகளும் கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

**வவுனியாவில் கவனவீர்ப்பு**

இதேவேளை, வடக்கு, கிழக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தக் கோரியும், இலங்கைத் தீவில் மனித உரிமைகளைப் பாதுகாக்குமாறு வலியுறுத்தியும் வவுனியாவில் இன்று கவனவீர்ப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் வவுனியா நகரசபை உள்ளக மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு இந்தக் கவனவீர்ப்பு நிகழ்வு ஆரம்பமாகும்.

இந்த நிகழ்வின் இறுதியில் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவினால் பிரகடனம் ஒன்றும் வெளியிடப் படவுள்ளது.(த)

### ஐ.நாவில்

இந்தப் பிரேரணையை எதிர்த்து இலங்கையைக் காப்பாற்றுவதற்காக 59 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் நாடாளும்னறில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய பாதுகாப்புக் கருதி இலங்கையை ஜெனிவாவில் காப்பாற்றும் குழுவில் இருந்து உறுப்பினர்களின் விவரங்களை வெளியிட முடியவில்லை. எமது முயற்சிக்குப் பல தனிநபர்கள் ஆதரவளித்தனர், இப்போதும் ஆதரவளிக்கின்றனர்.

அந்தக் குழுக்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர் விவரங்களை வெளியிடுவது அவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கலாம்.

இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் நியாயமற்றது என்பதை ஐ.நா. மனித உரிமைகள் சபை உறுப்பு நாடுகளுக்கு விளக்கக் கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பல நாடுகளுக்கு நானே நேரில் சென்று வெளிவிவிகார அமைச்சர்களைச் சந்தித்தேன். குறிப்பிட்ட நாடுகளின் தூதரகங்களுக்கும் விளக்கமளிக்கப்பட்டன. ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவர்கள் குறிப்பிட்ட நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்தனர் - என்றார். (த-5)

### வீட்டில்

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முகங்களைக் கறுப்புத் துணியால் கட்டிக் கொண்டு [illegible] இருந்தவர்களை அச்சுறுத்தி கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

உடையார்கட்டு வடக்கைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரது வீட்டில் சம்பவதினத்துக்கு முதல் நாள் நிகழ்வு ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்நிலையில் மறுநாள் அதிகாலை கொள்ளையர்கள் சென்று அவர்களை அச்சுறுத்தி இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான நகைகள், ஒரு தொகைப் பணம் கைத்தொலைபேசி, ஏ.ரி.எம் அட்டைகள் அடையாள அட்டை என்பவற்றையும் கொள்ளையிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸில் முறையிடப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.(ஐ-6)

### பஸ்ஸில்

[illegible] ஏ-9 வீதியில் [illegible] தனித்து நின்ற மூவர் பஸ்ஸை இடைமறித்துள்ளனர்.

இதன்போது பஸ்ஸில் இருந்தவர்கள் சுதாகரித்துக்கொண்டு கொள்ளையர்களை மிரட்டியுள்ளனர். அத்துடன் மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்கும் தகவல் கொடுத்துள்ளனர். இதனையடுத்து அந்த மூவரும் காட்டுக்குள் தப்பி ஓடிவிட்டதாக பஸ்ஸில் பயணித்தவர்கள் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் ஓட்டோவை மீட்டுள்ளதாக தெரியவருகிறது. (ஐ-4)

### ஜனாதிபதி

யாடியுள்ளனர்.

இலங்கையின் மட்டுப்படுத்திய வளங்களுடன் ஒப்பிடுகையில் போருக்குப் பின்னர் இலங்கை அடைந்துள்ள அபிவிருத்தி அதிசயமானது என்று யசூசி அகாஷி முன்னர் கூறியிருந்தார்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபிஹிட்டோ ஹோபோ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம, ஜப்பானுக்கான இலங்கை தூதுவர் வசந்த கருணாகொட ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஐந்து நாள்கள் பயணம் மேற்கொண்டு நேற்று முன்தினம் இலங்கைக்கு வருகைதந்த அகாஷி எதிர்வரும் 13 ஆம் திகதி வரை இங்கு தங்கியிருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

### கிளிநொச்சியில்

யசாலைக்கு சென்று உரிய சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர்.

இந்த வருடத்தில் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது மலேரியா நோயாளி இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேரிஸ், நீக்கிலஸ், அன்ரனிஸ், றோயல் நேற்றைய ஆட்டங்களில் கோல் மழை



யாழ்ப்பாணம், டிசெ.10

'நெஸ்லே' லங்கா பிறைவேட் நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்படும் மைலோ வெற்றிக் கிண்ணத்துக்கான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்றுத் திங்கட் கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற யாழ். மாவட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளில் நாவாந்துறை மேரிஸ், நாவாந்துறை நீக்கிலஸ், பாஷையூர் அன்ரனீஸ், ஊரெழு றோயல் ஆகிய அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் ஊர்காவற்துறை மெரிஞ்சி முனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாவதாக இடம்பெற்ற பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியும் மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணியும் மோதின.

இந்த ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நான்காவதாக இடம்பெற்ற ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியும் யாழ். ஐக்கிய விளையாட்டுக்கழக அணியும் மோதிக்கொண்டன. இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி 4.0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

(த-23)

# 'மைலோ' கிண்ண ஆட்டம் நேற்று யாழில் ஆரம்பம்





யாழ்ப்பாணம், டிசெ.10

'நெஸ்லே' லங்கா பிறைவேட் நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்டச்செயலகவிளையாட்டுப் பிரிவினால் நடத்தப்படும் 'மைலோ' வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நேற்றுத் திங்கட் கிழமை யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

ஆரம்பநாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட்டும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வீரசிங்க, மருத்துவர் எஸ்.அறிவுச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள் பெரியபுலம் மகா வித்தியாலய மாணவர்களின் 'பாண்ட்' வாத்திய இசையுடன் மைதானத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து விருந்தினர்களுக்கு வீரர்களை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து பிரதம விருந்தினர், சிறப்பு விருந் தினர்கள் பந்தை உதைத்துப் போட்டியை ஆரம்பித்து வைத்தனர். (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.10

'நெஸ்லே' லங்கா பிறைவேட் நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்படும் மைலோ வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**காலை 8.30 மணி**

நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம்.

**காலை 9.30 மணி**

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம்.

**காலை 10.30 மணி**

நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் எதிர் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழகம்.

**காலை 11.30 மணி**

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் எதிர் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம். (த-23)

# ஈஸ்ரன் ஈகிள் அணி வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.10

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் எவ்.ஏ. வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் திருகோணமலை ஈஸ்ரன் அணி வெற்றி பெற்றுள்ளது.



"-"

திருகோணமலை ஈஸ்ரன் ஈகிள் விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது.

இதில் செம்மலை உதய சூரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருகோணமலை ஈஸ்ரன் ஈகிள் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் இரு அணியினரும் ஆட்ட நேரமுடிவில் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் திருகோணமலை ஈஸ்ரன் ஈகிள் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# ஆவரங்கால் இந்து இளைஞர் சம்பியன்



யாழ்ப்பாணம், டிசெ.10

மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்திய முத்துலிங்கம் ஜெகநாதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான மின்னொளி கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

இந்தத் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

5 செற்களைக் கொண்ட இறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 3.1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

இதில் தொடர் நாயகன் விருது, ஆட்ட நாயகன் விருது ஆகியவற்றை ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி வீரன் ஜெனகன் பெற்றுக் கொண்டார்.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் சி.மனோகரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சர்ச்சையைக் கிளப்பிய முரளி கார்த்திக்

ரஞ்சிக் கிண்ணப் போட்டியில், விளையாட்டு உணர்வை மீறி எதிரணி வீரரை ஆட்டமிழக்கச் செய்த முரளி கார்த்திக் சர்ச்சையில் சிக்கினார்.

டில்லியில் நடந்த ரஞ்சிக் கிண்ண லீக் போட்டியில் ரயில்வேஸ், பெங்கால் அணிகள் மோதின. ரயில்வேஸ் அணி முதல் இன்னிங்ஸில் 306 ஓட்டங்கள் எடுத்தது. இரண்டாவது நாள் ஆட்ட நேர முடிவில், முதல் இன்னிங்ஸில் பெங்கால் அணி ஓர் இலக்குக்கு 65 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று முன் தினம் மூன்றாவது நாள் ஆட்டம் நடந்தது. போட்டியின் 80ஆவது பந்துப்பரிமாற்றத்தை ரயில்வேஸ் அணித் தலைவர் முரளி கார்த்திக் வீசினார். அப்போது பெங்கால் வீரர் சந்திபன்தாஸ் கிரீசை' விட்டு சிறிது தூரம் ஓடினார். உடனே விக்கெட்டைத் தட்டி விட்ட கார்த்திக் ஆட்டமிழப்புக் கேட்டார்.

இதனை தொலைக்காட்சி நடுவரும் உறுதி செய்ய தாஸ் பரிதாபமாக வெளியேறினார். இதே முறையில் 1947 இல் நடந்த சிட்னி டெஸ்டில் இந்தியாவின் வினு மன்கட், ஆஸ்திரேலியாவின் பில் பிரவுனை ஆட்டமிழக்கச் செய்தார்.

கிரிக்கெட் விதிமுறைப்படி கார்த்திக் செய்தது சரியே. ஆனால், விளையாட்டு உணர்வின்படி பார்த்தால் சரியல்ல.

இது தொடர்பாக முரளி கார்த்திக், பெங்கால் பயிற்சியாளர் அசோக் மல்கோத்ரா ஆயியோரிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. பெங்கால் வீரர்கள் கார்த்திக்கை பார்த்து 'மோசடிக்காரர்' என கோஷம் எழுப்பினர். (கு)


# உலகக் கிண்ண உதைபந்தாட்டம்:
## சில போட்டிகளில் திடீர் மாற்றம்


2014ஆம் ஆண்டு பிரேஸிலில் இடம் பெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டித் தொடரின் சில போட்டிகளின் நேரங்களும் மைதானங்களும் மாற்றத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கான காரணம் அறிவிக்கப்படாத போதும், சில போட்டிகளின் முக்கியத்துவம் மற்றும் அந்த போட்டிகள் நடைபெறவுள்ள மைதானங்களின் தயார் நிலை போன்றவற்றைக் கருதி இந்த மாற்றம் செய்யப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக அடுத்த வருடம் ஜூன் மாதம் 14ஆம் திகதி நடைபெறவிருந்த இங்கிலாந்து - இத்தாலி அணிகளுக்கு இடையிலான போட்டியும், ஜூன் 22ஆம் திகதி மோதவிருந்த அமெரிக்கா மற்றும் போர்த்துகல் போட்டியும், மானுஸ் நகருக்கு மாற்றப்பட்டுள்ளன. (கு)

# அம்லாவின் அதிவேகம்






டர்பனில் நேற்று முன் தினம் நடந்த இந்தியாவுக்கு எதிரான 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 31 வயதான ஹஷிம் அம்லா 100 ஓட்டங்கள் குவித்தார். அவர் 59 ஓட்டங்களை எட்டிய போது அவரது ஒட்டுமொத்த ஓட்டங்கள் 4 ஆயிரத்தைத் தொட்டது.

இதுவரை 84 ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்றுள்ள அம்லா அதில் 81ஆவது இன்னிங்ஸில் களம் இறங்கி இந்த மைல்கல்லை எட்டியுள்ளார்.


இதன் மூலம் 42 ஆண்டுகால ஒரு நாள் கிரிக்கெட் வரலாற்றில் அதிவேகமாக 4 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர் என்ற உலக சாதனையை படைத்தார்.

இதற்கு முன்பு மேற்கிந்தியத் தீவுகள் ஜாம்பவான் விவியன் ரிச்சர்ட்ஸ் தனது 88ஆவது இன்னிங்சில் 4 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்ததே உலக சாதனையாக இருந்தது. அவர் இச்சாதனையை 1985ஆம் ஆண்டு படைத்திருந்தார். அவரது 28 ஆண்டு காலச் சாதனை இப்போது அம்லாவிடம் போய் சேர்ந்துள்ளது.

அம்லா இதுவரை 84 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 12 சதம், 23 அரைசதம் உள்பட 4041 ஓட்டங்கள் (சராசரி 53.88) சேர்த்துள்ளார். அத்துடன் வேகமாக 2 ஆயிரம் ஓட்டங்களைக் (40 இன்னிங்ஸ்) கடந்தவர், துரிதமாக 3 ஆயிரம் ஓட்டங்களை (57 இன்னிங்ஸ்) கடந்தவர் ஆகிய சாதனைகளும் அவரது வசமே இருக்கின்றன.

4 ஆயிரம் ஓட்டங்களை வேகமாக எடுத்தவர்களின் சாதனைப் பட்டியலில் 3ஆவது இடத்தில் இந்தியா வின் விராட் கோஹ்லி உள்ளார். அவர் தனது 93ஆவது இன்னிங்ஸில் 4 ஆயிரம் ஓட்டங்களைத் தாண்டியிருந் தார். (கு)

அம்லா இதுவரை 84 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 12 சதம், 23 அரைசதம் உட்பட 4041 ஓட்டங்கள் (சராசரி 53.88) சேர்த்துள்ளார். அத்துடன் வேகமாக 2 ஆயிரம் ஓட்டங்களைக் (40 இன்னிங்ஸ்) கடந்தவர்,



# மனதில் வாழும் மண்டேலா

கிரிக்கெட் ஜாம்பவான் டெண்டுல்கரும் நெல்சன் மண்டேலா மறைவுக்கு இரங்கல் தெரிவித்து உள்ளார். டுவிட்டர் இணையத்தளத்தில் அவர் கூறுகையில், நெல்சன் மண்டேலாவைச் சந்தித்த நாள் என் வாழ்க்கையில் ஒரு போதும் மறக்க முடியாத ஒன்றாகும். அவர் உண்மையான தூண்டுதல் மனி தர் ஆவார் என்றும் அவர் எப்போதும் எனது மனதில் வாழ்வார் எனவும் கூறியுள்ளார்.

இதேபோல குத்துச் சண்டை ஜாம்பவான் முகமது அலி, உதைபந்து ஜாம்பவான் பீலே, கோலப் வீரர் ரைகர் உட்ஸ், சர்வேதேச உதைபந்தாட்டச்சம்மேளனத் தலைவர் பிளட்டர் ஆகியோரும் மண்டேலா மறைவுக்கு இரங்கல் தெரிவித்து உள்ளனர்.

தற்போது நடைபெற்று வரும் இந்தியா-தென்னாபிரிக்கா இடையேயான தொடரை அவருக்கு அர்ப்பணிப்பு செய்வதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தை இலகுவில் வென்றது ஆஸ்திரேலியா



ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஆஷஷ் போட்டிகளில் பங்குபற்றிவரும் இங்கிலாந்து அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி இலகுவான வெற்றியைப் பெற்றுள்ளது.

அடிலெய்ட் ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்றிருந்த ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்திருந்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி மைக்கல் கிளார்க்கின் 148 ஓட்டங்கள், பிரட் ஹடினின் 118 ஓட்டங்கள், கிறிஸ் றொஜர்ஸின் 72 ஓட்டங்கள், றயன் ஹரிஸின் ஆட்டமிழக்காத 55 ஓட்டங்கள், ஜோர்ஜ் பெய்லியின் 53 ஓட்டங்கள், ஷேன் வொற்சனின் 51 ஓட்டங்களின் துணையோடு 9 இலக்கு களை இழந்து 570 ஓட்டங் களைப் பெற்றது.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்ருவேர்ட் ப்ரோட் 3 இலக்குகளையும், கிறேம் ஸ்வான், பென் ஸ்ரோக்ஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும், ஜேம்ஸ் அன்டர்சன், மொன்ரி பனசர் இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சார்பாக இயன் பெல் ஆட்டமிழக்காது 72 ஓட்டங்களையும், மைக்கல் காபெரி 60 ஓட்டங்களையும் பெற, ஏனைய வீரர்கள் தடுமாற, அவ்வணி 172 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக மிற்சல் ஜோன்சன் 7 இலக்குகளையும், நதன் லயன், பீற்றர் சிடில், ஷேன் வொற்சன் மூவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

ஃபொலோ ஒன் முறையில் இங்கிலாந்தை துடுப்பெடுத்தாடப் பணிக்காது, தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 3இலக்குகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்று தனது இனிங்ஸை இடைநிறுத்தியது.

அவ்வணி சார்பாக டேவிட் வோர்ணர் ஆட்டமிழக்காது 83 ஓட்டங்களையும், ஸ்டீவன் ஸ்மித் ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களையும், மைக்கல் கிளார்க் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அன்டர்சன் 2 இலக்குகளையும், மொன்ரி பனேசர் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

531 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 312 ஓட்டங்களுக்குச் சகல இலக்கு களையும் இழந்து 218 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஜோறூட் 87 ஓட்டங்களையும், மற் பிரயர் 69 ஓட்டங்களையும், கெவின் பீற்றர்சன் 53 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பீற்றர் சிடில் 4 இலக்குகளையும், றயன் ஹரிஸ் 3 இலக்குகளையும், மிற்சல் ஜோன்சன், நதன் லயன், ஸ்டீவன் ஸ்மித் ஆகியோர் தலா ஒரு இலக் கையும் கைப்பற்றினர். இப் போட்டியின் நாயகனாக ஆஸ்திரேலியாவின் மிற்சல் ஜோன் சன் தெரிவானார். 5 போட்டி கள் கொண்ட இத்தொடரில், 2 போட்டிகளின் நிறைவில் அவுஸ்திரேலிய அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக் கின்றமை குறிப்பிடத் தக்கது.

(த-400)

# ஆப்கானிஸ்தானை வென்றது பாக்.




ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற்ற பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஒற்றை 20/20 சர்வதேசப் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றுள்ளது.

ஷார்ஜா கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 20பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது.

3 ஓட்டங்களுக்கு முதலாவது இலக்கை இழந்த அவ்வணி, 2 ஆவது இலக்கை 7 ஓட்டங்களுக்கே இழந்தது. 4 ஆவது இலக்குக்காக 35 ஓட்டங்களும், இறுதி நேரத்தில் பெறப்பட்ட சிறிய சிறிய இணைப்பாட்டங்களும் அவ்வணி 137 ஓட்டங்களைப் பெற உதவின.

துடுப்பாட்டத்தில் ஆப்கானிஸ்தான் அணி சார்பாக நஜிபுல்லா சத்ரன் 30 பந்துகளில் 38 ஓட்டங்களையும், மிர்வய்ஸ் அஷ்ரப் 22 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக ஜுனைட் கான் 3 இலக்குகளையும் , சொஹைல் தன்வீர் 2 இலக்குகளையும், சுல்பிகர் பாபர், பிலாவல் பற்றி, ஷகிட் அப்ரிடி ஆகியோர் தலா ஒரு கைப்பற்றினர். தவிர, மொஹமட் ஹபீஸ் 4 பந்துப் பரிமாற்றங்களில் 13 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத் தார்.

138 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 19.5 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முதலாவது இலக்குக்காக 49 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, தொடர்ந்தும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. ஆனால் இறுதி நேரத்தில் ஓட்டங்களைப் பெறத் தடுமாறிய அவ்வணி, இறுதி 8 பந்துகளில் 12 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், இறுதி ஓவரின் 5ஆவது பந்தில் வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக மொஹமட் ஹபீஸ் 37 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களையும், அஹமட் ஷெஷாத் 37 பந்துகளில் 35 ஓட்டங்களையும், உமர் அக்மல் 23 பந்துகளில் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆப்கானிஸ்தான் அணி சார்பாக மொஹமட் நபி, தவ்லட் சட்ரன், சமியுல்லா ஷென் வரி ஆகியோர் தலா ஒரு இலக்குகளைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக பாகிஸ்தான் அணியின் தலைவர் மொஹமட் ஹபீஸ் தெரிவானார்.

(த - 400)

# துடுப்பாட்டம் மோசம்



இந்திய கிரிக்கெட் அணியின் தென்னாபிரிக்க பயணம் தொடர்ந்து ஏமாற்றம் அளித்து வருகிறது. இந்த முறையும் டோனி தலைமையிலான இந்திய அணி ஒருநாள் தொடரை இழந்தது. 3 போட்டிகள் கொண்ட தொடரில் ஜோகன்னஸ் பேர்க்கில் நடந்த முதல் ஆட்டத்தில் 141 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்றது.

இந்த தோல்வி குறித்து இந்திய அணித் தலைவர் டோனி கூறியதாவது:

முதல் போட்டியில் பந்து வீச்சாளர்களால் தோல்வி ஏற்பட்டது. முதல் போட்டியில் இருந்து அவர்கள் பாடம் கற்று 2 ஆவது போட்டியில் சிறப்பாக பந்து வீசினார்கள்.

ஆனால் 2 ஆவது போட்டியில் துடுப்பாட்ட வீரர்கள் மோசமாக விளையாடியதால் தோற்றோம். எமது வீரர்கள் ஆடிய விதமே சரியில்லை என்று தான் என்னால் சொல்ல முடியும். முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் எளிதில் ஆட்டம் இழந்து விடுவதால் நெருக்கடி ஏற்பட்டு விடுகிறது.

ஒரு தொடரை வைத்து முடிவு செய்யவில்லை. துடுப்பாட்டம் மோசமாக இருப்பதை ஒப்புக் கொள்கிறேன். தோல்வியை பற்றி கவலைப் படவில்லை. அதில் இருந்து பாடம் கற்றுக் கொள்ளவதே முக்கியமானது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

(த-400)

SAAMSON
Language School
SPOKEN ENGLISH
அரச,தனியார் ஊழியர்கள்,பல்கலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்கள் கூட எமது பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
சனி,ஞாயிறு பிரிவு ஆரம்பம் 14.12.2013 சனிக்கிழமை
பிரிவு:4 03.00-05.00
3 மாதத்தில் எவராவது சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.
பல்லாயிரக்கணக்கான மாணவர்களும் ஆசிரியர்களும் படித்து பயன்பெற்ற பாடநெறி.
SAAMSON 270, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்ப்பாணம். 077 621 4567

40 ஆவது வருட கல்விச் சேவைதனில் முன்னோக்கி
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
புதிய கல்வியாண்டு -2014
தரம் 6 தொடக்கம் O/L வரை
Evening Batch
ஆரம்பம்: 12.12.2013 மாலை 3 மணி
★புதிய அனுமதிகளை அலுவலகத்தில் பெறவும்.

BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpuliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
Batch : 10.12.2013
Batch : 14.12.2013
Batch : 16.12.2013
Batch : 21.12.2013
கிழமை நாட்கள், பிற்பகல் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், உங்களின் அனுமதிகளுக்கு முந்துங்கள்.

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் கந்தசாமி

(முன்னாள் பொலிஸ் அதிகாரி I.P பயிற்சிக் கல்லூரி, களுத்துறை)



அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், தருந்து கயானின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2013) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.